
# போதனைப் பொக்கிஷம்

## இஸ்லாமியக் கட்டுரைகள்







மௌலவி காத்தான்குடி பௌஸ்
(ஷர்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனைப் பொக்கிஷம்

மித்திரன் வாரமலர்
இஸ்லாமியக் கட்டுரைகள்
பகுதி (II)

## மௌலவி காத்தான்குடி பௌஸ்
## (ஷர்கி)

வெளியீடு,
நியு ஸன்-ரைஸ் விளையாட்டுக் கழகம்
கெசெல்வத்தை,
பாணந்துறை.
(பதிவு இல. 030 306)

அல்முபாறக் குர்ஆன் மத்ரஸா
ஹேனமுல்லை,
பாணந்துறை.
(பதிவு இல. MRCA 13/1/KT/25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Title** | : | POTHANAI POKKISHAM |
| **Subject** | : | Islamic Essay Collection |
| **Author** | : | Moulavi Kattankudy Fouz<br>"Zaini Manzil"<br>23/6, Wattalpola Road,<br>Henamulla, Panadura. |
| **Publisher** | : | New Sun Rise Sports Club &<br>AL / Mubarak Quran Madrasa<br>Panadura. |
| **Number of Pages** | : | 104 |
| **Size** | : | 5.5" x 8.5" |
| **Font Size** | : | 11 pt. |
| **Paper** | : | 70 gsm |
| **Copies** | : | 300 |
| **First Edition** | : | 19 FEB 2006 |
| **Typeset & Coverpage Design by** | : | A. H. Ahamed Aslam<br>"Visual Computer System"<br>No. 391, School Road,<br>Henamulla, Panadura. |
| **Print by** | : | Thisara Printers -<br>Gorakana, Moratuwa.<br>Tel. : 038-2297228 |
| **Copy right** | : | Reserved |
| **Prize** | : | 150/= |






# சமர்ப்பணம்

வெள்ளக்காவியம்
சூட்டுக்கோல்
நூல்களின் ஆசான் காத்தான்குடி
எம்.ஐ. தாவுத் ஷா அவர்களுக்கும்;
இலக்கியத்துள் புகுந்து அரசியலில்
இமையமாகிப் போன தலைவர்
எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கும்;
எழுத்தை வாழ்வாக்கிய திக்குவெல்லை
எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்களுக்கும்;
பாணந்துறை தொட்டவத்தை
எழுத்தாளர்
மௌலவி எஸ்.எம்.எம். முஸம்மில்
அவர்களுக்கும் இந்நூல்

சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

எந்தப் படைப்பாளிக்கும் ஓர் ஏக்கம் இருக்கும் தன்னுடைய படைப்பு வீணாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று. அந்த வகையில் பௌஸ் மௌலவி விதிவிலக்கானவர் அல்ல. மித்திரன் வாரமலரில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக மார்க்க விடயங்களை துணிச்சலாக எழுதுவது யாவரும் அறிந்ததே. அவை பத்திரிகையோடு மட்டுப்படாமல் நூல் வடிவில் மக்கள் மத்தியில் சென்று பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவரின் எண்ணம் இன்று நிறைவேறுகின்றது. வாழ்த்துக்கள்.

பௌஸ் மௌலவி பேச்சாற்றல் மிக்கவர். அத்தோடு கவிதைகளையும் படைப்பவர். நானொரு இந்துவாக இருந்தபோதிலும் இஸ்லாம் மார்க்கத்தில் அதீத ஈடுபாடு கொண்டவன். அந்த ஈடுபாட்டின் காரணமாக இஸ்லாம் மார்க்கத்தை விரும்பிப் படிக்கலானேன். நான் இஸ்லாத்தை ஒரு மதமாகப் பார்க்கவில்லை. அது ஒரு புனித மார்க்கம். மனிதன் எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்பதை தெட்டத்தெளிவாக கூறும் ஓர் உன்னத மார்க்கம். புனித மார்க்கத்தை மதம்பிடிக்க வைக்கக்கூடாது என்று எண்ணுபவன் நான். என்னுடைய இஸ்லாம் மார்க்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு பதில் சொல்லித் தந்தவர் எனது ஆசான் பௌஸ் மௌலவி அவர்கள். என்னைப்போல் இஸ்லாம் மார்க்கத்தை அறியத் துடிப்பவர்கள் ஏராளமாக இருக்கலாம். அவர்களின் பசிக்கு இந்நூல் ஒரு சிறந்த தீனியாக அமையும் என்பதில் எதிர்வாதமில்லை.

இஸ்லாத்தை அறிய விரும்புவர்களுக்கு தகுந்த விளக்கத்துடன் தொடர்ந்து எழுதுபவர் மௌலவி காத்தான்குடி பௌஸ். இவரது ஆக்கங்கள் பலரது ஞானக் கண்களை திறந்து வைத்திருக்கின்றது. இதற்குச்சான்று எமது காரியாலயத்திற்கு வருகின்ற ஏராளமான கடிதங்கள். இறைவன் கொடுத்த கொடை அவரது எழுத்து, பேச்சாற்றல். அந்தக்கொடையை வீண்விரயம் செய்யாமல் மார்க்க வழிகாட்டலுக்காகப் பயன்படுத்தும் முயற்சி பாராட்டுக்குரியது.





**"போதனைப் பொக்கிஷம்"** என்ற இந்நூல் மக்கள் மத்தியில் இன்ஷா அல்லாஹ் நல்ல வரவேற்பைப் பெறும் என நம்புகின்றேன். இந்நூலை முஸ்லிம்கள் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழ் தெரிந்தவர்களும் படித்துப் பயன்பெற வேண்டும். **"போதனைப் பொக்கிஷம்"** காலத்தின் பொக்கிஷமாகத் திகழ என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்,
**திரு. ஏ.பீ. மதன்**
உதவி ஆசிரியர்,
மித்திரன் வாரமலர்,
(எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ்)
சிலோன் லிமிட்டட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கிழக்கு மாகாணத்தின் முதுபெரும் முஸ்லிம் கிராமமான நூற்றுக் கணக்கான உலமாக்களை உருவாக்கிய காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மௌலவி அல்ஹாஜ் யூ.எல்.எம். பௌஸ் சிறுவயது முதலே இலக்கியத்துறையில் தீராத ஆர்வம் கொண்டவர்.

ஓர் ஆலிமாக இருந்துகொண்டு எழுத்துத்துறையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பணிசெய்து வரும் இவர், காத்தான்குடி பௌஸ் என்ற பெயரில் பிரபல்யம் பெற்ற எழுத்தாளரும் பேச்சாளரும் ஆவார்.

கட்டுரை, கவிதை, உரைச்சித்திரம், வில்லுப்பாட்டு, கதை போன்ற வற்றை எழுவதுவதோடு, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் இஸ்லாமிய உரைகளை நிகழ்த்துவதிலும் பெயர்பதித்துள்ள மௌலவி அல்ஹாஜ் பௌஸ் 1974 களிலிருந்து இன்றுவரை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துத்துறையில் அரும்பணி புரிந்து வருகிறார். இஸ்லாமிய வரையறைக்குள் இருந்து தம் எழுத்துக்களை எப்போதும் எழுதிவரும் மௌலவி பௌஸ் 1978 முதல் பல வருட காலம் தினகரன் நாழிதலின் காத்தாக்குடியின் செய்தியாளராக பணியாற்றி ஊடகத்துறைக்கும் பங்களிப்புச் செய்தவர் ஆவார்.

தான் எழுதும் மற்றும் சொல்லும் விடயத்தை மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகு மொழியில் சொல்லும் சிறப்பான ஆற்றல் மௌலவி பௌஸுக்கு இருப்பதனால் வாசகர்களது அபிமானத்தை அவர் பெற்றுள்ளார். காலத்திற்குரிய அழகான உதாரணங்களை அருமையான உவமையங்கள் அவரது ஆக்கங்களில் ஆதிக்கம் செலுத்துவதை என்னால் அவதானிக்க முடியுமாக உள்ளது.

அடிக்கடி பத்திரிகையில் ஆணித்தரமான கட்டுரைகளை எழுதி வரும் மௌலவி பௌஸ் மித்திரன் வாரமலரின் எழுதிய இஸ்லாத்தின் பாதையில் என்ற கட்டுரைகள் சிறந்த தலைப்புக்களில் மக்கள் முன் **“போதனைப் பொக்கிஷம்”** என்ற தலைப்பில் முன்வைக்கப்பட் டுள்ளது. முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் படித்துக்





கொள்ள வேண்டிய பல அருமையான விடயங்களை நிகழ்கால உதாரணங்கள் மூலம் உள்ளடக்கித் தந்துள்ளார். இஸ்லாத்தைப் பற்றி முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதோரும் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்ற இக்கால கட்டத்தில் கூடுதலான தமிழ் வாசகர்களைக் கொண்ட மித்திரன் வாரமலரில் தொடர்ச்சியாக 40 கட்டுரைகள் வெளிவருவது என்பது இவரது எழுத்துலகின் மதிப்புக்கு சிறந்த உதாரணமாகும்.

ஓர் இமாம் என்ற வகையில் மௌலவி பௌஸ் தன் பணியை இறையில்ல வட்டத்திலிருந்து விசாலப்படுத்தி முழு நாட்டு மக்களும் நுகரக்கூடிய வகையில் இந்த நூலினை வெளியிடுவது விசேடமாகப் பாராட்டப்பட வேண்டியதாகும். தனக்கு இருக்கின்ற ஆழமான அரபு அறிவினையும் பயன்படுத்தி மௌலவி பௌஸ் தன் பங்களிப்பினைச் செய்துள்ளார். இதுபோன்று மேலும் பல ஆக்கங்களை வெளியிடு வதற்கு இந்த நூல் ஆசிரியருக்கு வசதியும் வாய்ப்பும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்,
**அல்ஹாஜ் என்.எம். அமீன்**
முகாமைத்துவ ஆசிரியர் - தினகரன்,
தலைவர் - முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்கா
தலைவர் - அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்
தலைவர் - ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

மித்திரன் வாரமலரில் முஸ்லிம் நெஞ்சங்களின் முத்திரை பதித்தவர் காத்தான்குடி பௌஸ் என்று குறிப்பிடலாம். சிறந்த மிம்பர் பிரசங்கியாக; கவிஞராக; எழுத்தாளராக ஏற்கனவே அறிமுகமானவர். என்னுடைய இனிய நண்பர். காலத்தின் தேவையை கருத்திற்கொண்டு வாரந்தோறும் மித்திரனில் எழுதிவந்தார். பல வாரங்கள் தொடர்ச்சியாக வடித்த கட்டுரைகளைத் தொகுத்து **"போதனைப் பொக்கிஷம்"** எனும் தலைப்பில் தந்துள்ளார்.

ஆரம்பத்திலிருந்து கடைசிவரை படித்தவர்கள் சிலவேளை சில விஷயங்களை மறந்திருக்கவும் கூடும். அதனை மீட்டிக்கொள்ள இத்தொகுப்பு நூல் வழிவகுக்கும் என்பதோடு பாதுகாத்துப் படிக்கக் கூடியதாகவும் அமையும் எனலாம்.

1974ம் ஆண்டு முதல் எழுத்துத்துறையில் கால்பதித்து கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். பேராசிரியர் அல்லாமா உவைஸ் அவர் களின் அபிமானத்தையும் நற்பையும் பெற்றுக்கொண்டார். பேராசிரி யரின் மணிவிழா மலருக்குச் சிறப்புக் கவிதை தந்து சிறப்பித்தவர் பௌஸ் மௌலவி. இவரின் எழுத்துத்துறையை கௌரவித்து கலா ஜோதி, தத்துவ வித்தகர் ஆகிய பட்டங்களையும் விருதுகளையும் வழங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இதுபோன்ற பல ஆக்கங்களை வெளிக்கொணர இறைவன் இவருக்கு அருள்புரிவானாக.

இவ்வண்ணம்,
**கலாபூஷணம் பதுளை சாரணா கையூம்**
இலக்கிய மாமணி, தமிழ்மணி, இலக்கியச் சுடர்,
கவித்தாரகை





## சிறப்புரை

ஆக்க இலக்கியம் செய்யும் ஆற்றல் இறைவனால் வழங்கப்படும் ஒரு பெரும் கொடையாகும். இது மிகச்சிலருக்கே கிட்டும். அதிலும் அந்த ஆற்றலைப் பயன்கொண்டு வெற்றிபெறுவோர் சிலரேயாம். மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் இலக்கியத்தின் பல துறைகளில் கால்பதித்து இன்று உலகில் பேசப்படும் ஒருவராகத் திகழ்கின்றார். 1974ம் ஆண்டிலிருந்து தொடங்கும் இவரின் எழுத்துப் பணி, கட்டுரை, கவிதை, உரைச்சித்திரம், வில்லுப்பாட்டு, சிறுகதை எனத்தொடர்கிறது.

வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களில் இஸ்லாமியச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதோடு, கருத்துரங்குகளிலும் கவியரங்குகளிலும் பங்குகொண்டு சிறப்பித்துள்ளார். வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இவரது பங்களிப்புக்களை நான் கேட்டும், பார்த்தும் மகிழ்ந்திருக்கின்றேன்.

மித்திரன் வாரமலரில் இஸ்லாத்தின் பாதையில் என்ற தலைப்பில் தொடர்ச்சியாக இவரது நாற்பது கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டு வந்தமை இவர் தம் எழுத்து முயற்சியின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். காலத்தின் தேவையை உணர்ந்து சமுதாய முன்னேற்றம் கருதி காத்திரமான ஆக்கங்களை இவரது பேனா முனை பேசுகின்றது. **"போதனைப் பொக்கிஷம்"** எனும் இந்நூல் இஸ்லாமிய வாழ்வில் தத்துவங்களைப் போதிக்கும் ஒரு இலக்கியப் பேழையாகும். ஆளுமை மிகுந்த சிறந்த ஆக்கஇல்க்கியகர்த்தாவான மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் பணி தொடரவும் அவை சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு உதவ வேண்டுமென இறைவனை வேண்டி அவரை வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்,
**கவிஞர் டாக்டர் ஜின்னா ஷரீபுத்தீன்**
இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

எந்தவொரு இலக்கியப்படைப்பின் செயற்பாடாக இருப்பது ஒரு கருத்தை மக்களின் மனதில் பதிய வைப்பதாக இருக்கும். அதிலும் ஒரு மார்க்க அறிஞர் பல்வேறு தளங்களில் ஆற்றும் பயான்கள், எழுதும் படைப்புக்கள், தான் சொல்ல நினைத்த கருத்து எந்த வகை சமூகக் கூட்டத்தினருக்குப் போய்ச் சேர வேண்டும் என எண்ணுகின்றாரோ அக்கூட்டத்தினருக்கு அக்கருத்துக்கள் போய்ச் சேர அவ்வறிஞர் கையாளும் மொழிநடை மிகுந்த பங்கினை வகிக்கும்.

எந்த மார்க்க அறிஞர்கள் தாம் சார்ந்திருக்கும் மொழியில் தேறிய அறிவும் தகைமையும் பெற்றிருக்கின்றார்களோ அத்தகைய அறிஞர்களின் கருத்துக்களே அம்மொழி சமூகக் கூட்டத்தினர் மத்தியில் பரவி அவ்வறிஞர்களை அம்மக்கள் மத்தியில் பரவலாக அறியவைத்து அடையாளப்படுத்தி வந்திருப்பதை நாம் அறிவோம். அவ்வாறான அடையாப்படுத்தப்பட்ட ஓர் மார்க்க அறிஞராக அறியப்பட்டவர்தான் தத்துவ வித்தகர் மௌலவி காத்தான்குடி பௌஸ் ஷர்கி அவர்கள்.

அவ்வாறான ஒரு முறையில் நண்பர் காத்தான்குடி பௌஸ் அவர்கள் அறியப்பட்டதற்குக் காரணம் அவர் மக்களுக்கு சொல்ல எடுத்துக்கொண்ட விடயங்கள சொல்லுகின்ற முறைமையில் வெளிப்படும் கவித்துவமும் இலக்கியநயமுமே காரணம் எனலாம். இதுவே அவரது தனித்துவமாக இருக்கின்றது. இத்தனித்துவமே மக்களுக்கு மார்க்க விடயங்களை எடுத்துச்சொல்லுகின்ற முறையில் மற்ற மார்க்க அறிஞர்களிடமிருந்து இவரைத் தனித்து காட்டுகின்ற அம்சமாக இருக்கின்றது.

நண்பர் காத்தான்குடி பௌஸ் அவர்களின் **"போதனைப் பொக்கிஷம்"** எனும் இத்தொகுப்பில் அடங்கியுள்ள ஆக்கங்கள் மேற்குறித்த பிரக்ஞையுடன் ஆக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அவ்வாக்கங்களை ஆழமாகப் படிக்கின்ற பொழுது உறுதியாகின்றது. ஒரு செய்தியாளரோ அல்லது ஒரு ஆராய்ச்சியாளரோ அல்லது ஒரு விமர்சகரோ அல்லது நமது பெரும்பாலான மார்க்க





அறிஞர்களோ ஒரு விடயத்தைப் பற்றி எடுத்துச்சொல்லும் பொழுதோ தாம் எடுத்துக்கொண்ட விடயம் சார்ந்த தரவுகளுடனோ தகவல்களு டனோ தம் ஆக்கங்களை முடித்துக்கொள்வர். ஆனால் ஓர் இலக்கி யப் படைப்பாளியைப் பொறுத்தவரை ஒரு விடயத்தை சொல்ல முனையும் பொழுது தாம் எடுத்துக்கொண்ட விடயம் சார்ந்த உணர்ச்சி நிலைகளையும் உணர்வுக் கோலங்களையும் இணைத்துச் சொல்லும் பொழுது அவ்விடயமானது அதனை உள்வாங்குகின்றவர் களின் மனங்களில் ஆழமாய்ப் பதிந்து விடுவதோடு அவ்விடயம் முன்வைக்கப்படுகின்ற நோக்கமும் தாக்கபூர்வமான நிலையில் நிறைவேறுகிறது.

நண்பர் காத்தான்குடி பௌஸ் அவர்களின் இத்தொகுப்பில் அடங்கியுள்ள பெரும்பாலான ஆக்கங்களில் இத்தன்மை விரவி இருப்பதை நம்மால் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் இயல்பிலேயே இவர் ஒரு கவிஞராக இருப்பதுதான். அதன் காரணமாக இவரது எல்லா ஆக்கங்களிலும் கவித்துவமும் இலக்கிய நயமும் விரவி மார்க்க அறிஞர் என்ற தளத்தில் நின்று அவர் சொல்ல முனைந்துள்ள விடயங்கள் அவ்விடயங்களை உள் வாங்குவோரின் மனதில் ஆழமாய்ப் பதிய கணிசமான பங்களிப்பை ஆற்றுகின்றன என்பதே என் எண்ணம். ஒரு மௌலவி கவிஞரால் எழுதப்பட்ட பயான்களாக உருப்பெற்றிருக்கும் நண்பர் தத்துவ வித்தகர் மௌலவி காத்தான்குடி பௌஸ் ஷர்கி அவர்களின் இவ்வாக்கங்கள்.

இன்று நாம் வாழும் காலகட்டத்தின் சமூக, அரசியல், பொருளாதா ரம் போன்ற தளங்களுக்கான அக்கறைகளுடனும் பிரக்ஞையுடனும் ஆன்மீக வழியாகத் தேவைப்படுகின்ற மேலதிகமான தெளிவுகளை உள்ளடக்கிய ஆவணங்களாகத் திகழ்கின்றன என்பது மிகையான கூற்று ஆகாது.

இவ்வண்ணம்,
**கவிஞர் மேமன் கவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

பாணந்துறை ஹேனமுல்லை அல்-மஸ்ஜிதுல் முபாறக் ஜும்ஆப் பள்ளியின் கதீபாக கடமையாற்றுவதோடு கடந்த பல ஆண்டுகளாக இஸ்லாமிய இலக்கியப் பணியில் வெகுசிரத்தை காட்டி வரும் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் அயராத முயற்சியி-னால் எழுதப்பட்டு வெளியிடப்படும் **"போதனைப் பொக்கிஷம்"** எனும் இந்நூலை பாணந்துறை நியு சன்-ரைஸ் விளையாட்டுக் கழகத்தினால் வெளியிட்டு வைப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம். வாங்கிப் படிப்போம். அதன்படி செயல்படுவோம்.

இவ்வண்ணம்,

**தலைவர்** - ஏ.பி.எம். அத்னான்

**உதவித் தலைவர்கள்** - எம்.ஜே.எம்.பவாஸ் - எம்.எஸ்.ஏ. ருஸ்தி

**செயலாளர்** - எம்.எஸ்.பி. ஹாபி

**உதவிச் செயலாளர்** - எம்.ஜே.எம். முனாஸ்

**தனாதிகாரி** - எம்.எஸ்.ஏ. சித்தி

**உதவித் தனாதிகாரி** - எம்.ஆர்.எம். யாசிர்

**கழகத் தலைவர்** - எம்.எஸ்.எம். காமில் - எம்.ஆர்.எம். ரியாஸ்

**மைதானச் செயலாளர்** - ஏ.ஐ.எம். நிஹ்மான்

---

**"போதனைப் பொக்கிஷம்"** என்ற நூல் எழுதப்பட்டுவிட்டது என்ற செய்தி கிடைத்தவுடன் நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். காரணம் எங்கள் ஊர் பாணந்துறை ஊர்மனை அல்முபாறக் ஜும்ஆ பள்ளியில் பேஷ் இமாமாக கடமையாற்றும் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் எமது பள்ளியினால் நடாத்தப்படும் மத்ரஸாவையும் தலைமை தாங்கி நடாத்துகின்றார். அந்த சேவையாளரின் இந்நூலை எமது அல்முபாறக் குர்ஆன் மத்ரஸா நிர்வாகம் வெளியிட்டு வைப்பதில் பெருமையடைகின்றது. இதனை அனைவரும் வாங்கி வாசிப்போம். இன்ஷா அல்லாஹ்.

இவ்வண்ணம்,

**தலைவர்** - எம்.ஆர்.எம். யாசிர்

**செயலாளர்** - ஏ.எச். அஸ்லம்

**தனாதிகாரி** - ஏ. காதர் (மாமா)

**ஆலோசகர்கள் (டிரஸ்டீஸ்)**

அல்ஹாஜ் எம்.யூ.எம். யுஸ்ரி

அல்ஹாஜ் எம்.ஜே.எம். புவாட்

அல்ஹாஜ் பி.எம். இஸ்மாயில்

அல்ஹாஜ் எஸ்.எம். இஸ்மாயில்

எம்.எம். பைசர் மஹீன்





# என்னுரை

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!**

மித்திரன் வாரமலர் என்றால்.... இலங்கையில் ஆகக்கூடிய விற்பனை. ஆயிரக்கணக்கான வாசகர்கள். கதை, நாவல், சினிமா, வாழ்க்கைக் குறிப்பு, சமையல், தையல், பிறமொழிப் பயிற்சி என்று வாசகர்கள் வாசிக்கத்தொடங்கியதுதான் இஸ்லாமிய சமயம் சம்பந்தமான பகுதியை ஆரம்பித்து இஸ்லாமிய வாசகர்களுக்குக் களம் அமைக்க மித்திரன் தலைமைபீடம் முடிவு செய்தது.

முஸ்லிம்களைப் பற்றி நல்ல அபிப்பிராயமும் இஸ்லாமிய சிந்தனையை மக்கள் மத்தியில் முன்வைக்க வேண்டும் என்ற சிறந்த எண்ணமும் படைத்த மித்திரன் பிரதம ஆசிரியர் திரு. வி. தேவராஜ் அவர்கள் மித்திரன் வாரமலரில் இஸ்லாத்தின் பாதையில் என்ற பகுதியை ஆரம்பித்தார்கள். இப்பகுதி சிறப்புற நடாத்துவதற்கு உந்துசக்தியாக அமைந்தவர் மித்திரன் உதவி ஆசிரியர் கௌரவ திரு. ஏ.பி. மதன் அவர்கள்.

இஸ்லாத்தைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்ட திரு. மதன் அவர்கள் எப்போதும் முஸ்லிம் மாணவர்களுடனேயே பழகுவார். பொது நோக்குடையவர். குணத்தின் குன்று. திரு. மதன் அவர்கள் எனக்கு மாணவனும் கூட. மாத்திரமல்ல பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் அவர் மாணவனாக இருக்கும் காலத்தில் எனது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு வில்லுக்கட்டித் தந்தவரும் அவரே. எனது புலமைகளைப் புரிந்துகொண்ட அவர் மித்தரனில் இஸ்லாமியக் கட்டுரைகளை எழுதும்படி என்னை வேண்டிக் கொண்டார். தட்டமுடியாமல் நானும் சம்மதித்தேன். அதன் பின்னால் இன்றுவரை எழுதிவருகின்றேன். எனது தலைப்புக்களை எந்த மாற்றமும் இல்லாமல் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பார். ஆகையால் மித்திரன் பிரதம ஆசிரியர் திரு. வி. தேவராஜ் அவர்களுக்கும் உதவி ஆசிரியர் திரு. மதன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எனது இஸ்லாமியக் கட்டுரைகளுக்கு ஏகப்பட்ட வரவேற்பு கிடைத்தன. தபால் அட்டைகளும், தொலை பேசிகளும் வாசகர்களிடமிருந்து அடிக்கடி என்னை உற்சாகப்படுத்தும். அனைவருக்கும் எனது நன்றிகள். மித்திரனில் வெளிவந்த எனது முதல் நாற்பது கட்டுரைகளை **"மார்க்கத்தின் மனக்கதவு"** எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் நூலுருவில் கொண்டுவந்தேன். அதன் பின்னர் இன்னும் நாற்பது கட்டுரைகளை **"போதனைப் பொக்கிஷம்"** எனும் தலைப்பில் இதோ உங்கள் முன் தந்துள்ளேன். இந்நூலுக்கு முகவுரை தந்த மித்திரன் உதவி ஆசிரியர் ஏ.பி. மதன் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய நீண்டகால நண்பரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத் தலைவரான அல்ஹாஜ் என்.எம். அமீன் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய ஆத்மநண்பர் கலாபூஷணம் கவிஞர் பதுளை சாரணா கையூம் அவர்களுக்கும் சிறப்புரை வழங்கிய சிறந்த இலக்கிய மேதை புலவருக்குப் பிறந்த புலவர் டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களுக்கும் மதிப்புரை வழங்கிய மேமன் சங்க கவிப்புனல் என் அன்புக்குரிய மேமன் கவி அவர்களுக்கும் நன்றிகள்.

இந்நூலை வெளியிட முன்வந்த பாணந்துறை நியூ சன்ரைஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பாணந்துறை ஊர்மனை அல்முபாறக் குர்ஆன் மத்ரஸா நிர்வாகிகளுக்கும் நூலின் பின்அட்டை அறிமுகத்தை வழங்கிய இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை நடைமுறைப் பணிப்பாளர் நட்பின் இலக்கனமானவர் அல்ஹாஜ் எம்.இஸட். அஹமட் முனவ்வர் அவர்களுக்கும் இந்நூலில் புகைப்பட அறிமுகங்களைச் செய்த இளம் எழுத்தாளர் முனாஸ்கனி அவர்களுக்கும் அட்டை வடிவமைப்பு முதல் அனைத்து கட்டுரைகளையும் கணனி வடிவமைத்த ஐ.ரி.என். தொலைக்காட்சி தமிழ் செய்தி கணனியாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில செய்திப் பிரிவு கணனியாளருமான என் அருமை மாணவன் ஏ.எச்.அஹமட் அஸ்லம் அவர்களுக்கும் அச்சிட்டுத் தந்த அச்சகத் தார் திசர பிரின்டர்ஸ் உரிமையாளர் திரு. திசர அவர்களுக்கும் இந்நூல் விடயத்தில் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்ட என் துணைவியார் ஹாஜியானி என். றிபாயா, மகன் அல்ஹாஜ் முஹம்மது ஸைனி ஆகியோருக்கும் இந்நூலை வாங்கி வாசிக்கும் அனைவருக்கும் பிரார்த்திக்கின்றேன். எனது முயற்சியை இறைவன் அங்கீகரித்தருள்வானாக! ஆமீன்.

இவ்வண்ணம்,
**மித்திரன் இஸ்லாத்தின் பாதையில் பகுதியை மறக்காத புத்திரன்**
**- மௌலவீ காத்தான்குடி பௌஸ்**
23/6, ஸைனி மன்ஸில்,
வத்தல்பொல வீதி, ஹேனமுல்லை,
பாணந்துறை.





## பொருளடக்கம்


- வர்ணனை வார்த்தைகளில் வட்டி இருந்தால் வாங்கவும் கொடுக்கவும் ஹலாலாகுமா? 01
- மனமுடையப் பேசி பாதிப்பதை விடுத்து குணமுடைய பேச்சில் குணம் கொள்வோம் 03
- நோயுற்றவர்களை விசாரிப்பதில் ஈமானின் நூரை பிரகாசத்தைக் காணலாம் 05
- மதியாதார் தலைவாசல் மிதியாதே 07
- அண்ணல் நபி மீது ஸலவாத்துச் சொன்னால் அவர்களைச் சென்றடைவது உண்மையா? 09
- கடன்காரர்களுக்கு கருணை காட்டுபவன் ஹக்கின் கருணையைப் பெறுவான் 11
- தர்மம் தலை தாக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும் 13
- பெண்கள் கத்னா விவகாரம் பிழையாகப் பேசப்படுவது உண்மையா? 15
- பதவி கேட்டு அடம்பிடிப்பவர்களுக்கு பதவி கொடுப்பது இஸ்லாமாகுமா? 17
- ரபியுல் அவ்வல் வசந்தத்தின் வசந்தம் ரஹ்மத் நபி பிறந்த மாதம் 19
- நீதி உலகில் திசைமாறினால் நிம்மதி குலைவது உண்மை 21
- மனிதகுல மாணிக்கத்தின் மகத்தான குணாதிசயங்கள் 23
- சிறிய பிள்ளைகளின் மரணத்தால் சிந்தித்து சீரழிந்து விட வேண்டாம் 25
- தாமதமாகும் ஜும்ஆ நாள் வரவு தடையங்களை இழக்கும் தார்மீக நஷ்டம் 27
- மனிதனைத் தீயிட்டுக் கொழுத்துவதை மாநபி (ஸல்) ஆதரிக்கவில்லை 29
- செவிக்கெட்டும் செய்திகளைப் பாரமெடுத்தால் சீரழிவின் எல்லைக்கே சென்றடைவோம் 31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பார்வையைப் பக்குவப்படுத்தி பலன்காண சிந்திப்போம் 33
- ஆடம்பரச் செலவுகளால் முஸ்லிம்கள் அழிவுப்பாதைக்கே செல்கிறார்கள் 35
- நகருக்கு வரும் கிராமத்து விவசாயிகளை நடுவே நின்று தடுத்துவிடாதீர்கள் 37
- நாகரீகமாய்ப் பேச நினைத்து நபிவழி மாற வேண்டாம் 39
- விருப்பு வாக்குகளுக்கான ஒப்புதல்கள் விசுவாசியின் ஈமானைப் பாதிக்குமா? 41
- அதான் சொல்லும் முஅத்தின்கள் அந்தஸ்து குறைந்து வாழலாமா? 43
- பாரில் வந்த தீர்க்கதரிசிகளில் பல்லைப் பராமரிக்கச் சொன்ன பயகம்பர் 45
- உலகப்பொது மறை அல்குர்ஆனை ஓதாமல் உதாசீனம் செய்யலாமா? 47
- நிறுவை அளவையில் மோசம் செய்யும் நீதியற்ற வியாபாரத்தை நிறுத்துங்கள் 49
- பிறரைத் திருப்திப்படுத்தச் செய்யும் அமல் பிரயோசனம் இல்லாமல் போவது உண்மை 51
- நீண்டகாலம் உயிர்வாழ நேச நபி சொன்ன நெறி முறை 5?
- தொலைக்காட்சி பார்த்தவண்ணம் உண்ணுவது தூய நபியின் வழிமுறையைத் தொடுமா? 55
- இலாபத்தை எதிர்பார்த்துப் பதுக்குதல் பாவத்தை ஈட்டித்தரும் செயல் 57
- மி.்.ராஜ் தினத்தை மீளாய்வு செய்து மேதினியில் தொழுகையை நிலைநிறுத்துவோம் 59
- பராஅத் இரவில் அமல்செய்து பாவம் நீங்கப் பலன் காண்போம் 61
- ஒழுக்கமில்லாமல் கல்வி கொள்வது உருப்படியான பயனைத் தராது 63







- பொதுக்குளியலறையைப் பாவிப்பவர்கள் புரிந்துகொள்ள இஸ்லாமிய அறிவுரைகள் 65
- அ.்.லன் வஸ.்.லன் யாஸ.்.ர ரமழான் அஸ்ஸலாமு அலைக்க யாஸ.்.ர இஹ்ஸான் 67
- சீர்மையாக ரமழானில் நோற்கும் நோன்பை சினிமா பார்த்துக் கழிப்பது நியாயமாகுமா? 69
- பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடேறுவார் புனித நோன்பு பத்ர் யுத்தப் படிப்பினை 71
- தித்திக்கும் லைலதுல் கத்ர் இரவை தேடியே அடைய வேண்டும் 73
- ஈதுல் பித்ர் இனிய பெருநாள் ஈமானிய உள்ளங்களின் எழுச்சித் திருநாள் 75
- சண்டையிட்டு வாழ்வதை விட ஒன்றுபட்டு வாழ்வதே மேல் 77
- மரண வீட்டில் ஒப்பாரி வைத்து அழுவது மார்க்கத்திற்கு முரணான செயலாகும் 79




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்களோடு.....

### பேசும் நெஞ்சங்கள்.....

அன்பு மித்திரா! விசேடமாக எமது காத்தான்குடி பௌஸ் மௌலவி அவர்களினால் வழங்கப்படும் சன்மார்க்க விளக்கம் மிக மிகப் பயனுடையதாக உள்ளது. அவருக்கு என்றும் என் வாழ்த்துக்கள். தொடர்ந்தும் அவரின் மூலம் மேலும் பல விளக்கங்கள் நம்மை வந்தடைய வேண்டும் என்பதே எமது தேவை.

**நஸீஹா சஹி**
**நிதிமன்றம்**
**மித்திரன் வாரமலர் 07-03-2004**

### பேசும் நெஞ்சங்கள்.....

என் அன்பின் மித்திரனே தத்துவ வித்தகர் மௌலவி காத்தான்குடி பௌஸ் இஸ்லாத்தின் பாதையில் நன்றாக எழுதுகிறார். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏ. றபீகா**
**ஏறாவூர்**
**மித்திரன் வாரமலர் 28-03-2004**

### பேசும் நெஞ்சங்கள்.....

அன்பு மித்திரா! உனது படைப்புகள் தரமானவை. சிறுவர் மனதில் சிறுவர்களுக்கு கொடுக்கும் ஊக்கம் என்றும் சிறப்பானது. மற்றும் இஸ்லாத்தின் பாதையில் வலம் வரும் காத்தான்குடி பௌஸ் (ஷர்கி) தத்துவ வித்தகமும் படுஜோர் இன்று போல் என்றும் நீ வலம் வர உன்னை மனதார வாழ்த்தும் இவன்.

**றபாய்டீன் ஜமால்டீன்**
**சாய்ந்தமருது**
**மித்திரன் வாரமலர் 23-05-2004**





## 41. வர்ணனை வார்த்தைகளில் வட்டி இருந்தால் வாங்கவும் கொடுக்கவும் ஹலாலாகுமா?

வட்டி இன்று உலகம் முழுவதும் ஆட்சிசெய்து கொண்டே இருக்கின்றது. முதலாளித்துவ நாடுகளுக்கு சிறிய நாடுகள் வட்டி கட்டி வாழும் போக்கை காண்கின்றோம். வட்டி பலரகங்களில் பல நிறங்களில் பல சொற்களில் இன்று பரிமாறப்படுகின்றது. பல நெஞ்சங்களைத் தூண்டி ஆசைகாட்டி காசி கிள்ளும் அமைப்புகளில் வட்டியின் மூலம் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. வட்டி பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது; இறைமறை என்ன விளக்கம் தருகின்றது. என்பதையெல்லாம் சற்று ஆய்வுசெய்வோம். "வட்டி உண்போர் அத்தகையோர் (கியாமத்நாளில் கப்றுகளிலிருந்து) ஷைத்தான் அவனை அறைந்து பைத்தியம் பிடித்து எழுந்திருப்பவன் போலல்லாமல் (வேறு விதமாக) எழுந்திருக்க மாட்டார்கள். ஏனெனில், அ(ந்த நிலையான)து நிச்சயமாக அவர்கள் கூறியதுதான் காரணமாகும். (ஆனால்) அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கியும், வட்டியை ஹறாமாக்கியும் வைத்துள்ளான். ஆகவே எவருக்குத் தம்முடைய ரப்பிடமிருந்து (இந்த) உபதேசம் வந்து அவர் (வட்டியை விட்டு) விலகிக் கொண்டால் சென்றுபோனது (அதாவது முன்னர் வாங்கியது) அவருக்குரியதாகும். இன்னும் அவருடைய காரியம் அல்லாஹ்வின்பால் இருக்கிறது. இன்னும் (இவ் உபதேசம் வந்த பிறகும்) எவர்கள் (வட்டித்தொழிலின்பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகளே. அவர்கள் அதில் நிரந்தரமாக இருப்பார்கள். **(அல்குர்ஆன் : 2:275)** வட்டியோடு சம்பந்தப்பட்ட அனைத்தும் ஹறாம் என்பதால் குறிப்பாக வட்டி கொடுப்பது அதற்கு கணக்கு எழுதுவது போன்ற அனைத்தும் தடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் மூலம் வங்கிகளில் கடமையில் ஈடுபட்ட பலர் தங்கள் தொழில்களை ராஜினாமாச் செய்து தக்.்வாவுக்காக (இறையச்சத்திற்காக) வேறு தொழில்புரிகின்றனர். இன்னும் பலர் தங்கள்துறை சார்ந்த இஸ்லாமிய வங்கி முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தொழிலை விட்டால் எங்கு செல்வது? என்ற போர்வையில் வங்கித்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், உங்களை அழைத்து நாசமாக்கக்கூடிய 7 விசயங்களையும் விட்டு விலகிக்கொள்ளுங்கள். அப்பொழுது தோழர்கள் அவை யாவை யாரஸுலுல்லாஹ்? எனக்கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (1) அல்லாஹ்வுக்கு இணை வைப்பது (2) சூனியம் செய்வது (3) அல்லாஹ் விலக்கியுள்ள உயிரைக்கொல்வது (4) வட்டியை உண்பது (5) அநாதைகளின் பொருளை உண்பது (6) போருடைய நாளில் புறமுதுகு காட்டிச்செல்வது (7) அப்பாவியான மு.்மினான பத்தினிப்பெண்களின் மிது அவதூறு கூறுவது ஆகியவையாகும் எனப்பகர்ந்தார்கள். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புஹாரி முஸ்லிம்)** மனிதனை அழிவுக்குள் கொண்டு செல்லக்கூடியது என மாநபி (ஸல்) அவர்களால் அடையாளம் காட்டப்பட்டதே வட்டியாகும். இன்று சமுதாயம் வட்டியில் கொண்டுள்ள ரசனை வேறு எதில்தான் கொண்டுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார்களோ தெரியவில்லை. வங்கியுடன் தொடர்பில்லாமல் தொழிலில்லை. என்ற அளவுக்கு உலகளாவிய ரீதியில் வங்கியுடனான தொடர்பு வலுவடைந்து இருக்கிறது. தொழிற்சாலைகளை இயக்கும் எத்தனையோ தொழில் அதிபர்கள் தங்கள் சொத்துக்களை எல்லாம் அடகுவைத்து வங்கிக் கடன் பெற்று தொழில் நிறுவனங்களை நடத்துகின்றார்கள். இவர்களால் அதைத் தவிர்த்துக்கொள்ளவும் முடியவில்லை. இஸ்லாமிய கருத்துக்களை ஏற்காமல் இருக்கவும் முடியவில்லை. என்ன செய்யலாம்? என்ற இரண்டும் கெட்ட நிலையில் வாழ்க்கை நடத்துவோரும் உள்ளனர். இன்றும் சிலர் எந்தவித வங்கி நடைமுறையும் இல்லாது உள்ளதை வைத்து ஜீவியம் நடத்துவதையும் காண்கின்றோம்.

நடைமுறை வாழ்வில் பெரிய தொகைப் பணத்தை சம்பாதிக்க முயலும் போது பெரிய அளவிலான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும். அதில் வட்டியும் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை. சில மக்கள் வங்கி வைப்பில் பணத்தையிட்டு அதற்கு நல்ல வெகுமதி கிடைக்க வேண்டுமென ஆசைப்படுவதையும் அதனால் பெருகும் வட்டிப் பணத்தில் வீட்டுப்பொருட்கள், தளபாடங்கள் போன்றவற்றை வாங்குவதையும் காண்கின்றோம். வங்கிகளினால் வழங்கப்படும் சன்மான ரீ-சேட், விளையாட்டுப்பொருட்கள், தேநீர் குடிக்கும் கப்கள் ஆகியவைகளை சந்தோசமாகப் பெறுகின்றனர். ஹராமின் அந்தஸ்தை நினைப்பவர்கள் இந்த அற்பசொற்ப பொருட்களுக்கு ஆசைப்பட மாட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், வட்டியை உண்ணுபவரையும் அதை உண்ணவைப்பவரையும் அண்ணல் நபி அவர்கள் சபித்தார்கள். **(அறிவிப்பவர்: அப்துல்லாஹ்பின் மஸ்ஊத் (றலி) ஆதாரம் : முஸ்லிம்)**

வட்டியை தொழிலாகச் செய்பவர்களும் (கமிஷனுக்கு) ஆதாயத்திற்கு செக் மாற்றுபவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வட்டிக் கணக்கை எழுதுபவர்கள் முதல்-சாட்சி சொல்பவர் வரை நபி (ஸல்) விரும்பவில்லை. பொதுவாக இஸ்லாமிய அமைப்பில்லாத வங்கித்தொழில் இழிவுசெய்யப்படுகின்றது என்பதுதான் பொருளாகும். வட்டிக்காகச் சாட்சி கூறும் இரு சாட்சிகளையும் அப்பத்திரத்தை எழுதுபவர்களையும் அண்ணல் நபி (ஸல்) சபித்துள்ளார்கள். **ஆதாரம் : திர்மிதி)** வங்கியிலிட்ட பணத்திற்கு கிடைக்கும் வட்டியை சிலர் ஈமானுக்குப் பயந்து எடுப்பதேயில்லை. சிலர் பல இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுக்கேற்ப அந்த வட்டியை அப்படியே எடுத்து மலசலகூட குழிகளுக்கும் பேசன்களுக்கும் பயன்படுத்துகின்றார்கள். கௌரவமானதற்கு பயன்படுத்தாமல் தாழ்ந்த அருவருப்பான விடயங்களுக்கு அப்பணம் ஆகுமென அத்தகைய வேலைகளுக்கு கொடுக்கின்றார்கள். இன்னும் சிலர் இப்பணத்தைப் பெற்று தங்களிடம் வேலைசெய்யும் அந்நிய சமயத்தவர்களின் சாவுப்பெட்டி வாங்குவதற்கும் வெசாக், பொசன் போன்ற தோரணங்கள் அடிக்க கேட்டுவருபவர்களுக்கும் இல்லை என்று சொல்லாது கொடுக்கின்றார்கள். எதற்கும் அல்லாஹ்வை அஞ்சி நடப்போம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**29-02-2004**





## 42. மனமுடையப்பேசி பாதிப்படைவதை விடுத்து குணமுடைய பேச்சில் குணம்கொள்வோம்

சந்தைக்குள் நுழையும் போதெல்லாம் சப்தத்தால் காது கனகனக்கும். சந்திக்கக்கூடாத வார்த்தைகளையெல்லாம் சந்திக்க நேரிடும். பொருளை வேண்டி வந்து விடலாம் என்று சென்றாலும் அருளுக்கும் அந்தஸ்திற்கும் அப்பாற்பட்ட வார்த்தைகள் வருகையை காத்து நிற்கும். அன்பு, அறிவு, ஆக்கம் போன்றவற்றிற்கு உபயோகப்படாத வார்த்தைகளெல்லாம் மலிந்து காணப்படும் இடமே மார்கட்டாகும். எப்போதும் இனிய வார்த்தைகளைப் பேசிப்பழக வேண்டும். யாருடைய மனசும் சுடும்படி கண்களும் கருத்துக்களும் கூசும் அளவுக்குப் பேச்சுக்கள் அமைந்துவிடக் கூடாது. "குத்திக்காட்டுபவனாகவோ சபிப்பவனாகவோ அருவருப்பான பேச்சுக்களைப் பேசுபவனாகவோ தீய பேச்சுக்களை பேசுபவனாகவோ ஒரு மு.்.மின் இருக்க மாட்டான்" என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அறிவிப்பவர்: அப்துல்லாஹ்பின் மஸ்ஊத் (றலி) ஆதாரம் : திர்மிதி)** மக்களுக்குள் வைத்து மானம்குறையப் பேசுவது, அவமானமான வார்த்தைகளால் அப்பட்டமாக ஏசுவது இன்று சர்வசாதாரணமாகி விட்டது. வார்த்தைகளால் பேசுவது மாத்திரமன்றி அருவருப்பான காட்சிகளே பாத்திரங்களாக, கதைகளாக, சினிமாவாக சித்தரிக்கப்பட்டு திரையிடப்படுகின்றது. 90 சதவீதம் சினிமாப் படங்களைப் பார்க்காது விட்டாலும் 80 சதவீதம் கதைகளைப் பார்க்கவும் படிக்கவும் ரசனையாளர்கள் இல்லாமல் இல்லை.

சிலர் பார்த்த காட்சிகளை இன்னுமொரு முறை பார்க்க அருவருப்புப்படுகின்றனர். அத்தனையும் அந்தரங்கங்கள் அப்பட்டமாக்கப்பட்ட விளைவுகள்தான். எதிர்கால சமுதாயத்தினரை தீயவார்த்தைப் பிரயோகங்களிலிருந்து பாதுகாத்து அறநெறி புகட்டவல்ல சிறப்புவார்த்தை பேசுபவர்களாக சீர்திருத்தி எடுப்பது சிக்கலாகி வருகின்றது. குழந்தைகளை வீட்டுக்குள்ளேயே கட்டிப்போட்டு வளர்க்க முடியாது. பக்கத்து வீட்டுக்குழந்தைகளுடன் பழகுவதற்கு விடத்தான் வேண்டியுள்ளது. ஆனாலும் சில குழந்தைகள் அன்போடும் பாசத்தோடும் கதைக்கின்றனர் பேசுகின்றனர். சில குழந்தைகள் சீர்கேடான வார்த்தைகளையே பேசுகின்றனர். அத்தகைய பிள்ளைகள் வீட்டுக்கு வராமல் இருந்தால்கூட நல்லதெனப் பெற்றார் எதிர்பார்க்கின்றனர். சில பிள்ளைகளின் சீரற்ற பேச்சுக்கள் இளைய மனசுகளில் அப்படியே பதிந்து விடுகின்றது. அந்த வார்த்தைகளை தனித்திருக்கும் போதும் பிறரின் முன்னாலும் பிரயோகிக்க எத்தனிப்பார்கள். இதனால் பெற்றோர் சீற்றமடைவதும் சிறுவர்களுக்கு அடிப்பதும் ஏசுவதும் மிளகாயை வாயில் பூசுவதும் பயமுறுத்துவது போன்ற அச்சுறுத்தலான வேலைகளில் ஈடுபடுவார்கள்.

இது குழந்தைகளின் எதிர்காலத்தை முற்றிலும் பாதிப்படையச் செய்யும். பெற்றோர்கள் பேசுகின்ற மிகவும் மோசமான வார்த்தைகளால் பிள்ளைகள் செவிவழியாக கதைகளை உள்வாங்கி சீரற்ற பேச்சுவார்த்தைகளைப் பேச எத்தனிக்கின்றார்கள். எந்தப்பேச்சுக்களைப் பேசும் போது குழந்தை சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் என்ற முன்நோக்கல்களை எதிர்பார்த்துப் பேசவேண்டும். இல்லையெனின், அவை வீண்விபரீதத்தையே ஏற்படுத்தும். நபிகளார் (ஸல்) கூறினார்கள், எந்த விசயத்தில் அருவருப்பான பேச்சு இடம்பெற்றுவிடுகின்றதோ அது அவ்விசயத்தை அவலட்சனமாக்குகின்றதே தவிர வேறில்லை. எவ்விசயத்தில் வெட்கம் இடம் பெறுகின்றதோ அது அவ்விசயத்தை அழகுபடுத்துகிறதே தவிர வேறில்லை. **(அறிவிப்பவர்: அனஸ் (றலி) ஆதாரம் : திர்மிதி)** பாடசாலைகளில் வெட்கமான வார்த்தைகளைப் பிள்ளைகள் கூறிவிட்டால் அதனை ஆசிரியர்கள் திருப்பித் திருப்பி துருவித்துருவி கேட்கக்கூடாது. அது உளவியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், பிறபிள்ளைகளுக்கும் கூடாத பேச்சுக்களை அறிமுகப்படுத்த முயற்சித்ததாக முடியும்.

பாடசாலைகளில்கூட முன்னுள்ள காலங்களைப்போல் அல்லாமல் மாணவர் கள் ஆசிரியர்களை அர்த்தமில்லாத வார்த்தைகளால் பேசிக்கொள்வதையும் அதிபரின் அறையில் விசாரணைக்கு வீற்றிருப்பதையும் காண்கின்றோம். மானம், மரியாதை என்பதும் மாணிக்கமாக உதிர்க்கும் வார்த்தைகளும் கடையில் எடுக்கும் சரக்கல்ல. உணர்வுகளால் உந்தப்பட வேண்டியதாகும். 90 வருட காலம் தொண்டுசெய்து நல்லவனாகக் கருதப்பட்ட மனிதர் 91வது வருடத்தில் நல்லவர்களின் முன்னால் உதிர்த்தக்கூடாத வார்த்தைகளை உதிர்த்து விட்டால் அவனுடைய முழுக்கால அந்தஸ்தும் அவிழ்க்கப்படுவதைக் காண்கின்றோம். யாரையும் நாம் நல்லவர் என்று பாராட்டலாம். பட்டம் கொடுக்கலாம். நம்மைப் பார்த்து நான் நல்லவன் என்று எப்போது முடிவுசெய்கின்றோமோ அப்போது தான் நாம் நல்லவராக முடியும். நமக்கு நாம் சாட்சி. அதனால்தான் பெருமானார் (ஸல்) கூறினார்கள், உன்னிடம் கேள்வி கணக்கு கேட்க முன் உன்னைப் பற்றி நீ கேள்வி கேட்டுப்பார் என்றனர். மனச்சாட்சி மனிதனை எப்போதும் உறுத்திக்கொண்டே இருக்கும். சுவர் உடைந்தால் கட்டலாம். மனசு உடைந்தால் கட்ட முடியாது என்பர். தனது நாவினாலும் கையினாலும் மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்காதவனே முஸ்லிமாவான் என நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மற்றவர்களை பேச்சின் மூலம் கொல்லக்கூடாது. சிலர் வார்த்தைகளால் வதை செய்வார்கள். ஆளைக்கொல்லாமல் கொல்லுவார்கள். நபிகள் (ஸல்) அவர்களின் வாழ்வில் அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்பதைக் குர்ஆன் நியாயப்படுத்துகின்றது. அழகிய பேச்சு, கதை, உரையாடல் எல்லாம் அவர்களது வழியில் மிகத்தெளிவாக அமைந்துள்ளது. அதனை நாம் பின்பற்றி நடந்தால் ஒருபோதும் குறைவருவதற்கு நியாயமே இல்லை. எப்போதும் அழகான பேச்சுக்கள் நமது நாவில் பிறக்க வேண்டும். அசிங்கமான அவலட்சனமாக வார்த்தைகள் வாயிலிருந்து வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நல்லன பேசும் நல்லடியானாக நாயன் நம்மை ஆக்குவானாக.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**07-03-2004**





## 43. நோயுற்றவர்களை விசாரிப்பதில் ஈமானின் நூறைப் பிரகாசத்தைக் காணலாம்

ஒரு மனிதனுடன் இன்னொரு மனிதன் கைகோர்த்ததாகவே வாழ்க்கை அமைந்துள்ளது. அல்லாஹுத்தஆலா "சமத்" யாரைவிட்டும் தேவையற்றவன். ஆனால் மனிதனுக்கு மனிதனிடத்தில் கொடுக்கல் வாங்கல், நிர்வாகம், சீர்திருத்தம், சமூகம், வீடு என்றெல்லாம் ஒருங்கிணைந்த அமைப்பு இருக்கின்றது. அதிலிருந்து வேறுபட்டுப்போக முடியாது. மனிதனிலிருந்து ஒதுங்கியிருக்க யோசிப் பது சமூகமுரண்பாடாகும். மனிதனுக்குள் மனிதனாக வாழ்வதையே மாநபியவர் கள் மனமுவந்து வரவேற்றார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விடிவு இருக் கின்றது. அது ஒருவருக்கு ஒருவர் செய்யும் நற்காரியத்திலேயே தங்கியிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமிடம் ஐந்து உரிமைகள் உள்ளன. (1) ஸலாமுக்கு பதில் அளித்தல் (2) நோயாளியி டம் உடல்நலம் விசாரித்தல் (3) ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்லுதல் (4) அழைப்புக்கு பதில் அளித்தல் (5) தும்மியவருக்கு "யர்ஹமுகல்லாஹ்" எனக் கூறி வைத்தல். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புஹாரி முஸ்லிம்)**

ஒரு மனிதன் ஸலாம் கூறும்போது கண்டிப்பாகப் பதிலளிக்க வேண்டும். இதுபோன்றுதான் நோயாளியின் உடல்நலம் விசாரிக்க வேண்டும். இன்று நோயாளியை விசாரிப்பது, பார்க்கச் செல்வது போன்ற அமைப்புக்கள் நம்மிடம் குறைந்து காணப்படுகின்றன. நோயாளியின் மனஅமைதிக்கும் இடம்கொடுத்து பார்வையாளர்கள் நடந்துகொள்ள வேண்டும். கடுமையான வியாதியாளர்களைக் கட்டிக்காக்கும் வைத்திய அறைகளின் டாக்டர்களின் அனுமதிப்படி உள்சென்று சேமநலம் விசாரிக்க வேண்டும். வசதிபடைத்தவர்களுக்கு தலையிடி, காய்ச்சல் என்றால் கொஞ்சமும் பொறுத்துக்கொள்ள முடியாத பலர் இருக்கின்றனர். ஏழைகள் ஏழெட்டு நாட்கள் கட்டிலில் கிடந்தாலும் ஏறெடுத்துப் பார்க்க ஆளில் லாத நிலைதான் ஏற்பட்டுள்ளது. நோயாளியைப் பார்ப்பதில் பாகுபாடு காட்டக் கூடாது. யாராக இருப்பினும் எவ்வகையான நோயாயினும் போய்விசாரித்து ஆறுதல் சொல்ல வேண்டும். ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கவும் பணமில்லாமல் கடுமையாகப் பாதிப்புற்ற எத்தனையோ மக்கள் தவிக்கின்றார்கள். அவர்களை எல்லாம் சென்று பார்வையிட வேண்டும். பழங்கள், மருந்துகள், குளிர்பானங்கள், ஊசிகள் வாங்குவதற்குத் தேவைப்படுபவர்களுக்கு எப்படியாவது உதவிசெய்ய வேண்டும்.

இன்று எத்தனையோ சமய மாற்றங்களுக்கும் மனம் மாறி, மதம் மாறிப்போவதற்கும் வைத்தியசாலை உதவிகள் வாய்ப்பாகிப்போய்க் கொண்டிருக் கின்றன. மதத்தைச் சேர்ந்த ஒருவரோ எம்மதத்தவரோ பாகுபாடு தேவை யில்லை. நோய் விசாரிப்பதுதான் நோக்கமாக இருக்க வேண்டும். தவிச்ச முயலை அடிப்பது போன்று உயிருக்காகப் போராடும் மனிதனிடம் பணத்தையும் பழங்களையும் காட்டி பல புத்தகங்களைக் கையில்கொடுத்து மத மாற்றம் செய்வது சிறந்த காரியமல்ல. எவராயினும் தூய்மையான மனதுடன் அணுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு உதவி செய்ய வேண்டும். நாயகம் (ஸல்) கூறினார்கள், நோயாளியை உடல்நலம் விசாரியுங்கள். பசியாளிக்கும் உணவளியுங்கள். கைதியை உரிய ஈட்டுத்தொகை வழங்கி விடுதலை செய்யுங்கள். **(அறிவிப்பவர் : அபூமூஸா (றலி) ஆதாரம் : புஹாரீ)** இன்று நோயாளிகளுக்கு வைத்தியசாலைகள் உணவு வழங்கினாலும் வீடுகளிலும் இருந்து சுமந்துசெல்லும் உணவுகளுக்கு ஏற்ப வசதியில்லாமல் கஷ்டப்படுகின்றவர்கள் பலர் இருக்கின்றர். அவர்களது இல்லம் நாடிச்சென்று உதவிகளைச் செய்து கஷ்டப்படும் நோயாளியின் குடும்பத்திற்கு கைகொடுத்து உதவவேண்டும். வைத்தியசாலைகளில் இன்று எத்தனை முஸ்லிம்கள் சீரான வசதிகளின்றி தவிக்கின்றார்கள். சவச்சாலையில்கூகூட பல நாட்கள் போடப்பட்டு முகவரி தெரியாமல் மூடப்பட்ட முஸ்லிம்கள் இல்லாமல் இல்லை. எமது சமூகத்தில் வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்க்கும் அமைப்புக்கள் உருவாகவேண்டும். ஜனாஸா நலன்புரி அமைப்புக்கள், மரணித்து முகவரி தெரியாமல் தவிக்கும் முஸ்லிம்களை நல்லடக்கம் செய்யும் நல்ல பணிகளைத் தொடர வேண்டும். தேவையில்லாமல் சமூகத்தில் செலவு செய்வதற்கு இருக்கின்ற இன்னைய அமைப்பினருக்கு ஈமானியத்தின் தாக்கம் எடுத்தோதப்பட வேண்டும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ்பின் மஸ்ஊத் (றலி) அறிவிக்கின்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காய்ச்சலாக இருந்தபொழுது நான் அவர்களிடம் சென்றேன். அப்பொழுது அவர்களைத்தொட்டுப் பார்த்தேன். பிறகு நான் தாங்கள் கடினமான காய்ச்சலால் கஷ்டப்படுகிறீர்கள் என்று கூறினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஆம் உங்களில் இரண்டு பேருக்கு ஏற்படும் காய்ச்சல் எனக்கு ஏற்படுகின்றது. எனப்பகர்ந்தார்கள். **(புஹாரீ முஸ்லிம்)** நபிகளார் (ஸல்) அவர்களும் வியாதியினால் பீடிக்கப்பட்டார்கள். அன்புத்தோழர்கள் சேமநலம் விசாரித்தார்கள். இவை ஒன்றும் இஸ்லாமிய வாழ்வியல் ஒழுங்குக்குப் புதியதல்ல. நோயாளிகளை வீட்டின் ஒரு மூலையில் கவனிப்பாரற்று பராமுகமாக விட்டு விடுவது இறைவனின் தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும். அது மாத்திரமன்றி, அவர்கள் தனது நோயை நினைத்து நினைத்து மனமுருகி வாழ்வதைப் பார்க்கின்றோம்.

ஐயூப் நபி (அலை) அவர்கள் இறைவனால் சோதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இறைவா! எனக்குப்பிடித்த பிணியை அகற்றி வைப்பாயாக. நீ இரக்கம் காட்டுபவர்களில் மிகவும் இரக்கம் காட்டுபவன் என்ப்பிரார்த்தனை புரிந்தார்கள். நோயாளியின் வாயிலிருந்து வருகின்ற திக்ர் மிக அர்த்தமுடையதாக இருக்கின்றது நோயாளியைப் பார்க்கச்செல்லும் நாம் அவர்களுக்காகப் பிரார்த்திக்க வேண்டும். அன்புடன் விசாரிக்க வேண்டும். இன்று பாரதூரமான சிறுநீரகச் சிகிச்சை, இதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றுக்கு உண்மைக்கு உண்மையாக உதவிகோரி வரும் போது நம்மால் இயன்ற உதவி ஒத்தாசைகளைச் செய்ய வேண்டும். சமயப்பாகுபாடுகளைக் களைந்து உயிருக்காகப் போராடும் நோயளர்களுக்கு உதவுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**14-03-2004**





## 44. மதியாதார் தலைவாசல் மிதியாதே!

வீடு என்பது ஒரு மானுடனின் மிகப்பெறுமதியான சொத்தாகும். வீட்டில்தான் மனிதனின் சகல காரியங்களும் கட்டுக்கோப்பாக, காத்திரமாக நடந்தேறுகின்றது. அந்த வீடு சிலருக்கு மாளிகையாக பலருக்கு நடுத்தரமாக சிலருக்கு குடிசையாக மாறிவிடுகின்றது. சொந்த வீடு இல்லையென ஏங்குவோரும் வாடகை வீட்டில் காலம்கழிப்போரும் நம்மில் இல்லாமலில்லை. யார் வீடாயினும், அந்த வீட்டையும் அதிலுள்ள மனிதர்களையும் மதித்து நடக்க வேண்டும். அதுவே மனித நாகரீகமாக கருதப்படுகின்றது. முன்வழியால் முறையாக நுழைவோம். ஒரு வீட்டில் எப்படி நுழைய வேண்டும் என்பதை இஸ்லாம் எப்படி அணுகுகின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். "மு.'.மின்களே உங்கள் வீடுகள் அல்லாத (மற்றவர் களின்) வீடுகளில் (நுழைவதாக இருந்தால் அவ்வீட்டாரிடம்) அனுமதி பெற்று அவ்வீட்டாருக்கு ஸலாம் கூறும்வரை நீங்கள் நுழைய வேண்டாம். **(அல்குர்ஆன்: 24:27)** வீட்டின் வெளியே நின்று சப்தமிட்டு பெயர் சொல்லி அழைத்து இல்லையேல் Bell ஒலி சமிக்ஞைகளை அழுத்தி அல்லது முன்னாலுள்ள தொலைபேசியில் அல்லது தொலைகெமராவில் தன்னைக் காண்பித்து உள்ளே உள்ளவர்களின் அனுமதி கிடைத்த பின்னர் வீட்டுக்குள் நுழைவதுதான் விசேசிக்கத்தக்க செயலாகும்.

பின்வழியால் நுழைவது பித்னா இது அத்தனையும் மனிதனுக்கே வகுக்கப்பட் டுள்ளது. மலாஇக்கத் என்ற அமரர்களுக்கு இத்தகைய கட்டுப்பாடு எதுவும் கிடையாது. அவர்கள் அனுமதி பெற்று வீட்டில் நுழைய அவசியமில்லை. அருளுக்குரிய அமரர்கள் அனுதினமும் வீட்டில் நுழையத்தான் செய்கிறார்கள். அவர்கள் யாரிடம் கேட்டு நுழைகின்றனர். அவசியமே கிடையாது. மலக்கல் மௌத் இஸ்ராயில் (அலை) என்ற மலக்கு உயிர் வாங்க வருகின்றார். சப்தமில்லாமலே வந்து ஒருவரை அல்லது பலரை சப்தமில்லாமலே ரூஹை கவர்ந்து செல்கின்றார். எனவேதான் மனிதனுக்கே வீடுகளில் நுழைய கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. மலக்கு என்ற அமரர்களுக்கு அல்ல என்பதை யோசிக்க வேண்டும். "உங்களில் சிறுவர்கள் பருவம் எய்தினால் அவர்களுக்கு முன் இருந்தவர்கள் அனுமதிகோரியது போன்று அவர்களும் அனுமதி கோரட்டும்" **(அல்குர்ஆன்: 24:59)** சின்னஞ்சிறுசுகளுக்கு இஸ்லாம் பென்னம்பெரிய சட்டங்களை வைத்து சித்திரவதை செய்யவில்லை. மணல் மேட்டிலே மலகூடத்தையும் கிணற்றையும் பக்கத்தில் தோன்டி விட்டான் என்று சிறுவனைத் தண்டிக்க முடியாது. கற்பனையில் சிறுவர்கள் கடல் மண்ணைத்தோண்டி தங்களுக்கு இசைந்தவாறு பிசைந்து வீடு கட்டும் போது மலசலகூடத்தையும் கிணற்றையும் அமைத்து விடுவார்கள். அதனை பிழையென்று சொல்ல முடியாது. இரக்கமுள்ள இறைவன் சிறுவர்களைக் கண்டிக்காது பெரியவர்களாகும் போது வீட்டில் நுழையும் சட்டத்தையே வலியுறுத்தி நிற்கின்றான். நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், அனுமதிகோருதல் மூன்று முறையாகும். மூன்று தடவைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு அனுமதியளிக்கப்பட்டால் அவ்வீட்டில் நுழைவீராக. இல்லையெனில் திரும்பிச் செல்வீராக என்றார். **(அறிவிப்பவர் : அபூமூஸல் அஷ்அரி (றலி) ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)** சோள மன்னன் நாளைய உதயத்திற்குள் நூறுகோடிப் பாடல்கள் பாட வேண்டுமென புலவர்களைப் பணித்தான். ஒரு பாட்டுக்கும் வழியில்லை. ராத்திரி முடிவதற்குள் எப்படிப் பாடுவதென ஔவையிடம் கேட்டபோது, “நீவிர் வருத்தத்தை ஒழிமின் ஒரு நொடியில் பாடித்தருகின்றேன்” எனப் பகர்ந்தார். “மதியாதார் முற்ற மதிப்ப தொரு காற் சென்று மிதியாமை கோடிபெறும்” “உண்ணிருன் ணீரென்று பசரியார் தன் மனையில் உண்ணாமை கோடி பெறும்” “கோடிக்கொடுத்தும் குடிப்பிறந்தான் நம்மோடு கூடுதல் கோடி பெறும்” கோடானு கோடி கொடிப்பினுந் தன்னுடை நாகோடாமை கோடி பெறும்” என்று பாடினார். இதில் முதலாவது எடுத்துக்கொண்ட விடயம் மதிக்காதவர்களின் முற்றத்திற்கு மிதிக்கக்கூடாது என்பதனை இனிமையாக ஔவைப்பாட்டி சொல்லி யிருக்கின்றார்.

இன்னுமொரு கவிஞன் இதனை இஞ்சி தட்டி சாறு பிளிந்து கூறும் போது, மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று மானமுள்ள மனிதனுக்கு ஔவை சொன்னது அர்த்தமுள்ளது எனப்பாடினான். ஹன்பல் (றலி) அறிவிக்கின்றார்கள், நான் நபி (ஸல்) அவர்களின் இல்லத்திற்குச் செல்றேன். நான் ஸலாம் கூற வில்லை. (அனுமதிகோராமலும் ஸலாம் கூறாமலும் அவர்களின் வீட்டில் நான் நுழைந்து விட்டேன்) அப்பொழுது அண்ணலார் நீ திரும்பிச் செல்வீராக. அஸ்ஸலாமு அலைக்கும் நான் நுழையட்டுமா? என்று கூறுவீராக எனப்பகர்த் தார்கள். **(ஆதாரம்: அபூதாவூத் திர்மிதி)** ஒரு வீட்டில் நுழைந்ததன் பின்னால் அங்கு நமது பார்வையை அலையவிடக்கூடாது. எல்லாப்பொருட்களையும் பார்ப்பது, ஆசைப்படுவது அதன் விலைகளையெல்லாம் விசாரிப்பது அர்த்தமற்ற செயலாகும். ஒரு வீட்டுக்குச் சென்றால் கண்ணைப் பாதுகாப்பதும் சாப்பிடும் போது தொண்டையைப் பாதுகாப்பதும் முக்கியமானதென முஹம்மது நபி (ஸல்) அவர்கள் முன்மொழிந்தார்கள்.

“அனுமதி கோருவதை (மார்க்கத்தில்) ஏற்படுத்தப்பட்டதெல்லாம் பார்வைக்காகத் தான். (பிறரின் பார்வையை விட்டு அவ்வீட்டாரை பாதுகாக்கத்தான். ஆகவே பிறரின் இல்லத்திற்கு வருபவர் அனுமதிகோருவதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். தன் பார்வையை அவ்வீட்டிற்குள் செலுத்தக்கூடா தென நாயகம் (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பவர் : ஸஃல்பின் ஸஃது (றலி) ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)**

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**21-03-2004**





## 45. அண்ணல் நபி மீது ஸலவாத் சொன்னால் அவர்களை சென்றடைவது உண்மையா?

**இ**றைவன் தனது தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கின்றான் என்பது முழு உலகும் ஏற்றுக்கொண்ட உண்மை யாகும். அத்தகைய உத்தம நபி (ஸல்) அவர்கள் மீது இறைவன் கொண்டுள்ள அன்பை அல்குர்ஆன் மூலம் ஆய்வோம். “நிச்சயமாக அல்லாஹ்வும் அவன் மலக்குகளும் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்கிறார்கள். மு·மின்க ளே நபி (ஸல்) அவர்கள் மீது நீங்களும் ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள்” **(அல்குர்ஆன்: 33:36)** நானும் செய்கின்றேன். எனது அமரர்களும் செய்கின்றனர். மனிதர்களே நீங்களும் செய்யுங்கள் என்று எந்தவொரு அமலையும் கூறவில்லை. அதனைத் தெளிவாகச் சொல்வதாயின் நான் தொழுகிறேன்; நான் நோன்பு பிடிக்கிறேன்; நான் ஏழைவரி (ஸக்காத்) கொடுக்கின்றேன்; நான் ஹஜ் செய்கின்றேன்; நீங்களும் செய்யுங்கள் என்று அல்லாஹுத்தஆலா கூறவில்லை. மாறாக மாநபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்வதை மட்டும் நானும் அமரர்களும் ஸலவாத் கூறுகின்றோம். மு·மின்களே நீங்களும் கூறுங்கள் என்று கூறுகிறான் என்றால் அதன் பெறுமதிதான் என்ன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முஹம்மத் என்ற சொல்லைக் காதில் கேட்டவுடன் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் என்று ஸலவாத் கூறவேண்டும்.

யார் என் மீது ஒருமுறை ஸலவாத் கூறுகின்றாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் கூறுகின்றான். நபி (ஸல்) கூற நான் கேட்டேன் என அப்துல்லாஹ் பின் அம்ரிப்னுல் ஆஸ் (றலி) அறிவிக்கின்றார்கள். **(ஆதாரம் : முஸ்லிம்)** எவ்வளவு தூரம் ஸலவாத் கூறமுடியுமோ அவ்வளவு தூரம் இறைத் தூதரின் அன்பைப் பெற முடியும். இறைவன் நம்மைப்பார்த்து ஸலவாத் சொல்லும் படி கூற நாம் என்ன சொல்கின்றோம். “அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்” என்று, இதன் பொருள் என்ன? இறைவா! நீயே முஹம்மது நபி மீது ஸலவாத் சொல்வாயாக. அவன் நம்மைச்சொல்ல - நாம் அவனைச்சொல்ல இது எங்கே நம்மை இட்டுச்செல்கின்றது என்றால்.... இறைத்தூதருக்கு அருள்செய்ய நீதான் மிகத்தகுதிவாய்ந்தவன் என்பதை எடுத்துச்சொல்கின்றோம்.'

நாயகம் (ஸல் கூறினார்கள் கியாமத் நாளில் என்னிடம் மிக மேலான அந்தஸ்துடையவன் மக்களில் என்மீது அதிகமாக ஸலவாத் கூறுபவர் ஆவார். **(திர்மிதி)** மறுஉலகில் தன் ஆத்மாவுக்காக தடுமாறி நிற்கும் வேளையில் அண்ணல் நபியிடத்தில் மிக மேலான இடத்தைப் பெறுவதாயின் அது சாதாரண மான வேலையல்ல என்பதை உணரவேண்டும். இன்று நபி மீது ஸலவாத் கூறப்பட்டால் அதுவெல்லாம் தேவையில்லை என்றெல்லாம் மூளைச்சலவை செய்யப்பட்ட பலர் முழங்குவதைக் கேட்க ஈமானிய மனசுகள் எரிச்சலடைகின்றன. என்னைப்பற்றி கூறப்பட்டு அப்பொழுது என்மீது ஸலவாத் கூறாதவரின் மூக்கு மண்ணைத் தழுவுமாக (நாசமாகட்டுமாக) என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம்: திர்மிதி)** அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லாமல் இருந்து மாநபியின் மனஎரிவை வாங்கிக்கட்டிக் கொள்வது மிகப்பாதகமான நிலவரமாக மாறும். ஒரு நபியின் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டிய நேரத்தில் அவர்களின் எதிர்ப்பை பெறுவது ஒரு மனிதனின் துரதிஷ்டமாகும். இன்று ஸலவாத் சொல்வதென்றால் சிலருக்கு அம்மியை அரைத்து சாப்பிடுவது போன்று அமைந்திருக்கின்றது. ஸலவாத் என்றால் சிலருக்கு சாப்பாடு கூட ஜீரனிப்பதில்லை. அவர்கள் ஸலவாத் ஓதுகின்றனர். அது அவர்களுக்கே தெரியவில்லை. அதுபற்றி பார்ப் போமானால்..... தாங்களே ஸலவாத் ஓதிக்கொண்டு ஸலவாத் ஓதுவதை எதிர்ப்பது சிரிப்புக்கிடமாக இருக்கின்றது.

தொழுகையில் அத்தஹிய்யாத்தில் ஸலவாத் ஓதவேண்டும். ஸலவாத் ஓத வில்லையானால் அத்தஹிய்யாத் நிறைவேறாது. அத்தஹிய்யாத் ஓதப்படவில்லை யானால், தொழுகை கேள்விக்குறியாக மாறிவிடும். அதுமாத்திரன்றி, ஜும்ஆ ஓதுபவர் தனது பிரசங்கத்தில் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். அவரது குத்பா பிரசங்கத்தில் இறைவனைப் புகழ வேண்டும். நபி மீது ஸலவாத் கூற வேண்டும். குர்ஆனில் சிலதை ஓதவேண்டும். நன்மையை ஏவி தீமையை விலக்க வேண்டும். கடைசியில் பிரார்த்தனை செய்ய வேண்டும். இவைகளில் ஒன்று நிகழவில்லையெனில் குத்பா பிரசங்கம் கேள்விக்குறியாக மாறிவிடும்? இது மாத்திரமன்றி, ஜனாஸாத் தொழுகையில் முதலில் பாதிஹா சூறா ஓத வேண்டும். இரண்டாவது நபி மீது ஸலவாத் கூறவேண்டும். மூன்றாவது மையத்திற்காகப் பிரார்த்திக்க வேண்டும். நான்காவது ஸலாம் கூறவேண்டும். இவைகள் அனைத்திலும் ஸலவாத் முக்கிய இடம்பெறுகின்றது. எனவே ஸலவாத்தை எதிர்ப்பதில் அர்த்தமில்லை.

சிலருக்கு நபி (ஸல்) மீது ஸலவாத் கூறுவது நபிகளாரைச் சென்றடையுமா? என்று ஒரு சந்தேகம் உண்டு. சர்வதேச தொடர்புடைய கையடக்கத் தொலைபேசியில் ஒருவருக்காக நாம் டயல் செய்தால் அவர் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் வலையமைப்பினூடாக அவரைத்தேடி அந்தத் தொடர்பு ட்ரிங் பண்ணி இசை வடிவில் மணியசைத்து நிற்கின்றன. உரியவரும் தொடர்பு கொள்கின்றார். முஹம்மது நபி (ஸல்) முழு உலகின் நபியாக இருக்க ஏன் அவர்களை ஸலவாத் சென்றடைய முடியாது? "என் மண்ணறையை பெருநாளாகக் கொண்டாடப்படும் இடமாக ஆக்கிக்கொள்ளாதீர். (எனினும்) என் மீது ஸலவாத் கூறுங்கள். நிச்சயமாக உங்களின் ஸலவாத் (உலகில்) நீங்கள் எங்கிருந்தாலும் என்னை வந்து (சேருகின்றது) நபிகள் நாயகம் (ஸல்) **ஆதாரம்: அபூதாவூத்)** "யார் என் மீது ஸலாம் கூறினாலும் அல்லாஹ் என் உயிரை எனக்குத் திருப்பிக்கொடுத்து விடுகின்றான். நான் அவரின் ஸலாமுக்குப் பதில் சொல்வேன்". நபிகள் நாயகம் (ஸல்) **ஆதாரம்: அபூதாவூத்)**

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**28-03-2004**





## 46. கடன்காரர்களுக்கு கருணைகாட்டுபவன் ஹக்கின் கருணையைப் பெறுவான்

கடன் ஒரு மனிதனின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கின்றது. சரியான தொழில்வாய்ப்பும் வருமானமும் இல்லாமல் சிலர் கடன்வேண்டி செலவு செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்னும் பலர் வருமானத்தை மிஞ்சிய செலவு களைச் செய்து வீணான கடன்காரர்களாக மாறுகின்றனர். கடன் சிலரின் வாழ்க்கையில் தூக்கத்தைத் துண்டாடி விட்டது. யோசனையினால் பலர் நித்திரா பங்கம் செய்து நோயைத் தேடிக்கொள்கின்றனர். கடன் பெற்று துன்பப்படுபவருக்கு மானுசீகமாக உதவி செய்வது மிக முக்கியமானதொன்றாகும். கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டவர்களும் உண்டு.

கடன் எடுத்துவிட்டு தன்பாட்டில் வாழும் மக்களும் இல்லாமலில்லை. கடன் கொடுத்தவன் எப்பாடுபட்டாலும் அதனைத் திரும்பியும் பார்க்காது வாழமுற்படும் கடன் எடுத்தவர்கள் உண்மையிலேயே ஒரு பொறுப்பில்லாத பிராணியைப் போன்று நடந்துகொள்கின்றனர். கடன்காரர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதை இஸ்லாம் எவ்வாறு கூறுகின்றது என்பதை நோக்குவோம். "கியாமத் நாளின் கஷ்டங்களை விட்டு அல்லாஹ் காப்பாற்றுவதை யார் ஆசைப்படுகின்றா ரோ அவர் நம்மிடம் கடன்வாங்கி பின்னர் அதனை நிறைவேற்றக் கஷ்டப்படு வருக்கு தவணையை நீடிக்கக்கட்டும்! அல்லது அவரின் கடனை மன்னித்து விடட்டும்" என நபிமணி (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பர் : அபூகதாதா (றலி) ஆதாரம் : முஸ்லிம்)** கடன்பெற்றவருக்கு கருணை காட்டுவதும் முடியாமல் மூலையில் முடங்கிக்கிடக்கும் கடன்காரர்களுக்காக மன்னிப்புக் கொடுத்து அதனைத் தள்ளுபடி செய்வதும் மிக அழகான செயலாகக் கருதப்படுகின்றது. பெரிய கடன்களைப் பெரிதுபடுத்தாது மன்னித்துவிடும் மனப்பான்மையினரை பாராட்டாமல் இருக்கவும் முடியாது. கடன்காரனுக்கு அடுத்த வீட்டில் தட்டினாலும் தன்வீட்டில் தட்டுவது போல் இருக்கும். கடன்காரர்களுக்கு கருணை காட்டுபவர் களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயந்துரைத்தார்கள்.

"யார் கஷ்டப்படும் கடனாளிக்கு தவணையளிக்கின்றாரோ அல்லது அவரின் கடனை தள்ளுபடி செய்கிறாரோ அவருக்கு கியாமத் நாளில் தன் அர்சின் நிழலுக்குக் கீழே அல்லாஹ் நிழல் அளிப்பான். அந்த நாளில் இந்நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இருக்காது. **(அறிவிப்பர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : திர்மிதி)** ஒரு கடனாளி கடன்காரர்கள் தேடிவருவார்கள் எனப்பயந்து ஒதுங்கி ஓடி ஒழிப்பதெல்லாம் சர்வசாதாரணமாகி விட்டது. உண்மையாக தேவைக்கு கடன்எடுத்து கொடுத்துக்கொள்ள முடியாத போது அத்தகைய கடனாளிக்கு கருணை காட்டுவது இஸ்லாத்தில் மிகவும் வேண்டப்படுகின்றது. இஸ்லாத்தின் ஸக்காத் பங்கீட்டில் ஆகுமான வழியில் கடன்பெற்றவர்களுக்கு ஸக்காத் பங்கீடு செய்வதற்கு அத்தகைய கடன்காரர்களை ஸக்காத் பெறும் 8 கூட்டத்தில் ஒரு பிரிவாகக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று போலியான செலவுகளுக்கெல்லாம் கடன்பட்டு கொடுக்கமுடியாமல் ஏமாற்றித்திரியும் சில கும்பல்களால் உண்மையான தேவையுள்ளவர்களுக்கும் கடன்பெற முடியாத நம்பிக்கொடுக்காத நிலை தோன்றியுள்ளது. பொலிசும், சமாதான நீதிமன்றங்களும், பள்ளிவாசல்களும் நீதிதேடி கடன்கொடுத்தவர்கள் அலைந்துதிரிவதைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. வங்கிக் காசோலைகளைக் கூட உரிய திகதியில் கவனித்து பணத்தை வைப்புக்கிடாது மிகவும் கஷ்டப்படும் பலர்களை நாம் சந்திக்கின்றோம். கடன் எடுப்பவர்கள் உரிய நேரத்தில் கடனைக்கொடுக்காததால் சிறிய முதலுடன் தொழில்நிலைகளில் ஈடுபடுபவர்கள் கடைசியில் கடையைப்பூட்டி விட்டு எங்காவது ஓடி ஒழிக்கின்ற ஒரு மனச்சஞ் சலமான நிலை சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கின்றன. நம்மைப்போன்று தான் மற்றவர்கள் என்ற எண்ணம் மனதில் தோன்றினால் ஏமாற்றும் எண்ணம் வராது. கடன்கொடுப்பதால் கடனைப் பெற்றுக்கொண்டவர்களுக்குக் கருணை காட்ட வேண்டும். கடனைப்பெற்றவர்களும் கொடுக்க முடியாத கட்டத்தில் உரியவரிடம் சென்று தனது தாமதத்தை தயவாகக் கேட்டுக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். அன்பாக பண்பாக ஒருவரிடம் கதைத்து தனது கடனை உடனே தரமுடியாத உண்மை நிலையை எடுத்துரைக்கும் போது கருணையுள் ளவன் நிச்சயமாக தவணை கொடுக்கத் தவறமாட்டான்.

கடன்காரர்களுடன் இலகுவாக நடந்துகொள்பவர்களின் சிறப்பான நிலை பற்றி செம்மல் நபி சொன்னார்கள், அல்லாஹுத்தஆலா எவர்களுக்கு செல்வங் களை வழங்கியிருந்தானோ அவ்வடியார்களில் ஓர் அடியானை கியாமத் நாளில் கொண்டுவரப்படும். அப்பொழுது அந்த அடியானிடம் நீ உலகில் என்ன அமல் செய்தாய்? என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு அவன் (அன்று யாரும் அல்லாஹ்விடம் உண்மையை மறைக்க மாட்டார்கள்). என் இரட்சகனே எனக்கு நீ உன் செல்வங்களை வழங்கியிருந்தாய். அதைக்கொண்டு நான் மக்களிடம் வியாபாரம் செய்து வந்தேன். என் குணம் கொடை வழங்குவதாகும். வசதியானவரிடம் இலகுவாக நடந்துகொள்வேன். கஷ்டப்படும் கடனாளிக்கு தவணை கொடுப்பேன் என்றான். உடனே அல்லாஹுத்தஆலா உன்னைவிட நான் கொடையளிப்பவன் ஆகவே மலக்குகளே என் அடியானின் பாவங்களை தள்ளுபடி செய்வீர்களாக! என்று கூறுவான். **(ஆதாரம் : முஸ்லிம்)** கடனுள்ள மையித்தை நபிகள் நாயகம் (ஸல்) தொழுவிக்க முன்நிற்கவில்லை. அந்தக் கடனை யாராவது பொறுப்பேற்று பொறுப்புணர்ச்சியுடன் நடக்க போதனை செய்தார்கள். கடுமையான கடன்பழுவுள்ளவர்களுக்கு சில துஆக்களையும் நபிகள் நாயகம் (ஸல்) கற்றுக்கொடுத்தார்கள். அந்த துஆக்களை ஓதி பல ஸஹாபாக்கள் சிரமங்களிலிருந்து சீர்மையடைந்தார்கள் என்றும் கடன் எடுப்பது போன்று கடனைத் திருப்பிக்கொடுக்கவும் தெரிந்துகொள்வோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**04-04-2004**





## 47. தர்மம் தலை தாக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும் !

**செ**ல்வம் அல்லாஹ்வினால் வழங்கப்படும் பெரும் செல்வமாகும். அருட் கொடையாகும். அல்லாஹ்-தான் விரும்புவர்களை செல்வந்தனாக்குகின்றான். சிலர் வறுமையைக் கொண்டு சோதிக்கப்படுகின்றார்கள். செல்வத்தை அல்லாஹு த்தஆலா மனிதனுக்கு அருளாகவும் சிலர்களுக்கு சோதனையாகவும் கொடுத்து விடுகின்றான். இறைவன் தந்த செல்வத்தை தான் மட்டும் அனுபவியாது துன்பத்தில் துயருறுவோருக்கும் நுகர்ச்சிசெய்யக் கொடுக்கின்ற போது செல்வம் பெருக்கெடுக்கின்றது. கஞ்சத்தனம் செய்து கஞ்சிக்கும் வாழ்வளிக்காது வாழ நினைப்பவர்களை அல்லாஹ்வும் தனது அருள்பார்வையிலிருந்து திருப்பி விடுகின்றான். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்வை ஆராய்ந்து பார்ப்போ மானால், அவர்கள் எவருக்கும் உதவிசெய்யும் உத்தமசீலராகத் திகழ்ந்திருக் கின்றார்கள். "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எதனைக் கேட்டாலும் அவர்கள் ஒருபோதும் இல்லையென்று சொல்லவில்லை" **(அறிவிப்பர் : ஜாபிர் (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)**

நல்லன செய்பவர்களுக்கு இறைவனின் கருணை எப்போதும் கிடைத்துக் கொண்டே இருக்கும் - நல்வழியில் தனது பொருளாதாரத்தைப் பயன்படுத்தாதவர் களுக்கு அல்லாஹ்வின் சோதனை தொடர்ந்து கொண்டே இருக்கும். கண்மணி நாயகம் (ஸல்) கருத்துத் தெரிவித்தார்கள், "ஒவ்வொரு நாளும் அடியார்கள் காலையில் எழுந்ததும் இரண்டு மலக்குகள் இறங்காமல் இருப்பதில்லை. அவர்களில் ஒருவர் கூறுவார், யாஅல்லாஹ் (நல்வழியில்) செலவழிக்காமல் தடுத்துக்கொள்பவருக்கு நீ அழிவைக் கொடுப்பாயாக! **(அறிவிப்பர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** காலையில் எழும்பொழுது நல்ல காரியங்களுக் காக கைகொடுத்து உதவுவேன் என்ற எண்ணம் இயற்கையாகத் தோன்ற வேண்டும். நமது முன்னோர்கள் எப்போதும் நன்மையைச் செய்யவே முயற்சித் தார்கள். பாடசாலையைக் கட்டுதல் - மத்ரஸா அமைத்தல் - மஸ்ஜிதை நிர்மாணித்தல் - வைத்தியசாலையை ஏற்படுத்துதல் - பாதைகளைச் செப்பனிடுதல் - கிணறுகளைத் தோன்றுதல் போன்ற நல்ல பணிகளை நாளும் செய்தார்கள். இதற்கான பணங்களைத் தங்கள் தொழிலகங்களிலிருந்தும், விவசாய நிலங் களின் வருமானங்களில் இருந்தும் செய்யத்துணிந்தார்கள். காரியங்களில் வெற்றியும் கண்டார்கள். அதனால் அவர்களின் பெயர்கள் இன்னும் நினைவு கூறப்படுகின்றன.

முதல் காலத்தில் வாழ்ந்த மனிதர்களது வாழ்வில் முன்னேற்றமான எண்ணம் களைகட்டி நின்றது. இன்று பொதுவேலைகள் என்றாலே கசந்து வேப்பஞ்சாற்றை வைகறைப்பொழுதில் குடிக்க நேரிட்ட ஓர் அடியானின் மனநிலையில் இருப்பதைக் காண்கிறோம். ஹலாலான உழைப்புக்கள் குறைந்து - தேடலில் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடான முறைகளின் காரணமாக எந்த வேலையைச் செய்தாயினும் பொருளாதார (புறக்கத்) அபிவிருத்தி குறைந்து காணப்படுவதைக் காண்கின்றோம். ஒரு வேலைக்கு உதவ யோசித்தால் இன்னுமொரு வேலைக்கு உதவ முடியாமல் தவித்து தடுமாறுவதை இன்றைய நாட்களில் காண்கின்றோம். நமது முன்னோர்கள் சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து பொதுநோக்குடன் எப்போதும் எவருக்கும் உதவிசெய்யும் மனப்பாங்கைக் கொண்டிருந்தனர். அதனாற்றான் அன்றைய காலங்களில் இனத்துவேஷம் கொப்பளிக்கப்படாமல் இருந்தது. யாருக்காவது துவேஷம் துப்பவேண்டும்போல் இருந்தால் வெற்றிலை பழக்கம் வைத்து வேறாகத்துப்ப வைத்தபாணியில் பணியாற்றி விடுவார்கள். முழு வாழ்க்கையையும் சமூகநலனுக்காகச் செலவு செய்த மூதாதையர்களின் வழியில் நாமும் ஏன் இட்டுச்செல்லக் கூடாது. “ஒரு மனிதன் நபிகளார் (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தின் அமல்களில் எது மிகச்சிறந்தது என்று கேட்டார். அதற்கு அவர்கள் பிறருக்கு நீ உணவளிப்பது, நீர் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் நீ ஸலாம் உரைப்பதுமாகும் எனப்பதிலுரைத்தார்கள். **(அறிவிப்பவர் : அம்றிப்னு ஆஸ் (றலி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)**

பிறமனிதருக்கு உணவளிப்பது பெரும் சுன்னத்தான அமலாகும். இப்றாஹீம் நபி (அலை) அவர்கள் அடிக்கடி விருந்துகொடுப்பவராக இருந்தார்கள். இன்று பலர் விருந்துபடைப்பதை எதிர்க்கின்றனர். காரணங்களைத் தெளிவாக வெளியிடாது கருத்துக்களை முன்வைப்பதில் அர்த்தமில்லை. வீணாகச் செலவு செய்து விருந்துபடைத்து ஊதாரித்தனம் செய்வதை இஸ்லாம் ஒருபோதும் விரும்பவில்லை. ஏழைகள் அழைக்கப்படாத விருந்துகள் இஸ்லாத்தின் பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும். நாம் நல்ல நிகழ்வுக்காக சமைக்கின்ற போது ஏழைகளையும் வழிப்போக்கர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அநாதை இல்லம், முதியோர் இல்லம், வலதுகுறைந்தோர் வளரும் மடங்கள், மத்ரஸா விடுதிகள் ஆகியவற்றுக்கும் நமது விருந்துகள் சென்றடையுமானால் உண்மையான பிரயோசனத்தை ஈட்டித்தரும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

ஸதகா என்ற தர்மம் ஆபத்துக்களைத் தட்டிவிடும் என்பது அண்ணல் நபியின் வாக்காகும். கொடுக்கக் கொடுக்க செல்வம் பெருகும். இறைத்த கிணறு ஊறும்; இறையாத கிணறு நாறும் என்றும் கொடுக்கும் கரமுடையவர்களாக மாறுவோம். “இனைதுணைத் தென்ப தொன்றில்லை விருந்தின் துணைத் துணை வேள்விப்பயன்” (குறள்) விருந்திடுதல் என்பது பெரும் செலவு செய்து உயர்ந்த உண்டி என்ற கணக்கில்லை. எந்த அளவுக்குச் செய்தாலும் அந்த அளவுக்கு நல்ல காரியம் செய்த பலனுண்டு என்பது இக்குறலின் விளக்கமாகும்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**11-04-2004**





## 48. பெண்கள் கத்னா விவகாரம் பிழையாகப்பேசப்படுவது உண்மையா?

பெண்களுக்கான விருத்தசேதனம் உலகெங்கும் மேற்கொள்ளப்படுகின்றது. விருத்தசேதனம் என்பது கத்னா, சுன்னத் என்ற பெயர்களிலும் அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த சுன்னத் என்பது ஒரு பெண்ணின் பெண் உறுப்பில் உணர்ச்சிமிகுந்த பகுதியான மகளிர்கந்து (Clitoris) கத்தரிக்கப்படுகின்றது. இந்த சுன்னத் வைபவம் உலகெங்கும் சமய அடிப்படையிலும் கலாச்சார கௌரவங்களுடனும் செய்யப்படுகின்றது. இதன் யதார்த்தம் பெண்களின் அளவு கடந்த செக்ஸைக் குறைப்பதற்காகவும் காமக்கண்ணுடன் பெண்கள் காண்பதை தவிர்ப்பதற்காகவும் பெண்ணின் முகக்கண்வெட்டாகவும் முகமலர்ச்சியாகவும் தோன்ற வேண்டும் என்பதற்காக இந்த கத்னா கத்தரிப்பு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த கத்னா கத்தரிப்பின் மூலம் பெண்கள் முற்றாக ஆசையை இழந்து தனது கணவனின் இன்பத்தைப் பூர்த்திசெய்ய முடியாது தவிப்பதாகவும் சில இடங்களில் இளம்வயதில் இந்த அமைப்பை மேற்கொள்வதனால் வனிதயர் வலியோடும் துன்பத்தோடும் துயருறுவதாகவும் குரல் கொடுக்கப்படுகின்றது.

வயது முதிர்ந்த பாட்டிகள் இப்படியான அறுவைச் சிகிச்சைக்கு அமர்த்தப்படுவதாகவும் ஆடாமல் அசையாமல் பக்கத்தில் உள்ளவர்கள் பலமாகப் பிடித்துக் கொள்வதும் மயக்க மருந்தின்றி அறுவைச் சிகிச்சை அனுபவம் எதுவுமின்றி அந்த அம்மா அபத்தமான அநியாயத்தை செய்வதாகவும் சர்ச்சைகள் தொடங்கியிருக்கின்றன. சுன்னத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆபிரிக்கப் பெண்கள் 74 ஆயிரம் பேர் பிரிட்டனில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. இந்நிலை 28 ஆபிரிக்க நாடுகளில் காணப்படுகின்றது. எகிப்தில் 15 வயதுக்கும் 40 வயதுக்குமிடைப்பட்ட பெண்களில் 97 சதவீதமானவர்கள் இந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டு கத்னா செய்திருப்பதாக மனிதஉரிமை அமைப்பான மன்னிப்புச் சபையின் ஓர் அறிக்கையைப் படிக்கிறோம். சோமாலியா, இந்தியா, இலங்கை, சவூதிஅரேபியா போன்ற அரபு நாடுகளிலும் சிறு வயதிலேயே கத்னாச் செய்யப்படுகின்றது. நைஜீரியா, கென்யா, எரித்திரியா போன்ற நாடுகளில் எந்த வயதாகிலும் இவ்வைபவம் நடந்தேறுகின்றது. உலக சுகாதார அமைப்பின் தகவலின்படி உலகம் முழுவதும் ஏறத்தாழ 138 மில்லியன் பெண்கள் சுன்னத் செய்யப்பட்டுள்ளார்கள். பிரிட்டனில் இதனைச்சிலர் காட்டுமிராண்டித்தனம் என்றும் விசனித்து வசனம் வெளியிட்டுள்ளனர். பிரிட்டனில் சுன்னத் செய்யும் பெண்களுக்கும் அதனைத்தூண்டுவோருக்கும் ஐந்து முதல் பத்து வருடங்கள் வரையிலான சிறைவாசம் செய்ய வேண்டும் எனவும் சட்டம் வகுத்துள்ளனர்.

இந்தப் பெண்கள் சுன்னத் பற்றி இஸ்லாம் என்ன சொல்கிறது? இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் என்ன? என்பதை ஆய்வோம். பெண்களுக்கு கத்னா செய்யும் பெண்மணியைப் பார்த்து, நீங்கள் கத்னாச் செய்தால் அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவிடாதீர்கள். குறைவாக அறுப்பதுதான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இன்பமளிக்க வல்லது என்று நபிமணி (ஸல்) நவின்றார்கள். **(அறிவிப்பவர் : உம்முஅதியா (றலி) ஆதாரம் : அபூதாவூத் பைஹகி)** மாநபி (ஸல்) அவர்களின் மனைவி மைமூனா (றலி) அவர்கள் கத்னாவைச் செய்யும் பெண்களைக் கண்டால் தாயே! அளவோடு எடுங்கள் அதுவே முகமலர்ச்சியையும் ஆண்களுக்கு இன்பத்தையும் அளிக்கும் என்று கூறுவார்கள். **(ஆதாரம்: துஹ்பதுல்மௌதூத்)** ஆண்களும் பெண்களும் விருத்தசேதனம் செய்துகொள்வது வாஜிபாகும் என்று இமாம் ஷாபியி அஹமத் இப்னு ஹம்பல் (ரஹ்) ஆகிய இருவரும் சுன்னத்தாகும் என்று இமாம் ஹஸனுள் பஸரி, இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக் இப்னு அபூமூஸா (ரஹ்) போன்வர்களும் தீர்ப்பளித்துள்ளார்கள். **(ஆதாரம் : அஷ்ஷரஹு ல் கபீர் - ஷரஹு ல் இனாயா - அல்பிக்ஹு ல் வாழிஃ - அல்புஜைரமி)** போன்ற நூல்களாகும்.

பெண்களுக்கு இத்தகைய நலம் மிகச்சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. நபிகளார் (ஸல்) ஒன்றைச்சொல்ல - மௌட்டீகமாக கூடுதலாக அறுவை செய்து பெண்களை செக்ஸில்லாமல் ஆகச்செய்வது பாவமானதாகும். எப்படி இந்த சிகிச்சைகளைக் கையாள வேண்டும் என்பதை மிக நுணுக்கமாக யோசிப்போ மானால்...... பெண்களது கண்ணிகெட்டு விடாது மேற்பகுதியில் உள்ள பீடத்தை மாத்திரம் எடுப்பதுதான் ஹப்ழ் கத்னாவாகும் என்று இமாம் ஸப்பாக் (ரஹ்) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். **(ஆதாரம் : அல்ஷாமில் துஹ்பா)** நபி நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இந்த பெண்கள் கத்னா நடைபெற்றுக் கொண்டிருந்தது. இது மிருகத்தனமான செயல் அல்ல. ஆனால் ஒன்று சொல்லப்பட்டிருக்க ஒன்றை சமுதாயம் செய்யப்போவதில்லையே, இத்தகைய விபரீத விளைவுக்கு சமுதாயம் சிக்கிக்கொள்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், ஆண் பெண் (இருபாலாரின்) கத்னா செய்யப்பட்ட இடங்கள் சந்திக்குமாயின் குழிப்பது கடமையாகும். **ஆதாரம் : இப்னுமாஜா அஹமத்)** இதன்மூலம் பெண்களின் கத்னா நிரூபனமாகின்றது. இதனை சிறுவயதில் நிறைவேற்றி விடுவது நோவு வலியிலிருந்து ஓரளவு பாதுகாத்துக் கொள்ளலாம். வயது வந்து விழிப்புடன் செய்யப்படும் வேளை கொஞ்சம் தாக்கத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. பெரிய வயதாகியும் ஒருவர் கத்னாச் செய்யப்படாமல் இருப்பின், வாய்ப்பும் வசதியும் ஏற்படுகின்ற போது அதனைச்செய்து கொள்வதையே இஸ்லாம் வரவேற்கின்றது. இறுதியாக ஆய்வின் முடிவு இதுதான். ஒரு பெண் 30 அல்லது 40 வயதாகியும் கத்னாச் செய்திருக்கவில்லை. எனினும், செய்துகொள்ளும் ஆற்றல் அவரிடம் இருந்தால் செய்துகொள்வதே ஏற்றமானதாகுமென அஹமத் (ரஹ்) கூறுகின்றார்கள். **ஆதாரம் : துஹ்பா)** பத்வா முஆஸறாவில் பெண் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்க கத்னாச் செய்ய வேண்டுமென கலாநிதி யூசுப் அல்கர்ளாவி கூறுகிறார்கள். (முஆஸரா)

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**18-04-2004**





## 19. பதவி கேட்டு அடம்பிடிப்பவர்களுக்கு பதவிகொடுப்பது இஸ்லாமாகுமா?

பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்று ஒரு வாய்ப்பேச்சு உலாவி வரும் - இன்று பதவி என்றால் எவர்தான் ஏற்க மாட்டார் என்று கேட்கத் தோனுகின்றது. பதவிக்காக பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வோர் இன்று பல்லாயிரமாகப் பெருகிவிட்டார்கள். பசித்திரு, தனித்திரு, விழித்திரு பதவியை அடையலாமென சான்றோர்கள் சொன்னது முற்றிலும் உண்மையானது. பதவிக்காகத்தான் இன்று பெஜிரோக்கள் வட்டமிடுகின்றன. கணனிகள் கலகலக்கின்றன. தொலைக்காட்சிகள் துணிந்து காட்சிகளை வழங்குகின்றன. வானொலிகள் வளிமண்டலத்தினூடாக வர்ணனை செய்கின்றன. பத்திரிகைகள் வர்ணப்படமிட்டு முத்திரை பதிக்கின்றன. மேடைகள் ஜோடனையில் மிளிர்கின்றன.

தாங்களே காலமெல்லாம் பதவியிலிருக்க வேண்டுமென மூக்கில் இருந்து வரும் மூச்சுக்கள் கூட பேச்சுக்கொடுக்கின்றது. தகப்பனை வெல்ல வைக்க பிள்ளையும் - பிள்ளையை வெல்ல வைக்க தகப்பனும் சொல்ஜாலம் பொழிகின்ற கருமுகில் கட்டாத மழை வெள்ளம் எல்லாவற்றிலும் வெளிவராத ஒரு சுயநலம் வேரூன்றி இருப்பதைக் காணலாம். பதவியில் ஒருவரை அமர்த்துவதற்கு பட்டாசு கொழுத்துவோரும் மதில்சுவர்களின் முதுகினில் சுவரொட்டி ஒட்டுவோரும், மேடை போடுவோரும், இரவு பகல் விழிப்பவரும், நாக்கைக் குடியில் நனைத்துக் கொள்பவர்களும், ஒலிபெருக்கியில் ஊர்ஊராய் பிரசங்கம் செய்வோரும் இல்லாமலில்லை. இத்துணை உட்சாக அலைகளின் மத்தியில்தான் ஜனரஞ்சக மான பதவியாளர்கள் பதவிக்கு வருகின்றனர். பதவிதர வேண்டும் என்றே முதலில் தானாகக் கேட்டு விண்ணப்பித்து நிற்கின்ற இன்றைய சூழலில் இஸ்லாம் இதுபற்றி என்ன சொல்கின்றது என்பதை சற்று ஆராய்வோம்.

அபூமூஸா அல்அஷ்அரி (றலி) அறிவிக்கின்றார்கள், அண்ணல் நபியின் சபைக்கு நானும் எனது சிறிய தந்தையின் இரு மகன்களும் சென்றோம். அப்போது என் சிறிய தந்தையின் மகன்களின் ஒருவன், யாரசூலல்லாஹ்! அல்லாஹு'த்தஆலா தங்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ள பகுதிகளில் சிலவற்றுக்கு எங்களை ஆட்சித்தலைவர்களாக நியமணம் செய்வீர்களாக! என்று கூறினார். அதுபோன்றே மற்றவரும் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக இப்பதவியை கேட்கின்ற எவருக்கும் இப்பதவியை ஆசைப்படுகின்ற எவருக்கும் நாம் இப்பதவியை அளிக்க மாட்டோம் எனக்கூறிவிட்டார்கள். **(ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** இந்த ஹதீஸின் விளக்கத்தை யோசனைக்கு எடுப்போமாயின், பதவியைக் கேட்டு நிற்பவர்களுக்கு பதவியை வழங்குவதற்கு பயகம்பர் நபி (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. இன்று பதவியைக் கேட்டு அடம்பிடிப்பவர்களுக்கு பதவி வழங்கப்படுகின்றது என்றால் அது அத்தனையும் அண்ணல் நபியின் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலுக்கு மாற்றமானது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அதிகாரத்தில் அமர்த்தப்படுவோர் அவர்களின் வேலைகளை செவ்வனே செய்வதாயின், அவர்களுக்கென அமர்த்தப்படும் செயலாளர் அல்லது ஆலோசகர் மிகப்பகுத்தறிவு தொழிற்படுபவராகவும் அன்பும் அறிவும் நீதியும் நியாயப்படுத்தும் தன்மையும் அவரிடம் காணப்படல் வேண்டும். அன்பையும் அறிவையும் புகட்டுபவராக ஆலோசகர் அமைந்தால் நிச்சயம் அந்த அதிகாரத் தன்மையில் உள்ளவர் சிறந்து செயற்படுவார். பிழையான ஆலோசகராக இருந்தால் அத்தனையும் குறுக்கான வழிகளிலேயே நறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அல்குர்ஆனின் ஆணையும்கூட இதனை ஒத்தே காணப்படுகின்றது. "நெருங்கிய நண்பர்கள் அன்றைய நாளில் சிலர் சிலருக்கு விரோதிகளாக ஆகிவிடுவர், இறையச்சம் உடையவர்களைத் தவிர்த்து" **(அல்குர்ஆன் : 43:67)**

அரசனுக்கு மந்திரி சரியாக அமைய வேண்டும். அமைச்சருக்கு சீரான செயலாளர் சேர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் நன்மைசெய்யக் கூடிய நாகரீகமான ஓர் அமைப்பாளரை அநீதியற்ற ஆட்சியாளரைக் காணமுடியும். இதுபற்றி இறைத்தூதரின் இனிமையான கூற்றைப்பார்ப்போம். "இரண்டு வகை நெருங்கிய தோழர்கள் இருவரைத் தவிர அல்லாஹுத்தஆலா எந்தவொரு நபியையும் அனுப்பவில்லை. எந்தவொரு கலீபாவையும் (பிரதிநிதியையும்) ஆக்கவில்லை. 1) ஒருவகை நெருங்கிய தோழர்கள் நன்மையை ஏவியும் அதனைத்தூண்டிக் கொண்டும் இருப்பார்கள். மற்றொரு வகை நெருங்கிய தோழர்கள் தீமையை ஏவியும் தீமையைத்தூண்டிக் கொண்டும் இருப்பார்கள். இந்நிலையில் அல்லாஹ் யாரைப்பாதுகாத்தானோ அவரே பாதுகாக்கப்படுவோர் ஆவார். **(அறிவிப்பார் : அபூஹுறைரா (றலி) ஆதாரம் : புகாரி)** தலைமைத்துவத்திற்கு வருபவர்கள் எப்படியிருக்க வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. ஒரு கூட்டமைப்பு இல்லாமல் இஸ்லாம் இல்லை. ஒரு தலைவர் இல்லாமல் கூட்டமைப்பு இல்லை. ஒரு தலைவர் வணக்கவழிபாடு இல்லாமல் இல்லை என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள்.

இன்றைய தலைவர்களிடம் இஸ்லாம் சம்பூரணமாகப் பின்பற்றப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. இஸ்லாம் தலைமைத்துவவாதிகளிடம் வரவேண்டும். அதன்மூலம் மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும். அவரிடம் இஸ்லாமிய அமைப்பு குறைபாடாக இருந்தால் அவரின் செயலாளர் மூலமாவது இஸ்லாமிய காரூன்னியம் உணர்த்தப்படல் வேண்டும். "ஒரு தலைவருக்கு அல்லாஹ் நன்மையை நாடினால் அவருக்கு உண்மையான அமைச்சரை ஆக்குவான் (அவர் எவ்வாறாக இருப்பார் என்றால்) அவர் (தலைவர்) மறந்து விட்டால் அவர் (அமைச்சர்) அவருக்கு நினைவூட்டுவார். அவர் (தலைவர்) கூறினால் அவர் (அமைச்சர்) அவருக்கு உதவிசெய்வார். அல்லாஹ் அந்தத் தலைவருக்கு நன்மையால்லாததை (தீமையை) நாடினால் அவருக்கு கெட்ட அமைச்சரை ஆக்குவான். அவர் மறந்துவிட்டால் அவர் நினைவுபடுத்த மாட்டார். அவர் கூறினால் அவருக்கு உதவமாட்டார் என நாயகம் (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பார் : ஆயிஷா றலி) ஆதாரம் : அபூதாவூத்)**

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**25-04-2004**





## 10. ரபியுல் அவ்வல் வசந்தத்தின் வசந்தம் ரஹ்மத் நபி பிறந்த மாதம்

**ஆ**ப்ரகாவின் யானைச்சண்டை நடைபெற்று ஐம்பது நாட்களுக்குப் பின்னர் ரபியுல் அவ்வல் மாதம் 12ம் திகதி கி.பி. 571 ஏப்ரல் 20ம் திகதி திங்கட்கிழமை காலைநேரத்தில் ஆமினா அம்மையாருக்கும் அப்துல்லாஹ் என்பவருக்கும் அருமைப்புதல்வராக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். பிறக்கும் போதே தந்தையை இழந்து விட்ட முஹம்மது நபியவர்கள் பிறந்த செய்தி பாட்டானார் அப்துல் முத்தலிபின் காதுக்கு எட்டியதும் அவர் அடைந்த சந்தோசத்திற்கு அளவில்லை. உடனே அவர் வந்து குழந்தையை அணைத்து தன் மடியில் அமர்த்தி முத்தமிட்டு நேராக கஃபதுல்லாவிற்கு கொண்டுபோய் வலம் வந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்.

உலகத்தின் உயர்தரமான சிந்தனையின் சிகரமான உத்தமக் குழந்தை தாயிடத்திலும் துவைபா அன்னையிடத்திலும் அமுதூட்டப்பட்டது. பிறந்து ஏழாம் நாள் அரபு நாட்டின் வழமைப்படி அப்துல் முத்தலிப் தமது வம்சத்தினருக்கு பெரிய விருந்தொன்றை ஏற்படுத்தி அந்த சபையில் முஹம்மது (ஸல்) என்ற பெயரைச்சூட்டினார். அரபுநாட்டின் பெரிய குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளுக்கு பக்கத்து கிராமத்திலுள்ள செவிலித் தாய்மார்களிடம் பாலூட்டி வளர்க்கும்படி ஒப்படைப்பது வழக்கமாக இருந்தது. இரண்டு ஆண்டுகள் தங்களிடம் தரப்படும் குழுந்தைகளை சிறப்பாக வளர்த்து உரியவர்களிடம் ஒப்படைத்து ஊதியங்களைப் பெற்றுக்கொள்வார்கள். இத்தகைய அமைப்புக்கமைய பனீஸஅத் வம்சத்தைச் சேர்ந்த ஹலீமா அம்மையாரிடம் பாலூட்ட முஹம்மத் (ஸல்) அவர்களை ஒப்படைத்தார்கள். அத்தகைய செவிலித்தாய் ஹலீமா அம்மையார் எப்படியான கட்டத்தில் குழந்தையைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஹலீமா அம்மையார் கதைப்பது காதுக்குள் கேட்கிறது. மக்காவிலுள்ள செல்வச்சீமான்களிடம் பிள்ளைகளைக் கொண்டுவந்து பால்கொடுத்துப் பராமரிக்கலாம் என்று ஊரைவிட்டு கிளம்பிவந்தேன். நடுவழியில் எனது கோவேறு கழுதை களைத்துவிட்டது. அங்கு நான் அதிகநேரம் தாமதமாகி விட்டேன். அப்போது சிறிய தூக்கம் ஆட்கொண்டது. அதிலொரு கனவு, பழங்கள் நிறைந்திருந்த ஒரு மரம் அதன் கீழ் நான் இருக்கின்றேன். என்னைச்சுற்றி பனீஸஅத் வம்சப்பெண்களும் இருக்கின்றனர். அதிசயமாக அம்மரத்திலிருந்து ஒரு பேரீச்சம் பழம் என் வாயில் விழுகின்றது. அக்கனியின் இனிமை சுவையானது. நீண்டநேரம் என்நாவில் அக்கனி சுவைபடுவதை நான் கண்டேன். ஞாயிற்றுக்கிழமை நாள் என்னை அறியாது விடைபெற்று திங்கட்கிழமை மக்காவுக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கு முன்பதாகவே பனீஸஅத் கோத்திரப் பெண்கள் மக்கா சென்று அங்குள்ள செல்வந்தர்களின் செல்வக் குழந்தைகளை வளர்ப்பதற்குப் பாரமெடுத்து மிகக் களிப்போடு சென்றுவிட்டனர். இன்னும் எனக்கு ஒரு குழந்தை கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பல நாட்கள் தங்கியிருந்தும் குழந்தையொன்று கைக்குக் கிடைக்க வில்லை. மனசு - வருத்தத்திலேயே தோய்ந்து கிடந்தது. அப்போது ஒரு பெரியவர் என்னிடம் வருகின்றார். ஒரு குழந்தையைப் பாரமெடுக்க யாராவது பெண்கள் உண்டா? எனக்கேட்கின்றார். நான் வந்தவரின் பெயரைக் கேட்டேன். வாய் நிறைய அப்துல் முத்தலிப் என உதிர்த்தார். “நான் உன்னிடம் ஒரு அநாதைக் குழந்தையைக் கையளிக்கப்போகின்றேன். பனூஸஅத் கோத்திரப் பெண்களிடம் அநாதைக் குழந்தையைப் பாரம்கொடுக்கப் பார்த்தேன். அவர்கள் அநாதைக் குழந்தையை எடுத்தால் பணம் கிடைக்காதென பதிலுரைத்துப் போய்விட்டார்கள். நீங்கள் அக்குழந்தையை ஒப்புக்கொள்ளலாமா? என அன்புடன் கேட்டுக்கொண் டார் அப்துல் முத்தலிப் - தனது கணவருடன் ஆலோசனை நடாத்தினார்கள் ஹலீமா அம்மையார். கணவனும் இசைந்தார். ஆனால் ஹலீமாவின் சகோதரியின் மகன் மாத்திரம் மறுத்தான். பனூஸஅத் பெண்கள் எல்லாம் பெரிய இடத்துப் பிள்ளைகளையெல்லாம் அழைத்துச்சென்று கைநிறையப் பணம் எடுக்கும் போது நீங்கள் மட்டும் ஏன் அநாதைப் பிள்ளையை எடுக்க வேண்டுமென அடம்பிடித்தார்.

ஹலீமாவின் நாவில் வந்த கருணையான பதிலின் மூலம் அக்கா மகனும் தக்க சமயத்தில் மௌனித்தான். அப்துல் முத்தலிப் அவர்களுடன் வீட்டுக்குச் சென்று முஹம்மது (ஸல்) எனும் குழந்தையை பாரமெடுத்து ஊருக்குத் திரும்பினேன். ஹலீமாவின் வீட்டில் குழந்தை வளர்கிறது. எல்லாக் குழந்தைகளை விடவும் அதிசயமான வளர்ச்சி. குழந்தைப் பராயத்தில் அதிசயமான பல நிகழ்வுகள் இடம்பெற்றன. குழந்தையைப் பாரமெடுத்த நாள் முதல் ஹலீமா நாயகியின் வீட்டில் இருந்த கஷ்டங்களும் துன்பங்களும் காற்றுடன் கைகோர்த்தன. செல்வம் பெருகியது. வீட்டில் இருந்த ஆட்டு மந்தைகளின் மடிகளெல்லாம் பால் சுமந்தன. ஹலீமா நாயகியின் அகமும் முகமும் மலர்ந்தன.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அழகென ஒளிரும் முஹம்மதை ஹலீமா நாயகி மக்காவுக்கு எடுத்துச் சென்று தாயார் ஆமினாவிடமும் பாட்டனார் அப்துல் முத்தலிபிடமும் காண்பிப்பார்கள். இரண்டு வயதானதும் பால்கொடுப்பதை நிறுத்தி மக்காவுக்கு தாயிடத்தில் ஒப்படைக்க வந்தார்கள். குழந்தை ஆரோக்கியமாக இருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்ட தாயார் மக்காவின் காலநிலை சீராக இல்லாததனால் குழந்தைக்கு ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் என நினைத்து குழந்தையைத் திருப்பிக்கொண்டு சென்று ஹலீமாவின் வீட்டிலேயே வளர்க்கும் படியும் சில காலம் சென்று அருமை மகனைத் திருப்பி அழைத்துக் கொள்வதாகவும் சொல்லி ஆமினா அம்மையார் அனுப்பி வைத்தார்கள். அண்ணல் நபியவர்களுக்கு வயது மூன்று. ஹலீமா நாயகியின் பிள்ளைகள் ஆடு மேய்க்கப் போவதைக்கண்டு தானும் போக வேண்டுமென ஆசைப்பட்டார்கள். அதிகமான நபிமார்கள் ஆடு மேய்த்திருக்க அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களிடம் மட்டும் ஏன் அந்த ஆற்றல் அற்றுப்போக வேண்டும். ஹலீமா நாயகியின் பிள்ளைகளோடு ஆடுமேய்க்கச் சென்ற போதும் அதிசயமொன்றும் நிகழ்ந்தது. அமரர்கள் அவர்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தினார்கள்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**02-05-2004**





## 51. நீதி உலகில் திசைமாறினால் நிம்மதி குலைவது உண்மை!

**வெ**ய்யிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். அநீதி ஆக்கிரமிக்கின்ற போதுதான் நீதியின் நிழல் நியாயப்படுத்தப்படும். நீதி மனிதர்களிடம் இருக்கின்றது என்பதை நீதிவான் சொல்ல வேண்டும். நியாயமான நீதி நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியாகிய அல்லாஹ்விடம் மாத்திரம்தான் இருக்கின்றது. நீதிமன்றத்தில் தஸ்தாவேஜுகளை மேல்வைக்கவும் கீழ்வைக்கவும் நீதிமன்றத்திலே அதிகாரிகள் உள்ளனர். வழக்கின் வடிவங்களை வடிவாகக் கையாடிவிடுபவர்களும் இருக்கத் தான் செய்கின்றனர். நீண்டு செல்லும் வழக்குகளில் நேர்மையான தீர்வுகாண முடியாமல் நீதிமன்றங்களையே தீயிட்டுக்கொழுத்துவோரும் இருக்கின்றனர். சில நேரங்களில் நீதிபதியின் முன்பதாகவே ஜாதிச் சண்டை தீயிட்டு எரிகிறது. எஞ்சிய எலும்புக்கும் எரிந்த சடலங்களுக்கும் நீதிபதி விளக்கம் எழுதி விடை பெற்றுச்செல்கின்றார். மாவட்ட நீதிமன்றங்களில் மன்றாட முடியாத பிரச்சினைகள் உயர்நீதிமன்றத்தில் உண்மைக்காக ஊமையாகி நிற்கின்றன.

சட்டத்தை சட்டத்தரணிகள் கட்சிதமாகக் கையாளுகின்றனர். சட்டத்திற்கு சட்டத்தரணிகளே சாணிபூசுகின்றனர். சட்டம் தெரியாத சாதாரண மகன், பணத்தை வாரி இறைத்து வாயடைத்து நிற்கின்றான். நீதி எப்படிப்போனாலும் வழக்கு வென்றுவிட்டால் வானத்திற்குப்போய் சந்திரனைத் தொட்டு வந்த சந்தோஷத்தை அடைகின்றான். வழக்கில் தோற்றுப்போனவன் பூமி ஆராய்ச்சிக்குப் போய் புதைகுழியில் புதையுண்ட போதனையாளனாக புறம்ஒதுங்கி நிற்கின்றான். நீதிமன்றத்தில் என்ன நீதி? இறைவனின் நீதியே இவர்களுக்கு இறங்க வேண்டுமென ஏங்கி நிற்கின்றனர். அநீதிக்கு நீதி ஆண்டவனால் வழங்கப்படுவதை அன்றாட வாழ்வில் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம். இறைவன் விரும்பும் நீதி எத்தகையது? இஸ்லாமிய நீதி அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை அல்குர்ஆன் மூலம் இன்ஷா அல்லாஹ் ஆய்வுசெய்வோம்.

நீதி செலுத்துபவனில் அல்லாஹ் மிகநீதியாளனாக இல்லையா? **(அல்குர்ஆன்)** “நிச்சயமாக அல்லாஹ் நீதியைக்கடைபிடிக்குமாறும் உபகாரம் செய்யுமாறும் ஏவுகின்றான்” **(அல்குர்ஆன் - 16:90)** அல்குர்ஆன் எப்போதும் நீதியை வேண்டி நிற்கின்றது. நீதி தனது குடும்ப வாழ்விலும் மேலோங்கி நிற்கின்ற போதும்தான் இறைவனது திருப்தியைப்பெற வாய்ப்பாக இருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், நிச்சயமாக தங்கள் அதிகாரத்திலும் தங்கள் குடும்பத்தி னரிலும் தாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டவைகளிலும் நீதத்தைக் கடைபிடித்த நீதிவான்கள் அல்லாஹ்விடம் (கியாமத் நாளில்) ஒளியாலான மேடைகளில் இருப்பார்கள். **(அறிவிப்பார் : அம்றுப்னு ஆஸ் (றலி) ஆதாரம் : முஸ்லிம்)** இறைவனின் மேடையிலே எடுப்பாக இருப்பதற்கு நீதிதான் துணைசெய்கின்றது என்றால் எதுவும் ஒளியாலான மேடையில் உட்காரும் வாய்ப்பு கிடைக்குமாயின், சட்டத்தை இங்கு இருட்டறையாக ஆக்கிக்கொள்பவர்களுக்கு ஒளி மேடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இடத்தையேனும் பெறமுடியாமல் போய்விடும் என்பதை நினைக்க வருத்தமாக இருக்கின்றது. மறுமைநாளில் அல்லாஹுத்தஆலா 7 பேர்களுக்கு அர்ஷில் நிழலை வழங்குவான். அத்தகைய புனித மக்கள் யாராக இருப்பார்கள்? (1) நீதமான அரசர் (2) இறைவணக்கத்தில் வளர்ந்த வாலிபர் (3) மஸ்ஜிதுகளுடன் இணைந்திருக்கும் உள்ளத்தை உடையவர் (4) அல்லாஹ்வுக்காக ஒருவரை ஒருவர் நேசிக்கும் இரண்டு மனிதர்கள் அந்நேசத்தின் மீதே ஒன்றுசேர்ந்தார்கள் அந்நேசத்துடனேயே பிரிந்து சென்றார்கள் (5) அந்தஸ்தும் அழகும் நிரம்பிய பெண் அவனை (விபசாரத்திற்கு) அழைத்தபொழுதும் நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன் எனக்கூறும் (கற்புடைய) மனிதர் (6) தன் வலக்கரம் செலவழிப்பதை இடக்கரம் அறியாத வண்ணம் (மறைமுகமாக) தர்மம் செய்பவர் (7) தனிமையில் அல்லாஹ்வை நினைவுகூறி அதனால் அவரின் இரு கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் மனிதர் என்பதாக ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அறிவிப்பார் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)**

மனச்சஞ்சலத்தில் தடுமாறும் மறுமைநாளில் இத்தகைய இறைப்பாறும் நிழலில் ஒதுங்குவோரில் ஓராம்தரத்துடையவர் நீதியான அரசராவார் என்றாலே நீதியை உரசிப்பார்க்கவும் முடியாத இந்தக் காலகட்டத்தில் நீதிக்குத்துணை போகும் அரசர்களுக்கு இத்தகைய மகத்துவம் உண்டு என்பதை உணர்வோம். கண்ணால் கண்டதும் பொய் காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பது மெய் என்று சொல்வார்கள். இஸ்லாமியப் பார்வையில் கண்ணால் காண்பதற்கு முதலிடம் அளிப்பதுடன், தீரவிசாரணை செய்வதற்கு தகுந்த இடம் கொடுக்கின்றது. "வானோங்கி வாழு முலகெல்லா மன்னவன் கோனோக்கி வாழும் குடி" **(குறள்)** அரச நீதியினால்தான் சமுதாயம் சுகமாக வாழமுடியும். உலகத்திலுள்ள எல்லா உயிர்களின் நல்வாழ்வும் மழையைப் பொறுத்து அமையும். அதைப்போல் ஒரு நாட்டிலுள்ள எல்லா குடிமக்களின் நல்வாழ்வும் அந்நாட்டின் மன்னனுடைய செங்கோன்மையைப் போன்றது.

சமுதாயத்தின் சிறந்த நீரோட்டத்திற்கு நீதிதான் மிகமுக்கியமானதாகும். வள்ளரசு நாடுகளில் நீதியைப் பீதியாக்கி விட்டிருக்கிறார்கள் பலஸ்தீனத்தில் நீதி நிர்வாணப்பட்டிருக்கிறது. பிறந்த குழந்தையைத் துடிக்கத் துடிக்க துப்பாக்கியால் வேட்டு வைத்து இறந்துபோகக் களம் அமைத்தாலும் அதுவும் கூட நீதிதான் என்று நாகரீகமற்ற அர்த்தம் கொடுக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் பார்வையில் ஷரீஅத் முறைப்படி தீர்ப்பு வழங்குவதற்குத் தகுதியான ஆணாகவும் முஸ்லிமாகவும் சுதந்திரவானாகவும் பருவ வயதை அடைந்தவனும் கேள்வி பார்வையில் குறைபாடு இல்லாதவனாகவும் நீதிமானாகப் பேசக்கூடியவனாகவும், தெளிந்த அறிவுள்ளவனாகவும் குர்ஆன் ஹதீஸை ஆய்வுசெய்யக்கூடியவனாக இருக்கின்ற ஒருவர்தான் காதி நீதிபதி வேலையை ஒப்புக்கொள்வது பர்ளுள் கிபாயாவாகும். இந்த வேலைக்கு தகுதியானவர்களாக இருந்து அனைவருமே விலகிக் கொண்டால் முழு ஊருமே குற்றத்திற்கு உள்ளாகிவிடும். ஒருவர் மாத்திரம் ஓர் ஊரில் தகுதி காணப்பட்டால் அந்த வேலையை ஏற்றுக்கொள்வது பர்ளுக் கிபாயாவாகும். நீதிபதிகள் லஞ்சத்திற்கும் முகஸ்துதிக்கும் பயப்பட்டு நடக்க வேண்டும். தனிப்பட்ட விருந்துகளை தவிர்ந்துகொள்வது சிறந்ததாகும்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**09-05-2004**





## 52. மனிதகுல மாணிக்கத்தின் மகத்தான குணாதிசயங்கள்!

ஒழுக்கத்தை எங்கு கண்டுகொள்ளலாம் என்று யோசிக்கின்ற ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். பேச்சுக்களில் காணப்பட்ட ஒழுக்கம் பறக்கும் தட்டுகளில் படியேறிவிட்டதாக உணரமுடிகின்றது. உறுப்புகளிலுள்ள ஒழுக்கத்தை மாதர்கள் கடைபோட்டு மீதமில்லாமலே விற்றுவிட்டார்கள். பெரியார் சிறியார் என்ற கௌரவம் காலிமுகத்திடலில் பட்டம் கட்டப்பட்டு பறக்கவிடப்பட்ட கதையாகி விட்டது. குளிரூட்டப்பட்ட தனியார் அரச பஸ்களில் மதிப்பு மரியாதை பின்ஆசனத்தில் பின்தள்ளப்படுவதைப் பார்க்க முடிகின்றது. கட்டி அணைத்து காதல்கொள்பவர்களுக்கு எந்த சீட்டானால்தான் என்ன? உணர்ச்சி, உரசல் என்று பழகிப்போய் விட்டது. பெற்றோர், பேச்சுவார்த்தை, மகர், நிக்காஹ், பள்ளிவாசல், கோயில், அனுசரணை, ஆசீர்வதிப்பு, பிரார்த்தனை, துஆ எல்லா வற்றையும் இன்று சமூகம் அடகுவைத்து ஆபாசமாக பழகத் தொடங்கி விட்டது.

இந்தவேளை இனிய மார்க்கம் இறைமார்க்கம் இஸ்லாம் நற்குணத்தைப் பற்றி என்ன சொல்கின்றது என்பதை எண்ணிப்பார்ப்போம். "நபியே! நீர் மாபெரும் குணப்பண்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்". **(அல்குர்ஆன் - 68:04)** ஒருவரை பலர் பாராட்ட முனையும்போது அதில் சுயநலம்கூடக் கலந்துவிடலாம். இன்னொருவரால் நாம் சான்றிதழ் தந்து நல்லவர் என்று கூறுவதைவிட நமக்கு நாமே நல்லவர் என்று ஒரு சான்றிதழைத் தர முன்வரும் போதுதான் உண்மை மனிதனாக நம்மைக்காண முடிகின்றது. ஆனால், முஹம்மது நபி அவர்களை இந்த உலகைப் படைத்த இறைவனே நற்குணமுடையவர் என்று பாராட்டும் பொழுது அதற்கு ஈடு, இணை எங்கே இருக்கின்றது. எவர் பாராட்டாது போனாலும் ஆண்டவனே பாராட்டும் போது அதைவிடப் பெறுமதி என்ன இருக்கின்றது? முஹம்மது என்றால் புகழப்பட்டவர் என்பது அர்த்தமாகும்.

யார் புகழ்ந்தாலும் யார் புகழாவிட்டாலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் புகழ்ந்திருக்கின்றான். புகழுக்குரிய நபிகளின் குணமும் புகழுக்குரியதாகவே இருந்தது. அப்படி என்ன குணம்தான் அவர்களிடம் சிறப்புக்குரியதாக இருந்தது? கசப்பாக இருந்தாலும் உண்மையைச்சொல்ல வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்பது ஒரு சமூகப் பாடமாகும். எவரின் குறையை மதிப்பதற்கும் நபிகளார் மெழுகு பூசிப்பேசுவதில்லை. உண்மையை உரைப்பதற்கு ஒருபோதும் தயங்குவதுமில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கெட்டவர்களிலும் கெட்டவர்களிடத்தில்கூட ஆதரிக்கும் நோக்கத்தோடு முகம்கொடுத்துப் பேசுவது வழக்கம். என்னிடத்திலும் அவ்வாறே அளவளாவிப் பேசிவந்தனர். ஆதலால் நான் என்னை சமூகத்தில் ஒரு மேலான மனிதன் என்பதாக எண்ணிக் கொண்டேன். ஒரு தடவை நான் அல்லாஹ்வின் தூதரே நான் மேலானவரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கர் மேலானவரா? என வினவினேன். அதற்கு அண்ணலார் அபூபக்கரே மேலானவர் என விடையளித்தனர். அப்போது நான் மேலானவனா? உமர் மேலானவரா என வினவினேன். அண்ணலார் உமரே மேலானவர் என விடையளித்தனர். பின்னர் நான் மேலானவ்னா, உஸ்மான் மேலானவரா? என வினவினேன். இதற்கு உஸ்மானே மேலானவர் எனப் பதிலளித்து விட்டனர். பின்னர் நான் என்னைப்பற்றி தெளிவாக அன்னாரிடம் வினவ அண்ணலார் தயவுதாட்சனியமின்றி உள்ளதை உள்ளவாறு தெளிவாகக் கூறிவிட்டனர். அப்பொழுது (எனது தவறை நான் உணர்ந்து) நான் அண்ணாரிடம் வினவாது இருக்க வேண்டுமே என நினைத்து வருந்தினேன். **(அறிவிப்பார் : அம்றுப்னு ஆஸ் (றலி) ஆதாரம் : திர்மிதி)** இந்த சம்பவம் ஒருவரின் கேள்விக்கு உண்மையான பதிலை சொல்லி வைத்தார்களே தவிர அவரைத் திருப்திப்படுத்த ஒரு பதிலும் வேறு ஒருவரிடம் இன்னுமொரு பதிலும் பேசி இன்றைய பொய் சமாளிப்புக்கள் அன்று இருக்கவில்லை.

இன்று ஆலபூத்தால் ஆலபக்கம். அரச பூத்தால் அரச பக்கம். உன்ட பக்கமா? உன்ட பக்கமும்தான், என்ட பக்கமா? என்ட பக்கமும்தான். வென்ட பக்கமும்தான் வெடில்சுட்ட பக்கமும்தான் என்ற இன்றைய போக்குக்கு அண்ணலாரின் போக்கு வித்தியாசமானதாகக் காணப்பட்டது. இன்று தனக்குக் கீழ் பணிசெய்யும் மானிடர்களை வதைத்து வார்த்தையாடுபவர்களும் வியர்வையில் ஒய்வெடுக்கும் கூலியாளிடம் வேதனையைக் கக்குபவர்களும் அதிகம் காணப்படுகின்றனர். அந்த வகையில் அண்ணல் எம் பெருமானார் (ஸல்) அவர்கள் ஊழியர்களை ஊழியர்களாக நினைத்ததுமில்லை நடாத்தியதும் கிடையாது. நபிகள் (ஸல்) அவர்களிடம் 10 ஆண்டுகளுக்கு மேல் ஊழியம் புரிந்தவர்கள் அனஸ் (றலி) அவர்கள், அத்தகைய பணியின் சிகரமாகத் திகழும் அனஸ் (றலி) கூறும் போது ஒருமுறை கூட அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தம்மைப்பார்த்து ஏன் இதைச் செய்தீர்? என்றோ ஏன் அதைச் செய்யவில்லை என்றோ கேட்டதில்லை என்றனர்.

நற்குணத்தை சம்பூரணப்படுத்தவே நான் அனுப்பப்பட்டேன் என நபிகளார் (ஸல்) கூறினார்கள். ஆயிஷா நாயகியின் ஓர் அறிவிப்பின் படி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குணம் அல்குர்ஆனாக இருந்தது எனக்கூறினார்கள். குணமே குர்ஆன். குர்ஆனே குணம் என்ற மனநிலையில் மாநபி (ஸல்) வாழ்ந்தார்கள். என்றும் அவர்களின் குணம் கொண்டு வாழ மனம்கொண்டு குணம் கொள்ளுவோம். தினம் தினம் பயன்காணுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**

**16-05-2004**





## 53. சிறிய பிள்ளைகளின் மரணத்தால் சிந்தித்து சீரழிந்து விடவேண்டாம்!

**அ**ன்பான குழந்தையொன்றைப் பெற்றவர்கள் அந்தப்பிள்ளையுடன் காட்டு கின்ற கருணை, பாசம் அனைத்தும் பதியப்பட்ட வடிவங்களாகும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்லுவார்கள். யார் பிள்ளையும் யாருக்கும் பிடிக்கலாம். பிடிக்காமலும் இருக்கலாம். ஆனால்..... தன் பிள்ளை தனக்கு பிடிக்காமல் இருப்பதில்லை. என்ட கண்ணே! மணியே! செல்வமே! என்றெல்லாம் செல்லமாகப் பேசி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொள்வார்கள். இளசுகளின் இம்சைகளால் இரக்கம் குறைந்தவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனாலும் ஒரு கட்டத்தில் உள்ளம் உருகி உணர்ச்சி பெருகி மகனே! என்று மனம்விட்டு மகிழ்வதைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. பிள்ளைகளுக்கு அன்பு காட்டுவது பெற்றோருக்கிடையிலும் பிரச்சினைகள் வருவதுமுண்டு. அதிகமாக அன்பு செலுத்தவில்லை என்று தாயை - தந்தை கடிந்து கொள்வதும், அதே பிள்ளையில் தந்தை இரக்கம் காட்டவில்லையென தந்தையை அவர் மனைவி ஏசிப்பேசுவதும் இடம்பெறாமலில்லை.

பிள்ளைகளால் அடிக்கடி பெற்றார்கள் பிரச்சினைப்பட்டுக் கொள்வதை அறிய முடிகின்றது. ஒட்டுமொத்தமாக நோக்குவோமானால், எல்லா நோக்குகளும் குழந்தைகள் மேல் அன்புகாட்ட வேண்டும் என்பதைத்தான் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. இறைவன் குழந்தைகளுடன் இரக்கம் கொள்வதைத்தான் பெரிதும் விரும்புகின்றான். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தனது பிள்ளைகளு டனும் பேரப்பிள்ளைகளுடனும் மிகவும் பிரியமுடன் இரக்கம் காட்டினார்கள். சிலவேளை தனது பேரப்பிள்ளைகளான இமாம் ஹஸன் (றலி), இமாம் ஹுஸைன் (றழி) ஆகியோர் நபிகளார் (ஸல்) தொழும் போது தோழில் ஏறிக் கொள்வார்கள். அந்த அளவு அவர்களின் மீது பேரப்பிள்ளைகள் அன்பு வைத்ததையும் அவர்கள் ஆத்மீக ஈடுபாடு கொள்ளும் தொழுகையின் போதும் பேரப்பிள்ளைகளை பேதம்காட்டி தள்ளிவைக்கவில்லை. அத்தனையும் குழந்தை கள் மீது காட்டும் இயல்பான இரக்கப்பான்மையை எடுத்துக்காட்டுகின்றது.

அன்புக்குரிய குழந்தைகளின் உள்ளம் அப்பழுக்கற்றதாக ஆனந்தமயமா னதாக இருக்கின்றது. அதனால்தான் ஒரு கவிஞன் “நான் கடவுளைக் கண்டேன் என் குழந்தை வடிவிலே” என்றான். (இது இஸ்லாமிய ஏகத்துவதத்திற்கு ஏற்புடையதாக இல்லை). இருப்பினும், கள்ளம் கபடமில்லாத கடவுளின் கருணையையும் குழந்தையின் குழப்பமில்லாத மனோநிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. பிறக்கும் குழுந்தைகள் வல்லினமாக பற்களுடன் பிறப்பதில்லை. மெல்லினமாக நாவுடனேயே பிறக்கின்றது. காலம் கடந்துதான் வல்லினமான பற்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. எப்போதும் இன்பமயமான இதயத்துடனும் சிரித்த முகத்துடனும் காட்சியளிக்கும் குழந்தைகள் பேசுவது முதல் நடப்பது வரை அனைத்தும் அவர்களால் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குழந்தைகளை பூவுலகிற்கு புண்ணியமாகப் பெற்றுத்தரும் கண்ணியமான தாய்மார்கள் சிலவேளைகளில் ஆவலுடன் எதிர்பார்த்து அன்புக் குழந்தைகள் சின்ன வயதிலேயே ஏதாவது ஒரு காரணத்தை கண்ணுக்கு காணிக்கையாகத் தந்துவிட்டு இவ்வுலகை விட்டும் பிரிந்து விடுகின்றனர். இது சிலவேளைகளில் கருவறையிலும் (கபர்) கல்லறையை சந்தித்து விடுகின்றனர். சில பிள்ளைகள் வெளியே வந்து விழிகளால் இந்த உலகைப் பார்த்து விட்டு ஓ! இந்த உலகமா என்று யோசித்து உயிர் பிரிந்து விடுகிறார்களோ தெரியாது. அவ்வளவு அவசரமானது அவர்களது பயணம். குறைந்த காலம் வாழ்ந்து நிறைந்த அனுபவங்களைப் பெறாமல் சில குழந்தைகள் உயிர்திறந்து விடுகின்றனர். பாவம்; கொடுத்துவைக்கவில்லை என்று அனைவரும் அழுகின்றனர்.

ஆனால் ஓர் ஆத்மஞானி பாவமே அறியாது பரலோகம் சேர்ந்து விட்ட அவர்கள்தான் ஆத்மார்ந்த அரும்செல்வங்கள் என்று சொல்கின்றார். கட்டிக் காத்த பாசத்துடன் பிள்ளைகளைத் துறந்து கண்ணீர் வடித்து அழும் பெற்றார் களுக்கு ஆறுதல் சொல்ல இஸ்லாம் ஒருபோதும் தவறவில்லை. இது பற்றி இனிய இஸ்லாம் என்ன சொல்கின்றது எனப் பார்ப்போம். "பருவம் எய்தாத மூன்று சிறுபிள்ளைகள் மரணித்து விட்ட எந்தவொரு முஸ்லிமையும் அவர் அந்தப் பிள்ளைகளின் மீது காட்டி வந்த கிருபையின் காரணமாக அல்லாஹ் அவரை சுவர்க்கத்தில் நுழைய வைப்பானே தவிர வேறில்லை" என ஏந்தல் நபி (ஸல்) நவின்றார்கள். **(அறிவிப்பவர் : அனஸ் (றலி) ஆதாரம்: புகாரி முஸ்லிம்)** நபிகளார் (ஸல்) அவர்கள் மி'.ராஜ் எனும் விண்ணுலக யாத்திரையை மேற் கொண்ட போது இப்றாஹீம் (அலை) அவர்களின் அரவணைப்பில் சிறிய வயதில் (வபாத்தாகி) இறப்பெய்திய பிள்ளைகள் அனைவரும் அவர்களுடன் இருப்பதைக் கண்டார்கள். எந்த இனம் சாதி சமயமாக இருப்பினும், பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் இஸ்லாத்திலேயே பிறக்கின்றது. அதனுடைய பெற்றோர் களே அதனை யஹூதியாக, நஸாராவாக, நெருப்பு வணங்கியாக மாற்றுகின்றனர் என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். இந்த ஹதீஸின் விளக்கத்தின் படி பிறக்கின்ற குழந்தைகள் இஸ்லாத்தில் பிறக்கின்றன என்பது நிரூபனமாகின்றது. பிள்ளைகளின் மரணத்தால் பலர் பைத்தியமாகி விட்டார்கள்.

நபி (ஸல்) கூறினார்கள், ஒரு முஸ்லிமான மனிதருக்கு மூன்று குழந்தைகள் மரணமடைந்திருந்தால் சிராத் பாலத்தில் ஏற்படும் நரக நெருப்பின் இலேசான தீண்டுதலைத் தவிர நரக நெருப்பு அவரைத் தீண்டாது. **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம்: புகாரி முஸ்லிம்)** பிள்ளைகளை அடிக்கடி இழந்து அவர்களின் நினைவில் வாழும் பெற்றார்களுக்கு சுவனத்தை இறைவன் தருவதாக வாக்களித்து, அவர்களுக்கு ஆறுதல் ஊட்டுகின்றான். இதைவிடப் பெரிய ஆறுதல் என்ன இருக்கின்றது? கவலையைக் கொடுத்தவனே ஆறுதலையும் தருகின்றான் என்றால் பாரமெடுத்துக்கொள்வதுதான் பாக்கியமாக இருக்கின்றது. "கொடுத்தவனே எடுத்துக்கொண்டான்டி" என்ற கவிதையையும் நினைவுபடுத்து வோம். பொறுமை செய்வோம் - ஸபூர்

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**23-05-2004**





## 54. தாமதமாகும் ஜும்ஆ நாள் வரவு தடையங்களை இழக்கும் தார்மீக நஷ்டம்!

**ஜும்**ஆ என்பது முஸ்லிம்கள் வாராந்தம் ஒன்றுகூடும் ஒரு பெரிய நிகழ்வுக்கு வழங்கப்படும் பெயராகும். அன்றைய தினத்திற்கு முஸ்லிம்கள் வைத்திருக்கும் மதிப்பு, மரியாதை வாழ்க்கையில் சொல்லிமுடிக்க முடியாத தொன்றாகும். காரணம் அந்த நாள் பற்றி அல்குர்ஆன் கூறும் கண்டிப்பும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெரும் ஆர்வமும் அதன் மேல் பற்று வைப்பதற்குக் காரணமாகி விட்டது. "ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆவுடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிபவர்களாக இருப்பின், இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடைய தாகும். **(அல்குர்ஆன் : 62:09)**

வாராந்தம் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்காக நேரகாலத்துடன் பள்ளிவாசலுக்குச் சென்று குத்பா பிரசங்கத்தைக் கேட்பது மிகமுக்கிய அமலாக அமைந்துள்ளது. தொழிலைக்கூட நிறுத்திவிட்டு பிரசங்கத்தைக் கேட்பது முக்கியம் என்பதனால்தான் இறைவனின் கட்டளை இது விடயத்தில் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்று உழைக்க வேண்டும், தேடவேண்டும் என்ற ஆவலில் ஜும்ஆ நேரத்தில் கடையைத் திறந்து முஸ்லிம்கள் வியாபாரம் செய்துகொண்டிருக்கின்றனர். இது முற்றிலும் தவறானதொரு செயலாகும். இவர்களின் இதயத்தில் இஸ்லாமிய எண்ணக்கருவூலங்கள் சென்றடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தொழில்செய்ய வேண்டிய நேரத்தில் நாலு பணம் தேடும் நேரத்தில் கடையைப் பூட்டலாமா? என்று பலர் ஈமானியத்தை யஹூதியத்தெருவில் அலைய விட்டு கேட்பதும் உண்டு. அல்லாஹ் வெள்ளிக்கிழமை நாளில் முற்றாக கடையடைப்புச் செய்யக்கூறவில்லை. ஜும்ஆ நேரத்தில் மாத்திரம்தான் நிறுத்தச் சொல்கின்றான். இதுபற்றி இறைமறை எப்படிக் கூறுகின்றது என்பதைப் பார்ப்போம். "பின்னர் (ஜும்ஆ) தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டது. (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச்சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக்கொள்ளுங்கள். அன்றியும் நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொள்ளுங்கள். அன்றியும் நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அல்லாஹ்வை அதிகம் அதிகம் தியானம் செய்யுங்கள். **(அல்குர்ஆன் : 62:10)** ஜும்ஆ தொழுகை முடிவுற்றதும் தனது தொழிலவ்துறவுகளுக்கு திரும்பும்படி அருள்மறை அறிவுரை கூறுகின்றது. அத்துடன், நின்றுவிடாது வெற்றியடையும் பொருட்டு அதிகம் தியானம் செய்யும்படி ஒரு தொடரை தம்முடன் தொட்டு வைக்கின்றது. அறிவுடைமை படைத்தவர்கள் ஜும்ஆ தொழுகையையும் குத்பாவையும் பாழ் படுத்தமாட்டார்கள். அத்தகைய ஜும்ஆ நாளின் சிறப்பு பற்றி மாநபி (ஸல்) அவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூரியன் உதயமான நாளில் மிகச்சிறந்த நாள் ஜும்ஆ நாளாகும். அந்நாளில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அந்த நாளில்தான் சுவனத்தில் நுழைவிக்கப்பட்டனர். (பின்னர்) அதே நாளில்தான் அதிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மறுமைநாளானது ஜும்ஆ நாள் அல்லாத மற்றைய நாட்களில் வராது என அல்லாஹ்வின் தூதர் அஹ்மத் (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம்: முஸ்லிம்)** ஜும்ஆ நாளின் சிறப்பை இன்னும் வாசிப்போம்; உணருவோம். ஜும்ஆ நாளன்று பள்ளிவாசல் ஒவ்வொரு வாயில்களிலும் முதலாமவர்களை அதையடுத்தவர்களை என்றும் வரிசைக்கிரம மாக அமர்ந்து (மலக்கு) கள் எழுதுகிறார்கள். இமாம் (மிம்பரில்) அமர்ந்து விட்டால் (எழுதிய) ஏடுகளை சுருட்டிக்கொள்கின்றனர். (இமாம் கூறும்) உபதே சத்தை செவிமடுக்க வந்துவிடுகின்றனர். ஜும்ஆவிற்கு முதல்நேரத்தில் வருபவருக்கு உதாரணம் ஒரு ஒட்டகத்தை அன்பளிப்புச் செய்தவர் போன்றவராவார். அதன் பிறகு வருபவர் ஒரு கடா ஆட்டை அன்பளிப்புச் செய்தவர் போன்றவராவார். அதன்பிறகு வருபவர் ஒரு கோழியை அன்பளிப்புச் செய்தவர் போன்றவராவார். அதன்பிறகு வருபவர் ஒரு முட்டையை அன்பளிப்புச் செய்தவர் போன்றவராவார் என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள்.

**அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)**

இவ்வளவு பெரிய பெறுமதியை அறிந்த எவரும் ஜும்ஆவுக்கு தாமதமாக மாட்டர்கள். உலகில் எத்தனை திருமண வீடுகள், விசேட வைபவங்கள் போன்றவற்றில் பெயரைப்போட்டுக் கொள்ளும் நாம், அமரர்கள் ஜும்ஆவன்று கொண்டுவரும் புத்தகத்தில் நேரகலாத்துடன் வந்து பெயரைப் போட்டுக் கொள்ளா விட்டால் பெரும் நஷ்டத்தைத் தேடிக்கொள்கின்றோம். புத்தகத்தில் தடையம் முக்கியம்.

மேலும் ஜும்ஆவுடைய நாளின் வரிசையை ஆய்வோமாக இருந்தால், ஜும்ஆ தினத்தன்று துஆ அங்கீகரிக்கப்படும் நேரம் பற்றிய விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறியதாக உமது தந்தை அறிவிக்கும் அறிவிப்பை நீர் கேள்விப்பட்டது உண்டா? என அப்துல்லாஹ்பின் உமர் (றலி) அவர்கள் (அபூமூஸா அல்அஷ்அரி ஆகிய) என்னிடம் கேட்டனர். அதற்கு நான் ஆம் அந்நேரம் என்பது இமாம் மிம்பரில் அமர்ந்து தொழுகை நிறைவுபெறும் வரைக்குமுள்ள இடைப்பட்ட நேரமாகுமென அல்லாஹ்வின் தூதர் கூறக் கூடியவர்களாக இருந்ததை நான் செவியுற்றேன் என்றேன். **அறிவிப்பவர் : அபூமூஸா அல்அஷ்அரி (றலி) ஆதாரம்: முஸ்லிம்)** இன்று தொழிலுக்காகவும் விளையாட்டுக்களுக்காகவும் சினிமா படங்களுக்காகவும் தொலைக்காட்சியில் தங்கள் புலனை மேயவிட்டு ஜும்ஆவை கலைய விடுவது அல்லது மிகத் தாமதித்து பிரசங்கத்துக்கு சமூகம் கொடுக்காது தொழுகைக்கு மட்டும் சமூகம் கொடுப்பது மனவேதனையைத் தரும் செயல்களாகும். சிலர்கள் ஜும்ஆவுக்கு வந்தும் பேசிப்பேசி பலனை வீணாக்கிக் கொள்வது வேதனையைத் தருகின்றது.

**நன்றி : மித்திரன் வாரமலர்**

**30-05-2004**





## 55. மனிதனைத் தீயிட்டுக் கொழுத்துவதை மாநபி (ஸல்) ஆதரிக்கவில்லை!

சிரிப்பவர்கள் எல்லாம் அன்புள்ளவர்களா? என்று கேட்கத்தோணுகின்றது. அன்பு, இரக்கம் எல்லாம் மனிதனோடு பழகிப் போதுமாகி விட்டதோ புரியவில்லை. மனிதனும் அன்போடும் இரக்கத்தோடும் பழகி அலுத்துப்போய் விட்டானோ அதுகூட அறிவுக்கு எட்டுவதாக இல்லை. சாதாரணமாகப் பழகுகின்ற மனிதன் கூட இருட்டிலே வில்லனாக வருகின்ற - பொல்லாத காலத்தில் பூமியில் நாங்களும் மனிதர்களாக வாழும்நிலை ஏற்பட்டுள்ளது. சொந்தத்திற்குள்ளேயே சிரித்துப் பழகிய பலர் பந்த பாசங்களை மறந்து அநியாயம் செய்யும் ஆற்றலை பெற்றுவிடுகின்றார்கள். பள்ளித்தோழர்களாகப் பழகிய பலர் ஆளில்லாத இடத்தில் ஆற்றில்கூடத் தள்ளிவிடும் ஆபத்தான - அதிர்ச்சியான செயல்களை காண்கின் றோம். அண்ணனைத் தம்பி அடித்துக்கொல்லும் ஆரோக்கியமில்லாத நிகழ்வுகள் கூட நிஜவாழ்வில் நிகழ்ந்து விடுகின்றது.

மனைவியைக் கணவன் மண்ணெண்ணையை ஊற்றி நெருப்பு வைத்து விடுகின்ற மறக்கமுடியாத வேதனையான சம்பவங்கள் அன்புக்கணவனை மண்வெட்டியால் அடித்துக்கொன்று விடுகின்ற மனைவிமாரின் மனிதாபிமானமற்ற செயல்களை இன்றைய வாழ்வில் கண்டுகொண்டு கண்களே கூசிநிற்கின்றன. வியாபார சூழ்ச்சியில் ஒருவரை ஒருவன் வீழ்த்துகின்ற விளையாட்டு - கொழும்புத் தெருக்களில் கொலையாகக் கொந்தளித்து நிற்கின்றது. பாதாள உலகம் என்று அதற்கு நூதனமான பெயரும் நுழைக்கப்பட்டிருக்கின்றது. பட்டப்பகலில் பள்ளிக்கூட மாணவன் பாடசாலையில் நுழைந்து துப்பாக்கியால் சுட்டு பலி வாங்க முயல்கின்றான். கடலோரம் சுற்றும் கணவன் மனைவியை கண்டு ரசித்துக்கொள்ள முடியாதவன் - கணவனைத் துன்புறுத்தி மனைவியைக் கடத்திச் செல்கின்றான்.

புத்தகத்துடன் பள்ளிசென்ற மாணவர்களை புத்தியைத் தொலைத்துவிட்ட பித்தர்கள் இடைவழியிலேயே கடத்திச் செல்கின்ற மனமடியில் கூட இரக்கமில்லாத மடையர்களையும் காணத்தான் செய்கின்றோம். எல்லாம் இரக்கத்தை தொலைத்து விட்டு வெற்று இதயத்தின் வேடிக்கைகள். ஈரமில்லாத இதயத்தில் எதுதான் வளரப்போகின்றது. தீ என்றால் சுடும்; சொல்லித்தெரிய வேண்டியதொன்றல்ல. தேவையில்லாத கோபத்திற்கெல்லாம் தீ வைக்க நினைப்பது தீங்கிலும் தீங்கு- புதிய பரிமாணம் பெற்றோல் பம். பைக்குள் குண்டு என்ற காலம் மாறி கைக்குள் குண்டு வைத்து எல்லாம் தீர்த்துக்கட்டும் திருவிளையாடல்களாகவே இருக்கின்றது. மனிதனை மனிதன் எரித்துவிடும் போது ஒரு "தூர்வாடை" உயிருடன் பிடித்து ஒருவனை எரித்துவிடும் போது தீயோ மூக்கைப்பிடித்து தீர்த்து வைக்கின் றது. முகவரிகளை முறையாக மூடிவிடுகின்றது எரிக்கும் தீ பற்றி இஸ்லாம் என்ன சொல்கின்றது என்பதை எண்ணிப்பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை ஒரு படையின் அணியில் அனுப்பி வைத்தார்கள். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் குறைஷிகளில் (கொடுஞ்செயல் புரிந்த) இருவரின் பெயரை அவர்களை நீங்கள் பிடித்தால் எரித்து விடுங்கள்" எனக்கூறினார்கள். பின்னர் நாங்கள் புறப்பட நாடிய போது நபி (ஸல்) அவர்கள் இன்னார் இன்னாரை நீங்கள் பிடித்தால் அவர்களை எரித்து விடுங்கள் என்று நான் சற்றுமுன் கூறியிருந்தேன். (ஆனால்) நிச்சயமாக நெருப்பைக் கொண்டு அல்லாஹ் மட்டுமே வேதனை செய்வான். ஆகவே, அவ்விருவரையும் நீங்கள் பெற்றுக்கொண்டால் நீங்கள் அவர்களை கொன்றுவிடுங்கள் எனக்கூறினார்கள். **அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புகாரீ)**

உயிருடன் தீயிட்டுக்கொழுத்த ஒருபோதும் உத்தம நபி (ஸல்) அவர்கள் விருப்பப்படவில்லை. தீய விளைவுக்கு தீர்த்துகட்டச் சொன்னார்களே தவிர திறந்த கண்ணுடன் தீயிட்டுக்கொழுத்தி அக்கினிக்காற்றில் ஆனந்தம் கொள்ள விரும்பவில்லை. கறுப்பு ஜூலை இலங்கை வரலாற்றில் கரியான நாளாகும். எந்தத் தப்புமே பண்ணாத தமிழ் மக்கள் எல்லாம் தாருமாறாக எரிக்கப்பட்ட பயங்கர நாள். அனுதாபத்தின் அந்தரங்கத்தை அர்த்தமாக்கிய இதயங்களை பிளிந்து பாடம் சொன்ன நாள். யாராக இருந்தாலும் மனிதன் இன்ஸான் என்ற மனிதன் எம்மதமாயினும் உயியோரோடு நெருப்பு வைக்க நினைப்பது நினைவுக்குக் கூட வரக்கூடாத ஒன்று. பாம்பைக்கூட பற்றவைத்து விடுகின்ற பரிதாபமான பண்புடையவர்கள் இருக்கின்றார்கள். பாம்பைக்கொல்லும் படி பயகம்பர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அதேநேரத்தில் தௌர் குகையில் அன்புத்தோழர் அபூபக்கர் சித்தீக் (றலி) யைத் தீண்டிய அரவத்தை அன்புகூர்ந்து மன்னித்து விட்டார்கள்.

பிராணிகள், ஊர்வன, பறவைகள் மீதும் அன்பும் ஆதரவும் காட்டுவது மிகவும் வேண்டப்பட வேண்டியதொன்றாகும். காட்டில் கட்டி வைக்கப்பட்ட மானுக்கு பிணை நிற்க அதன் குட்டிக்கு பால் கொடுத்துவரப் பொறுப்பேற்று அது திரும்பி வந்த போது கட்டிவைத்த காட்டறபியிடம் கருணையுடன் பேசி மாநபி மானுக்கு மாண்புகாட்டி மானுட சமுதாயத்திற்கு அன்பையும் ஆதரவையும் போதித்தார்கள். இன்று கெட்டம்பொல்களால் அடித்து குருவிகளையும், கிளி களையும் கிலிக்குள்ளாக்குபவர்கள் இத்தகைய ஹதீஸ்களை தங்கள் வாழ்வின் விளையாட்டுப் புத்தியை விரிவாக்கி விளங்கி உயிரினங்களுக்கு அன்புகாட்டி வாழ வழி பழகிக் கொள்வார்களாக!. பாடசாலை செல்கின்ற போது வயல் நிலங்களில் மரத்தோப்புக்களில் காணுகின்ற பறவைகளுக்கெல்லாம் கல்லடிக்கின்ற கல்விகொள்கின்ற பள்ளி மாணவர்கள் நல்லன உணர்ந்து அல்லன தவிர்ப்பார்க ளானால், இருட்டறைகளில் எரிந்து சாம்பலாகும் உயிர்களுக்கும் சிறகடிக்கின்ற சிட்டுக்களுக்கும் சீரிய வாழ்வு கிட்டும். தீ - தீதான் என்று தெளிவுறுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**06-06-2004**





## 56. செவிக்கெட்டும் செய்திகளைப் பாரமெடுத்தால் சீரழிவின் எல்லைக்கே சென்றடைவோம்

**தே**ர்தல் காலம் வந்துவிட்டால் வதந்திகள் பரவுவது சாதாரணமாகி விடுகின் றன. இனக்கலவரங்களின் போதும் வதந்திகள் வாய் வழியாக தூர இடங்களுக்கும் தொடர்பு சாதனமின்றி போய்ச்சேரும். தேர்தல் களம் என்பது இலங்கை நாட்டில் அடிக்கடி நிகழும் ஓர் அதிசய சம்பவமாகத் தோற்றம் பெற்றுள்ளது. வானொலி களும் தொலைக்காட்சிகளும் அரசியல் களம் அமைத்து அடிக்கடி அரசியல் வாதிகளை மோதவிட்டு மக்களை அரசியலின் பக்கம் ஈர்ப்படையச் செய்கின்றன. இந்த நிகழ்ச்சிகளுக்காக அரசியல்வாதிகள் ஆதாரங்களுடனும் ஆவணங்களு டனும் தொலைக்காட்சியில் தோன்றி தொடராக விவாதம் செய்கின்றனர். பொய்யும் மெய்யும் வாய்ப்பேச்சும் வதந்தியும் நிலைமையை சமாளிக்க நீர் போன்று பாயும். இஸ்லாமிய அடிப்படையில் வதந்திகளை நம்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு என்ன நியாயங்களைக் கற்பிக்கின்றது? என்பதைப் பார்ப்போம்.

"எதைப்பற்றி உமக்கு (சரியான விளக்கமான) அறிவு இல்லையோ அதனை நீர் பின்தொடராதீர். **(அல்குர்ஆன் : 17:36)** கண்ணால் கண்டது போன்று முன்நின்று முழங்கும் பேச்சுக்களைக் கேட்டு முட்டாள்தனமாக செயல்படுவதன் மூலமாகத் தான் இனக்கலவரம் போன்ற இதயமே எரிந்து விடுகின்ற நிகழ்வுகள் நடக்கின்றன. நாம் வாயினால் வெளியிடுகின்ற வார்த்தைகள் அனைத்தும் இறைவனால் பதிவு செய்யப்படுகின்றது. மனிதனின் வார்த்தைகளை உடனுக்குடன் பதிவு செய்கின்ற அமரர்களை அல்லாஹுத்தஆலா மானிட சமுதாயத்தின் பக்கம் அமர்த்தியுள்ளான். அந்தப் பணியை அவர்கள் செவ்வனே செய்து முடிப்பார்கள். "எழுதுவதற்கு தயாராக இருக்கின்ற கண்காணிப்பாளர் (மலக்) ஒருவர் அவனிடம் இருந்தே தவிர அவன் எச்சொல்லையும் மொழிவதில்லை. **(அல்குர்ஆன் : 50:18)**

மாலிக் இமாமுக்கு மார்க்கம் சொல்லிக்கொடுக்க முற்படுவோரும் இம்றான் கானுக்கு கிரிக்கட் சொல்லிக்கொடுக்க முற்படுவோரும் முத்தையா முரளிதரனுக்கு பந்துவீச பயிற்சிகொடுக்க நினைப்பவர்களும் நிறைந்துவிட்ட இந்தக் காலகட்டத்தில் நபிகளார் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களைக்கூட வாசிக்காமல் யோசிக்காமல் வாயில் வந்தவாறு சொல்லக்கூடிய "மார்க்கம் மலிவு விற்பனை" என்ற எண்ண வாதிகளால் ஏளனம் செய்யப்படுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். நான் கூறாதவை என்று தெரிந்துகொண்டே நான் கூறியதாக ஒருவர் ஒரு செய்தியை அறிவிப்பாரேயானால், அவர் பொய்யர்களில் ஒருவராவார். **(அறிவிப்பவர் : ஸமுறா (றலி ஆதாரம் : ஸஹீஃ முஸ்லிம்)** தெரியாததைச் சொல்லி திரு நபியவர்களுக்கு வதந்தி பரப்ப வாய்ப்புத் தேடிக்கொள்கின்றானா? இன்றைய இஸ்லாமியன் எனக்கேட்கத் தோணுகின்றது. தனிப்பட்ட மனிதனின் குற்றம் குறைகளைக்கூட வதந்திகளாக்கி சந்து பொந்துகளில் சந்தைப்படுத்தி சந்தோஷம் காண முற்படுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாறு உணவில் உப்புதேசிக்காயை தொட்டுக்கொண்ட ருசியில் சிலர் இரவு பகலாக மனிதனை சீரழிக்க தனது நேரத்தை ஒதுக்கி வேலை செய்கின் றார்கள். மனிதனை சீரழிப்பதற்காக புகைப்படக் கருவிகள் வீடியோ கருவிகள் போன்றவற்றையெல்லாம் பயன்படுத்தி கம்பியூட்டரில் புகைப்படங்களை நெறிப் படுத்தி உண்மை நாடகம் இல்லை ஊமை நாடகம் காட்டி பலரை சந்தேகத்திற் குள்ளாக்கும் அமைப்பு அரங்கேறும் இக்காலகட்டத்தில் அல்லாஹுத்தஆலாவை பயர வேண்டும். அடுத்தவர்களின் இரகசியங்களை அம்பலப்படுத்தி தந்திக் கம்பிகளின் வழியாக நரகத்திற்கு சொக்லட் அனுப்பும் நாகரீகப் பிரியர்களுக்கு இஸ்லாத்தின் ஆணித்தரமான கருத்துக்கள் அறிவுரையாக அமையட்டும். நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், தான் கேட்டவை அனைத்தையும் பிறரிடம் கூறுவது பொய்யின் பால் மனிதனுக்குப் போதுமானதாகும். (தான் கேட்டதை) தீர விசாரித்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அவற்றின் சில பொய்யாகவும் இருக்கலாம். **அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம்: ஸஹீஃ முஸ்லிம்)**

காதுக்குக் கிடைத்த கத்தை கத்தையான செய்திகள் அனைத்தும் செய்திகள் அல்ல. உண்மையான செய்திகளை மட்டும் உணர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும். மனிதனை சந்தேகம் கொள்ளும் பழக்கம் மாறவேண்டும். சந்தேகம் தான் சந்தோஷங்களுக்கு ஆப்பு வைக்கின்றது. ஒரு கவிஞன் பாடினான் "சந்தேகக் கோடு அது சந்தோஷக் கேடு" என்று சந்தேகப்படுபவனின் முகம் சந்தோஷமாக இருப்பதே இல்லை. கள்ளுக்கடைக்கு காசு மாற்றப் போனாலும் குடிகாரன் என்று எடைபோடும் நமது சமுதாய அமைப்பு மாற வேண்டும். குற்றத்தைக் கண்டால் சுட்டிக்காட்டும் பழக்கம் வேண்டும். அதற்கும் கூட ஒரு அழகான அமைப்பு இருக்கத்தான் செய்கின்றது.

வரையறையொன்றுக்குள் வாழ்பவனை வஞ்சித்து சீரழித்து அவனை தலைமைப்பீடங்களுக்கு எடுத்துக்காட்டி தனது பெயர்களை மதிப்புக்குள்ளாக்கு வதற்காக மற்றவர்களை மாட்டி விடுவது மகா குற்றமாக இருக்கின்றது. மூடப்பட்ட அறையொன்றுக்குள் முட்டி மோதிக்கொண்டாலும் குற்றத்தை விசாரித்து தக்க தண்டனை கொடுப்பது தறவாக மாட்டாது. ஆனால்..... கடுகை மலையாக்க முயல்வதுதான் கடும் வேதனையாக அமைகின்றது. உலகத் தலைவரின் உன்னத முடிவே நமக்குப்போதும். என் தோழர்களில் ஒருவர் மற்றொருவரைப் பற்றி (மற்றொருவரின் குறைகளைப் பற்றி) என்னிடம் எத்தி வைக்க வேண்டாம். ஏனெனில், நான் சாந்தியுடைய உள்ளம் உள்ளவனாக உங்களடம் வருவதற்கு விரும்புகின்றேன் என உலகத் தலைவர் முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள். **(ஆதாரம் : திர்மிதி அபூதாவூத்)** செவிக்கெட்டும் செய்திகளைப் பாரமெடுத்தால் சீரழிவின் எல்லைக்கே சென்றடைவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**13-06-2004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 57. பார்வையைப் பக்குவப்படுத்தி பலன் காண சிந்திப்போம்!

கண்ணுக்குப் பார்வை இருப்பதாகத் தெரியவில்லை. கண்ணுக்கான பார்வை பொருட்களிலே பட்டுத்தெறிக்கின்ற ஒளியின் மூலமாக (வெளிச்சத்தின் பொருட்டே) பார்வைக்கான அந்தஸ்தைப் பெறுகின்றது. கண் திறந்திருந்த போதும் இரவின் இருட்டில் எதுவும் தெரியாது தடுமாறுகின்றோம். ஒரு தீக்குச்சியின் வெளிச்சம் கிடைக்கா மாட்டாதா? என்று மனம் அங்கலாய்க்கின்றது. பக்கத்திலே வந்து உன்னை பலர் தூக்கிச்செல்ல உன்னால் கண்டுகொள்ள முடியவில்லையா? என்று கேட்கின்றோம். அவர்கள் வந்தவுடனேயே மின்சாரத்தை அணைத்து விட்டார்கள். மின்சாரம் தன்சாரம் இழந்த போது கண்சாரமும் எனக்கு இழந்து விட்டது என்று சொல்வான். பார்வைக்கு வெளிச்சம்தான் தேவைப்படுகின்றது. கண்ணைப் பரிசோதித்துக்கொள்வது கடமையாகின்றது. சக்கரை வியாதி உள்ளவன் அடிக்கடி கண்ணை டாக்டரிடம் காட்டிக்கொள்ள வேண்டும்.

இதுவெல்லாம் ஒருபுறம் இருக்க கண்ணைத் தந்த இறைவன் கண்ணையும் உன்னையும் பார்த்துக்கொண்டே இருக்கின்றான். பார்வையைத் தந்த அல்லாஹ் மனிதனின் பார்வையைக் குறிப்பிட்ட விடயங்களில் மட்டுப்படுத்தி அதற்கான இயக்கத்தை தன்வயப்படுத்தியிருக்கின்றான். இது பற்றி அருள்மறை அல்குர்ஆன் என்ன கூறுகின்றது என்பது பற்றி யோசிப்போம். "நிச்சயமாக கேள்வியும் பார்வையும் இதயமும் ஆகியவை அனைத்தும் அல்லாஹுத்தஆலாவிடம் கேள்வி கேட்கப்படுபவையாக உள்ளன". **(அல்குர்ஆன் : 17:36)** இத்தகைய கண்காணிப் பில் கட்டளையிடுகின்ற அல்லாஹுத்தஆலா ஒரு இஸ்லாமியனின் பார்வை எப்படி அமைய வேண்டும் என்பதை இறைவன் எதிர்பார்க்கின்றான்? தங்கள் பார்வைகளை தாழ்த்திக்கொள்ளுமாறு முஃமின்களுக்கு (நபியே) நீர் கூறுவீராக! **(அல்குர்ஆன் : 24:30)**

பார்வையைப் பணித்துக்கொள்ளும்படி கூறுவதில் பெரிய அர்த்தமே இருக்கின்றது. "கண்ணுக்குள் பெண்ணா?" பெண்ணுக்குள் கண்ணா? என்று கேட்கத்தோணுகின்றது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருமையான தத்துவத்தைத் தந்தார்கள். ஆதமுடைய மகனின் மீது விபசாரத்தின் ஒரு பங்கு எழுதப்பட்டு விட்டது. அதனை அவன் சந்தேகமின்றி அடைவான். இரு கண்களின் விபசாரமாகிறது, (தீமையான) பார்வையாகும். காதுகளின் விபசாரம் தீமையானதைக் கேட்பதாகும். நாவின் விபசாரம் தீயவைகளைப் பேசுவதாகும். கைகளின் விபசாரம் (தவறான எண்ணத்தில்) பிடிப்பதாகும். காலின் விபசாரமாகிறது தீயசெயலின்பால் நடப்பதாகும். (இறுதியாக) உள்ளம் நாடுகிறது ஆசைப்படுகிறது மர்மஸ்தலம் அந்த ஆசையை நிறைவேற்றுகின்றது. அல்லது விட்டு விடுகிறது. **(அவிறிப்பவர் : அபூஹுரைரா (றலி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** கண்ணுக்கும் பெண்ணுக்குமிடையே மென்மையான தொடர்பு இருப்பதை ஹதீஸ்களின் மூலம் அறிகின்றோம். வித்தியாசமான பார்வையில் விபசாரமே வித்திட்டிருப்பதைக்

காண்கிறோம். ஒரு கவிஞன் சொன்னான், "பெண்ணைப் படைத்து கண்ணைப் படைத்த இறைவன் கொடியவனே" என்றான். பிழையான காமத்தில் மலையாகி விட்டவர்களுக்கு நிலையான இறைவனின் நிலைப்பாடு கூட தெரியாமல் போய் விட்டது. (இறைவன் கொடியவன் அல்ல) பார்வையைப் பக்குவப்படுத்தி பண்புள்ள வர்களாக மாறவேண்டுமானால் மாநபி (ஸல்) அவர்களையும் அவர்களின் வழிகாட்டல்களையும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

உம்மு ஸல்மா (றலி) அறிவிக்கின்றார்கள், நானும் மைமூனா (றலி) அவர்க ளும் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தோம். (இவர்கள் இருவரும் நபி (ஸல்) அவர்களின் துணைவியாவார்கள்). அப்பொழுது ஹஸ்ரத் அப்துல்லாஹ்பின் உம்மி மக்தூம் (றலி) அவர்கள் வந்தார்கள். (அவர் பார்வையற்றவர்) அது ஹிஜாப் பர்தா முறையைக் கொண்டு எங்களுக்கு ஏவப்பட்ட பின்னராக இருந்தது. அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் நீங்கள் இருவரும் அவரை விட்டும் மறைந்து கொள்ளுங்கள் எனக்கூறினார்கள் - அதற்கு நாங்கள் யாரஸூலல்லாஹ் அவர் குருடராக இல்லையா இருக்கிறார்? அவர் எங்களைப் பார்க்கவும் முடியாது. எங்களை அறிந்துகொள்ளவும் முடியாது என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் இருவரும் பார்வையற்றவர்களா? நீங்கள் இருவரும் அவரைப் பார்க்க மாட்டீர்களா? எனக்கூறினார்கள்.
**(ஆதாரம் : அபூதாவூத் திர்மிதி)**

கண்கள் கண்களுடன் பேசியதை ஆய்ந்த நாம் அதிர்ச்சியான முதிர்ச்சியான ஒரு செய்தியைப் படித்தோம். அதுதான் கண்ணில்லாதவரை கண்ணுள்ளவர் பார்த்து ரசித்துவிட சந்தர்ப்பம் உண்டெனகின்ற உண்மையை உத்தம நபி (ஸல்) அவர்கள் உயர்குணத்து மனைவியருக்கு உணர்த்தி நிற்கின்ற உண்மை யைப் பார்க்கின்றோம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்த இஸ்லாமிய ஆண் பெண் வாழ்வு கண்ணுக்கு கட்டுப்பாடு விதித்து இன்பத்திற்கு எல்லை வகுத்து நன்மையின் பக்கம் நாளும் வழிநடத்தி வைப்பதாக அமைந்துள்ளது. "ஓர் ஆண் மற்றொரு ஆணின் மறைவிடத்தைப் பார்க்க மாட்டான். அவ்விதமே ஒரு பெண் மற்றொரு பெண்ணின் மறைவிடத்தைப் பார்க்க மாட்டாள். ஓர் ஆண் மற்றொரு ஆணுடன் ஒரே ஆடையில் சேர்ந்திருக்க மாட்டான். ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் ஒரே ஆடையில் சேர்ந்திருக்க மாட்டாள்" என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அவிறிப்பவர் : அபூஸயீது (றலி) ஆதாரம் : முஸ்லிம்)** நிஜவாழ்வில் ஆணுடன் ஆணும் பெண்ணுடன் பெண்ணும் காமக் களியாட்டங்களில் ஈடுபடுவது மேற்கத்தேய நாடுகளில் தற்பொழுது சாதரணமாகி விட்டது. கிழக்காசிய நாடுகளில் இந்த அமைப்பு குறைந்து காணப்பட்டாலும் வீடியோ நாடாக்களிலும் கையடக்கத்தொலைபேசி கெமராக் களும் இன்டர்நெட் வலயங்களினூடாகவும் கணனிகளிலும் பார்த்து ரசிப்பவர்கள் தொகை பல்லாயிரமாகப் பெருகிக்கொண்டே செல்கின்றது. பாவம் என்பதை உணர்ந்து ஹராமான பார்வையைத் தவிர்ப்போம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**20-06-2004**





## 58. ஆடம்பரச் செலவுகளால் முஸ்லிம்கள் அழிவுப்பாதைக்கே செல்கின்றார்கள்!

ஆடம்பரங்கள் அத்தியாவசியமான காலகட்டத்தில் எப்படி உழைப்பது? எப்படிச் செலவு செய்வது? போன்ற விடயங்களில் முஸ்லிம் உம்மத் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயக் கடமை ஏற்பட்டிருக்கின்றது. வரவுக்கேற்பவே செலவு செய்ய வேண்டும் என்பார்கள். இன்று வரவும் தெரிவதாக இல்லை. செலவும் தீர்மானம் பண்ணுவதாக இல்லை. திட்டமிட்ட வாழ்க்கையைக் கட்டமிட்டு வாழப்பழகிக் கொண்டாலும் எதிர்பாராத நோய், விசேடம் போன்றவற்றால் புல்தொகை செலவு ஏற்பட்டு விடுகின்றது. அல்குர்ஆனில் "அன்றி அவர்கள் செலவு செய்தால் அளவைக் கடந்து விடமாட்டார்கள்; கஞ்சத் தனமும் செய்ய மாட்டார்கள். இதற்கு மத்தியில் நடுநிலையாக அது (அவர்களுடைய செலவு) இருக்கும்". **(அல்குர்ஆன் : 25:67)**

செலவு என்பது நிதானித்துச்செய்ய வேண்டியதொன்றாகும். அப்பன், பாட்டன் உழைத்துத்தேடிய சொத்துக்கள் இருந்தால் செலவழித்தால் பரவாயில்லை என்று பலரும் கூறுவார்கள். எவரின் பரம்பரைச் சொத்தாக இருந்தாலும் இஸ்லாமிய அமைப்புக்குள் யோசித்தே செலவு செய்ய வேண்டும். ஆற்றில் போடுவதாயினும் அளந்து போட வேண்டும். மயில் ஆடும் என்பதற்காக வான் கோழிக்கு ஆட முடியாது. இன்று முஸ்லிம்களின் நிலைமை ஆதம் ஹாஜியாரின் வீட்டில் அரைக்கோழி வைத்து சாப்பாடு வைத்தால், தாஹா ஹாஜியார் வீட்டில் முழுக்கோழி கொடுத்தே சாப்பாடு அமைப்பார்கள். இப்றாஹீம் ஹாஜியார் வீட்டில் 300 சஹன் குறையாது. இந்தப்போக்கில்தான் இன்று நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

பசித்தவருக்கு புசிக்கக்கொடுப்பதை இஸ்லாம் ஒருபோதும் தடுக்கவில்லை. ஏழைகளுக்கு இரனம் கொடுப்பதை எப்போதும் எதிர்த்ததில்லை. ஆனால் நமது சமூகம் வாய்ப்பும் வசதியும் உள்ளவர்களுக்கு மாத்திரம் சாப்பாடுகளைத் தயார் செய்து ஏழைகள் புறக்கணிக்கப்படுவதுடன், ஏராளமான சாப்பாடு - ஹோட்டல்களில் வீசப்படுகின்றது. சிந்தித்து நடப்பவர்கள் ஒருபோதும் சீரழிய மாட்டார்கள். முஸ்லிம்கள் திருமண விடயங்களில் மிகப்பெரும் பிழைகளைச் செய்துகொண்டிருக்கின்றனர். இஸ்லாம் திருமணத்தை மிக எளிதாக அமைத்திருக்க ஆடம்பரத்திருமணங்களை முஸ்லிம்கள் ஆயத்தம் செய்து மிகத்துன்பங்களைச் சுமக்கின்றனர். வசதிபடைத்தவர்கள் திருமண மண்டபங்களில் தங்கள் திருமணங் களை ஏற்பாடு செய்கின்றார்கள் என்பதற்காக சாதாரணமான நிலையில் உள்ளவர்களுக்கும் இது முடியுமா? சிலர் இந்த ஹோட்டலில்தான் திருமணம் எடுக்க வேண்டும் என அடம்பிடிக்கின்றார்கள். அவர்களது விருப்பத்திற்கு கௌரவத்திற்கு பெரிய ஹோட்டல்களே தேவைப்படுகின்றது. இந்த வைபவங் களில் மின்பல்புக்கள், சமையல், சமையற்காரன், உபசரிப்பாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், வீடியோக்காரர்கள், இசைக்கச்சேரி நடத்துபவர்கள் என்றெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கிக்கொண்டே போகலாம். ஆணைப் பெற்றுவிட்டார்கள் என்றால் பெரிய இறுமாப்புக் கொள்கின்றார்கள். பெண்ணைப் பெற்றவனைப் பிளிந்து குடிக்க முற்படுகின்றார்கள். ஐயாமுல் ஜாஹிலிய்யா என்ற அறியாமைக் காலத்தில் பெண்ணைப் பெறுவது ஒரு அபசகுணமாகக் கருதினார்கள். இன்றும் பெண் ணைப் பெற்றவர்கள் மிகவும் மனம் வருந்துகின்றார்கள். காரணம் - கொழுத்த சீதனங்களை பெண் பகுதியிலிருந்து பெற நினைப்பதனால்தான். இந்த வேதனை தலைதூக்கியிருக்கின்றது. தென் மாகாணத்திலும் பார்க்க இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சீதனம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஓர் ஆண் பிள்ளையைப் படிப்பித்தால் ஆயுள் முழுவதும் அவனுக்காக செய்த செலவுகளை பெண்ணிடமிருந்து சீதனமாகப் பெற முற்படுகின்றனர். கொழும்பிலும் வீடு தர வேண்டும். ஊரிலும் ஒரு வீடு, கார், கடை, தோட்டம், காணி, டெலிபோன், நகை, நட்டு, உடுப்பு போன்று எதையெல்லாம் வசூலிக்க முடியுமோ அப்படியே வசூலிக்கின்றனர். இந்த வசூலில் டி.வியும் டெக்கும் ரேடியோவும் மோட்டார் சைக்கிளும் விதிவிலக்கல்ல. புகையிரதத்தை சீதனமாக எழுதிக்கேட்பார்கள். என்ன செய்யலாம், அது அரச உடமையாகவல்லவா இருக்கின்றது. பல பெண்களைப் பெற்ற தாய்மார்கள் யோசனையில் மூளை குழம்பிக் காணப்படுகின்றார்கள். எனவே, இந்த வீணான இந்த ஆடம்பர வாழ்க்கையை ஏன் முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றார்கள்? அடுத்தவர் கையை எதிர்பார்த்ததை விட நாமாக உழைத்து வாழ்வதே மிக சிறப்பானதாகும்.

முஸ்லிம் சமுதாயத்தில் இருக்கின்ற வயது வந்த குமரிகளைக் கரைசேர்க்க வேண்டிய பொறுப்பு செல்வந்தர்களுக்கும் உண்டு. ஆடம்பரத்திலும் வீண் விரயத்திலும் சமுதாயம் கவனம் செலுத்துமானால், முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும். உள்ளதைக் கொண்டு போதுமாக்கி வாழ்வின் பொருளாதாரத் திட்டத்தை அமுல்நடத்த வேண்டிய மனோநிலை வருகின்ற போதுதான் நிம்மதி பிறக்கும். அமைதியான தென்றல் குடும்பத்தில் வீசும். நாயகம் (ஸல்) கூறினார்கள், அதிகமான பொருட்கள் உள்ளதால் செல்வநிலை என்பதல்ல. (உண்மையான) செல்வநிலை மனதின் செல்வநிலை யாகும். (மனநிறைவாகும்) **(அவீறிப்பவர் : அபூஹூ ரைரா (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)**

போதும் என்ற மனோநிலை உருவாகுதல் சாப்பாட்டில் மட்டும்தான். அதுவும் கூட அப்போதைய நிலையைப் பொறுத்துத்தான் பணத்தை நீட்ட நீட்ட மனிதன் பெட்டியைப் பூட்டவே மாட்டான். ஆனால் மேசையில் வைத்து வயிறு நிறைய சாப்பாட்டைக் கொடுத்தால் போதும் போதும் என்று வாயை, வயிற்றைப் பிடிப்பான். இந்நிலை சாப்பாட்டில் மட்டும்தான் காணக்கூடியதாக இருக்கின்றது. மனச்சஞ்சலம் பணத்துடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது. எப்போது உள்ளதைக்கொண்டு மனதைத் திருப்திப்படுத்துகின்றோமோ அப்போது நிச்சயமாக வாழ்வு வெல்லும் வளம் தரும். வீண் செலவுகளைத் தவிர்ப்போம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**27-06-2004**





## 59. நகருக்கு வரும் கிராமத்து விவசாயிகளை நடுவே நின்று தடுத்து விடாதீர்கள்!

ஒவ்வொரு கிராமத்து மனிதனும் துன்பம், துயரங்களுக்கு மத்தியில் எதை யாவது விதைத்து சம்பாதித்து வாழ்க்கையை செவ்வனே நடாத்த வேண்டும் என்று கனவு கண்டுகொண்டே இருக்கின்றான். சான் நீள முழம் சறுக்குகின்ற பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலே வாழும் கிராமவாசிகள் பூரணமான அடிப்படை வசதிகள் ஏதுமின்றி உள்ளதுதான் அடிப்படை என்று ஒரு கோடி முறை தனக்குள் நினைத்து வாழ்கின்றான். ஒரு கவிஞன் பாடினான், ஒவ்வொரு கிராமத்துப் புல்லாங்குழலும் வார்த்தைக்கு வராத சோகத்தை வாசித்துக்கொண்டே இருக்கின்றது. வெளியே சொல்ல முடியாத பிரச்சினைகளுடன் சீரான பராமரிப்பு பாதை ஒழுங்குகள், மின்சார அமைப்பு, வைத்தியசாலை போன்ற மிகத் தேவையான அமைப்புகளே இல்லாமல் வாடி வதங்கும் கிராமவாசிகள் இன்னும் இல்லாமலில்லை.

காலையில் எழுந்து மண்வெட்டியை எடுத்து வயல் நிலங்களைக் கொத்தி பதனிட்டு பயிர்செய்து காய் கறிகளை அறுவடை செய்து சந்தைப்படுத்தி சந்தோஷம் கொள்ள நினைக்கின்ற போதுதான் பணமுடிச்சுடன் இடையே ஒரு வியாபாரி நின்று குறைந்த பணத்திற்கு எல்லாக் கறிகளையும் வாங்கி சந்தையை யே சந்திக்காமல் அனுப்பி வைக்கின்றான். மாலை வரை சந்தையில் காத்துக் கிடந்து உண்பதற்கு குடிப்பதற்கு சந்தை சந்தா கட்டுவதற்கு உமக்கு எவ்வளவு வருத்தம் என்ற கருத்துக்களை முன்வைத்து காய்கறிகளை குறைந்த விலைக்கு வேண்டி கூடிய விலையில் விற்பவர்கள் கொள்ளை இலாபம் பெறுபவர்கள் இன்று இல்லாமலில்லை. இவர்களின் திருகுதாலங்களுக்கும் அப்பாவி கிராம வாசிகளின் ஆதாயத்தை இடைவழியில் நசுக்குவதற்கும் இஸ்லாமிய சமயம் என்ன கருத்தாவது கூறியிருக்கின்றதா? என ஆராய்வோம்.

"நகரவாசி கிராம வாசிக்காக (இடைத்தரகராக இருந்து) வியாபாரம் செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். அவர் அவருடைய சொந்த சகோதரராக இருந்தபோதிலும் சரியே" என மாநபி (ஸல்) அவர்கள் மலர்ந்தருளினார்கள். **(அறிவிப்பவர் : அனஸ் (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** இடைத்தரகராக இருந்து கிராமவாசியின் பொருட்களை அப்படியே எடுத்துக்கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதனை விரும்பவில்லை. மாநபி விரும்பாத ஒன்றை மார்க்கட்டுக்குக் கொண்டுவர நினைப்பது அறிவியல் பாவமாகும். ஒவ்வொரு மனிதனும் எப்படியாவது உழைத்துவிட வேண்டும் என்றுதான் நினைக்கின்றான். ஆனால், பொருளை ஹலாலான முறையில் இஸ்லாமிய ஷரீஆவுக்கு அமைவாக தேடவேண்டும் என்ற எண்ணங்கள் இன்று ஏமாந்த கதையாகவே இருக்கின்றது. பாவம் அப்பாவிப் பெண்மணிகள் குப்பிலாம்புடனே மெழுகுவர்த்தியின் உதவியுடனே காய்கறி கனிகளைச் சுமந்து வந்து பாதைகளில் ஏறி ஆற்றைக் கடந்து ஏரிகளைக் கடந்து சந்தைக்கு வாகனம் ஏறி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியிலேயே பணத்தைக் கொடுத்து பாசாங்கான வார்த்தைகளைப் பேசி மிகக் குறைந்த இலாபத்திற்கு அவர்களிடம் கொள்வனவு செய்ய நினைப்பது அநீதியிலும் அநீதியாகவே நினைவுகொள்ள வேண்டி இருக்கின்றது. ஏழைகளின் கரங்கள் இடர்பாடுகளுக்கு மத்தியில் சேறு அளைந்துதான் சோறு திண்கின்றார்கள். ஏழைகளுக்கு செய்யப்படும் அநீதிகள் பின்னர் காலம் காலமாக வருந்த வேண்டி வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அநியாயமாகக் குறையக் கொடுத்து விட்டோமே நம்மை சந்தைக்குச் செல்ல விட்டானில்லையே என்றெல்லாம் கண்ணீர் கலந்த முகத்துடன் ஏழைகளை இம்சைப்படுத்தி பணம் சம்பாதிக்க முயலுவது நமது கண்ணில் நாமாகக் குத்திக்கொள்ளும் நிலையாகும் என்பதுதான் உண்மை.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "நகரத்திற்கு வரும் வியாபாரச் சரக்குகளை கடைவீதிகளுக்குக் கொண்டு வந்து இறக்கப்படுமுன் வழியிலேயே தடுத்து வாங்கிக்கொள்ளாதீர்கள்" **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ்பின் உமர் (றலி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** இன்று வியாபாரத்துடன் மட்டும் இடைத்தரகர்கள் சம்பந்தப்படவில்லை. ஒருவருக்கு திருமணம் பேசி வைத்திருக்கின்ற போது அதனை உடைத்துவிட்டு இன்னுமொரு திருமணத்தை பேசுகின்ற பாங்கையும் பார்க்கின்றோம். எவர் வீட்டுக்குமராயினும் வாழவேண்டும் என்ற நல்ல நோக்கம் இருக்க வேண்டும். ஒருவருக்குப் பேசிக்கொண்டிருக்கின்ற போது இடையிலே தலையிட்டு இன்னுமொருவருக்குப் பேசுவது பற்றி இஸ்லாம் எப்போதும் சரிகாண வில்லை.

ஒரு மு.்.மின் மற்றொரு மு.்.மினின் சகோதரர் ஆவார். ஒரு மு.்.மின் தம் சகோதரரின் வியாபாரத்தில் தலையிட்டு விற்பனை செய்ய மாட்டார். அவர் தம் சகோதரரின் பெண் பேசியதின் மீது தலையிட்டு அவர் விட்டுவிடும் வரை பெண் பேசமாட்டார் என மாநபி (ஸல்) மலர்ந்தருளினார்கள். **(அறிவிப்பவர் : உக்பா பின் ஆமிர் (றலி) ஆதாரம் : முஸ்லிம்)** பகைக்காக திருமணத்தை உடைத்து விடும் இக்காலகட்டத்தில் மிகப்பொறுப்புணர்ச்சியோடு உற்றுநோக்க வேண்டும். ஒருவர் பெண்பேசி வைத்திருக்கும் போது மணவாளரின் வீட்டில் பொய் புரட்டுக்களைச் சொல்லி அந்தத் திருமணத்தை அப்படையே தள்ளுபடி செய்து விட்டு தங்களது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துகொடுக்கும் நிலை சமுக்திலிருந்து மாறவேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், உங்களில் சிலர் சிலருடைய வியாபாரத்தில் தலையிட்டு விற்பனை செய்ய வேண்டாம். தம் சகோதரரின் பெண் பேசியதின் மீது தலையிட்டுப் பெண் பேச வேண்டாம். அவர் அனுமதித்தாலே தவிர. **(ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** இனிமேலாவது உணர்ந்து செயல்படுவோம். வியாபாரிகளை இடைவழியில் மறித்து வாங்குவதை கை விடுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**04-07-2004**





## 60. நாகரீகமாய் பேச நினைத்து நபி வழி மாற வேண்டாம்!

நடையைப் போல் பேச்சு என்று சொல்வார்கள். எவ்வளவு வேகமாக நடைபோடுகின்றார்களோ அவ்வளவு வேகமாக பேச்சு அமைந்து விடுவதைப் பார்க்கின்றோம். மெல்ல மெல்ல நடப்பவர்கள் மெதுவாகப் பேசுவதையும் காண்கின்றோம். பேச்சில் அவர்கள் வின்னர்கள் சாதுரியமாகப் பேசுவார்கள் போன்ற வசனங்களைத் தினமும் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றோம். சிலர் பேசும் போது கண்களை சிமிட்டி கைகளை அசைத்து எத்தனை விதமாக அபிநயம் சேர்க்க முடியுமோ அந்த அளவு சேர்த்துக்கொள்கின்றார்கள்.

பேசுவதில் பெண்கள் இன்று மிகவும் விசித்திரமான முறைகளை கையாளுகின்றார்கள். ஆண்கள் தங்களை பெண்களிடம் அடகு வைப்பதற்கு பெண்களின் பேச்சே ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. கண்ணை வெட்டி வெட்டி மனசைப்பறி கொள்ளும் அளவுக்குப் பேசும் பலர் நாகரீகமான சொற்களை உபயோகிப்பதுடன் உடலைக்கூட வளைத்து விடுகின்றார்கள். உதடுகளால் உதிர வேண்டிய பேச்சு லயங்களிடையே உடலையும் அசைத்து உணர்ச்சி ததும்பப் பேசுவது காந்த சக்தியினால் ஆண்களைக் கவருவதைப் போன்ற ஒரு கிறுகிறுப்பை ஹராமியத்தை உருவாக்கி விடுகின்றது. எப்போதும் பெருமைக்காகப் பேசுவது, வாயசைப்பது, மற்றவர்களை மயக்கி விடுகின்ற அளவுக்கு நெருங்கி நெருங்கிப் பேசுவது, தொலைபேசியில் இரவு பகலாக அன்பைக் கொட்டி விடுவது போன்று ஆசையை உருவாக்கி விடுகின்ற அளவுக்கு கதைகளைக் கட்டம் கட்டமாக இராகம் ததும்பப் பேசுவதெல்லாம் இன்று இளைஞர்களைத் தடுமாற வைத்துள்ளது.

அந்தத் தடுமாற்றங்கள் வாழ்க்கையின் சுயவிளிம்பிலிருந்து வேறு ஒரு திசைக்கு விடைகொடுக்க வித்திடும் என்பதை உணரவேண்டும். தொனியை உள்வாங்கிப் பேசுவது, நாகரீகமாகப் பேச நாவை எத்தனிப்பது, புதிய சொற் பிரயோகங்களுக்கு முன்னுரிமை அளித்து மொழிதல் போன்றவை இன்று சாதாரணமாகி விட்டது. இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்று யோசிப்போம். நபி (ஸல்) கூறினார்கள் (பேச்சு மற்றும் செயல்களில்) வரம்பு மீறுவோர் அழிந்து விட்டார்கள். இதனை நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள். **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ்பின் மஸ்ஊது (றழி) ஆதாரம் : முஸ்லிம்)** பேச்சுக்கள் எல்லை கடக்கின்ற போது பாவச் சுமைகளுக்கு காரணியாக அமைந்து விடுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், எவருக்கு பேச்சு அதிகமாகி விடுமோ அவரின் பாவம் அதிகரித்து விடும். எவரின் பாவம் அதிகரித்து விடுமோ அவரது உள்ளம் மரணித்து விடும். எவரின் உள்ளம் மரணித்து விடுமோ அவர்கள் செல்லும் இடம் நரகமாகும் என்றனர். பேச்சு மனிதனை வாழ வைக்கின்றது. பேச்சே மனிதனை விபரீதமான நிலைமைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளி வைக்கின்றது. நரகத்திற்குக்கூட அவனை அழைத்துச் செல்கின்றது. இன்று வானொலி, தொலைக்காட்சிகளின் மூலம் மேற்கத்தேய பெண்களின் குரல் வளம், வாயசைவு, அபினயத்திறமை, கண்சிமிட்டும் கணிப்பீடுகள் அனைத்தும் குமர்கள் முதல் குடும்பப் பெண்கள் வரை இடம்பிடித்திருப்பதைப் பார்க்கின்றோம். நலினமாகப் பேசுவதில் பலர் நாயகிகளாக இருக்கின்றனர். எந்தப் பேச்சுக்கும் இஸ்லாம் ஓர் எல்லையை வகுத்திருக்கின்றது. அந்தப் பாங்கில் அடியொட்டி நடப்போமாக இருந்தால் நிச்சயமாக நம் வாழ்வு மலரும் என்பதில் ஐயமே இல்லை. சிரித்துச் சிரித்து பலர் பேசி சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டு தவிப்பதைக் கண்டு சமூகம் சிரிக்கின்றது.

அளவுக்கதிகமாக நாவை சுழித்து வளைத்து பேசுபவர்கள் கீழ்காணும் ஹதீஸை கொஞ்சம் நோக்கட்டும். "நிச்சயமாக பசு மாடு (உணவு உண்ணும் பொழுது) தன் நாவை வளைத்து சுழிப்பது போல மனிதர்களில் நம் நாவை வளைத்தும் சுழித்தும் நாகரீகமாக (புதுமையாகப்) பேசும் மனிதனை அல்லாஹ் வெறுக்கின்றான்" என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அறிவிப்பவர் : அம்ருப்னு ஆஸ் (றழி) ஆதாரம் : அபூதாவூத் திர்மிதி)** சினிமா நட்சத்திரங்களின் பேட்டிகளையும் சின்னத்திரையில் நாடக உலகில் கொடிகட்டிப் பறக்கும் நவயுக கலைஞர்களின் கதைகளையும் இரண்டு நிமிட ஆங்கிலமும் ஒரு நிமிடத் தமிழையும் கண்டு ரசித்து நிற்கின்ற பலர் அதனை தன் வாழ்வில் கொண்டு வர நினைப்பது வேதனையைத் தருகின்றது. பணத்திற்காக குணத்தை மாற்றாது விட்டாலும் குரலை மாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

உங்களில் எனக்கு மிகப்பிரியமானவரும் கியாமத் நாளில் எனக்கு மிக அருகில் அமர்ந்திருப்பவரும் எவர் என்றால்.. உங்களின் அழகிய குணமுடையவர் களேயாவார்கள். உங்களில் எனக்கு மிக வெறுப்பாளரும் கியாமத் நாளில் என்னை விட்டும் மிகத்தூரமானவரும் எவர் என்றால் அதிகமாகப் பேசுபவர்களும் நாவை வளைத்துச் சுழித்து கஷ்டப்பட்டு (புதுமையாகப்) பேசுபவர்களும் வாய் நிரம்பவும் விஸ்தீரனமாகவும் பெருமையடித்தவர்களாகப் பேசுபவர்களும் ஆவார் என்று நபி (ஸல்) அவர்கள் மலர்ந்தருளினார்கள். **(அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) ஆதாரம் : திர்மிதி)** நல்லதைப் பேசுவோம் நலமுறப் பேசுவோம் சொல்களிலே சுகம் கண்டு இரா விழித்து தொலைபேசிகளில் அதிகம் பேசி தொல்லைகளைத் தேடிக்கொள்ளாமல் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்குப் பயந்து வழிபட்டு வாழ்வோமாக.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**11-07-2004**





## 61. விருப்பு வாக்குகளுக்கான ஒப்புதல்கள் விசுவாசியின் ஈமானைப் பாதிக்குமா....?

ஒத்த கருத்துடன் வாழுதல், எவர் வந்தாலும் ஒரே கருத்தை உரைக்குதல் போன்ற பழக்கவழக்கங்கள் இன்று நமது சமூகத்திலிருந்து விடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணுகின்றோம். முந்தி வாழ்ந்த நமது மூதாதையர்கள் முகம்கோணாமல் சொல்வதை சொல்லி விடுகின்ற சுடச்சுடப் பேசுகின்ற பக்கு வத்தைப் பெற்றிருந்தனர். கதைப்பதை முன்னால் கதைப்போம்; பின்னால் கதைக்க மாட்டோம். என்ற பிடிவாத உணர்வுடன் வாழ்ந்தார்கள். உண்மையாகச் சொல்லப்போனால் யாருக்கும் பயப்படாமல் எதையும் துணிந்து சொல்லக்கூடிய ஆற்றலும் அதிகாரமும் அவர்களிடம் காணப்பட்டது. எந்தப் பரம்பரையை எடுத்துப் பார்த்தாலும் எவரும் முன்னேற வேண்டும் என்ற இனிய எண்ணமே காணப்பட்டது. அதனால்தான் யாரும் திருந்திவிட வேண்டும் என்ற அவாவுடன் சொல்லுவதைச் சொல்லுகின்ற வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள்.

இன்று யாருக்கு எதைச் சொல்லலாம் சொல்ல நினைத்ததைச் சொன்னால் சுட்டு விடும் மனநிலை, மனக்கொதிப்பு சொல்லவே பயமாகி விட்ட ஒரு புதுமையான யுகப் பிரவேசத்தில் இருக்கின்றோம். நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "ஒரு தவறை கையைக் கொண்டு தடுங்கள் அல்லது நாவினால் தடுங்கள் அல்லது உள்ளத்தினால் தடுங்கள்" என்றனர். கண்டவுடனேயே கண்ணத்திற்கு அடித்துவிட்ட காலம் மறைந்தே போய்விட்டது. தவறைக் கண்டு நாவினால் சொல்லித் தடுக்கின்ற காலமும் மாறிக்கொண்டே போகின்றது. மிகுதியாக நாம் தமது பாட்டில் ஒதுங்கியிருப்போம் என்ற - உள்ளத்தால் தடுக்கின்ற யுக்தி மட்டுமே இப்போது கூடிய இடத்தைப் பிடிக்கின்றது.

சில இஸ்லாமிய இயக்கங்கள் நன்மையை ஏவி தீமையைத் தடுத்தாலும் பெரிய வசதிபடைத்தவர்கள் வங்கிகளில் வட்டியுடனான கடனுதவி பெறுகின்ற போது அதைத் தடுக்க அதைப் பிழை என்று சொல்ல சமூகம் பின்நிற்கின்றது. இஸ்லாமிய இயக்கங்கள் கூட வாய்மூடி மௌனம் சாதிக்கின்றதைக் காண கண்கள் கூசி நிற்கின்றன. இவை இந்நிலையில் தனி மனித த.்வா (அழைப்பு) இவை அத்தனைக்கும் சமூகம் எடுத்திருக்கின்ற புதிய முடிவு புதுமையானவை. எவர் பிழை செய்தாலும் சரி செயல்களை மக்கள் பாராட்டிக் கொள்கின்ற அமைப்பு அறிமுகமாகி வருகின்றது. உதாரணமாக புத்தக வெளியீட்டு விழாவில் கடந்த காலத்தில் கலந்துகொண்டால் நூல் விமர்சனம் செய்பவர் பிழைகளை அக்குவேறு ஆணிவேறாக முன்வைக்கத் தவறமாட்டார். இன்று நூல் விமர்சனங்கள் எழுத்தாளரை பாராட்டும் வைபவங்களாக மாறியிருக்கின்றதே தவிர குறைநிறைகளை முன்னெடுப்பதாக இல்லை. இன்னும்கூறப் போனால் அரசியலில் பிரவேசித்து விருப்பு வாக்குக் கேட்டு வருபவர்கள் அனைவருக்கும் சமூகம் உங்கள் இலக்கத்திற்கே வாக்களிப்போம் என்று ஒரு மறுப்பும் இல்லாமல் கூறிவிடுகின்றனர். இது நடைமுறைச்சாத்தியமில்லாத விடயம் என்று தெரிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அனைவரையும் சமாளித்து நடத்தப்பழகிக் கொண்டது. இன்ஷா அல்லாஹ் பார்ப்போம் என்ற வார்த்தையே ஏற்றமானது. மக்கள் வாழ்வின் பல்வேறு கோணங்களிலும் இருமுகத்துடன் பழகும் பாங்கை (பாவம்) என்று அறியாமல் பின்பற்றுகின்றனர். இங்கு ஒன்றைப் பேசுவது அங்கு சென்றால் ஒன்றைப் பேசுவது இப்படியாக இரட்டை வேடம் போடுவது சாதாரணமாகி விட்டது. நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "மக்களை கணிமச் சுரங்கங் களாக நீங்கள் பெற்றுக்கொள்கின்றீர்கள். அவர்களின் அறியாமை காலத்தில் சிறந்தவர்கள் அறிவுஞானம் பெற்றால் இஸ்லாமிலும் சிறந்தவர்களே. இந்த தீனின் விஷயத்தில் மக்களில் சிறந்தவர்கள் அந்த அறியாமைக் காலத்தைக் கடுமையாக வெறுப்பவர்களாகப் பெற்றுக்கொள்கிறீர்கள். இருமுகமுடையவரை மக்களில் கெட்டவராக நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள். அவர் எத்தகையவர் என்றால் இவர்களிடம் ஒரு முகத்தைக் கொண்டு வருவார். அவர்களிடம் வேறொரு முகத்தைக் கொண்டு செல்வார். இரு இடங்களில் இரு விதமாகப் பேசுவார். உண்மையும் மனச்சாட்சியும் பேசமாட்டார். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)**

இரண்டு முகத்துடன் பழகுபவர்களை சமுதாயம் இனங்கண்டு நடப்பதை நபிகளார் (ஸல்) நல்ல எடுத்துக்காட்டுகளுடன் விளங்கப்படுத்தியிருக்கின்றனர். நயவஞ்சகத் தன்மையாக நாகொண்டு பேசுகின்ற போது நாம் அடையப் போகும் அபாக்கியங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். அப்துல்லாஹ்பின் உமர் (றழி) அவர்களிடம் நாங்கள் எங்கள் அரசர்களிடம் செல்கின்றோம். அப்பொழுது நாங்கள் அவர்களைப் பற்றி வெளியில் பேசுவதற்கு மாற்றமாக (புகழ்ந்து) அங்கு பேசுகின்றோம் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (றழி) அவர்கள் இதைத்தான் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நிபாக் நயவஞ்சகத் தன்மை என்று நாங்கள் எண்ணுபவர்களாக இருந்தோம் என்று கூறினார்கள். **ஆதாரம் : புகாரி)**

இரண்டு இடங்களில் இரண்டு விதமாக பேசுவதைத் தவிர்ப்போம். விருப்பு வாக்குகளை கேட்டுவரும் அபேட்சகர்கள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் கட்டாயம் எங்கள் இலக்கத்திற்கும் தரவேண்டுமென வாக்குக் கேட்கும் போது சத்தியமாகத் தருவோம் என்று கூறாமல் இன்ஷா அல்லாஹ் யோசிப்போம், முயற்சிப்போம் என நல்ல வார்த்தைகளால் அவர்களை அனுப்பி வைப்பதே சிறந்தது. மூன்று விருப்பு வாக்குகளை வைத்துக்கொண்டு முழுப்பேருக்கும் தருவதாகவும் முழுக்கட்சிக்காரருக்கும் சத்தியம் செய்வதும் பாவமானதாகும். இரண்டு முகத்துடன் பேசுவதல்ல காரியம். ஈமான் விசுவாசமே முக்கியமான தாகும். அல்லாஹ் நமது ஈமானை பாதுகாப்பானாக. ஆமீன்!

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**18-07-2004**





## 12. அதான் சொல்லும் முஅத்தின்கள் அந்தஸ்து குறைந்து வாழலாமா....?

ஒவ்வொரு கோயில்களும் தேவாலயங்களும் பூஜைக்குத் தயாராகிக் கொண்டே இருக்கிறது. ஆலயங்கள் தோறும் ஆயத்தம் செய்யும் நோக்கில் மணிகள் அடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. முஸ்லிம்கள் மட்டும் தங்கள் மஸ்ஜித்களில் மணி ஒலிக்காமல் "அதான்" பாங்கு சொல்கின்றார்கள். இந்த அதான் அமைப்பு எப்படி ஆரம்பமானது என்பது பற்றி ஆய்வோம். இஸ்லாத்தின் ஆரம்பகாலகட்டத்தில் பாங்கு இருக்கவில்லை. நேரத்தை யூகித்தே ஸஹாபாக்கள் தொழுவதற்கு வந்தார்கள். இதனால் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களையும் அவதானித்த மாநபி (ஸல்) அவர்கள் அனைத்து ஸஹாபாக்களுக்கும் அழைப்பு விடுத்து மதீனா பள்ளியில் ஒன்று கூடினார்கள்.

மக்களை ஒரே நேரத்தில் பள்ளிவாயலுக்கு அழைக்க என்ன யுக்தியைக் கையாலலாம்? என ஆலோசனை நடாத்தினார்கள். சிலர் உயரத்தில் தீ மூட்டி தெரியப்படுத்தலாம் என்றனர். அது யகூதிகளின் வழக்கமெனக் கூறி அபிப்பிராயம் கைவிடப்பட்டது. சிலர் குழல் ஊதுவோம் என்றனர். இதுவும் யூதர்களின் அமைப்பு எனக் கைவிடப்பட்டது. மணியோசை எழுப்பலாமென பலர் கூறினர். இது கிறிஸ்தவர்களின் வழக்கமெனக்கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. உமர் (றழி) அவர்கள் "அஸ்ஸலாது ஜாமிஆ" கூட்டுத்தொழுகை ஆரம்பமாகின்றது என்று உரத்த குரலில் ஒலிப்போம் என்றனர். இந்த அபிப்பிராயம் பலரைக் கவர்ந்தது. இந்த அமைப்பு சில காலம் பின்பற்றப்பட்டு வந்தது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக இஸ்லாம் மிகப்பரவி மக்கள் இஸ்லாத்தில் சாரிசாரியாக சேர்ந்த போது இந்த வழிமுறையும் சீராக வழிநடாத்த சிக்கலாக இருந்தது.

மீண்டும் ஒரு கூட்டம் மதீனாப் பள்ளியில் ஒன்றுகூடப்பட்டது. இந்தக் கூட்டத்திலும் சரியான முடிவு வராததால் ஸஹாபாக்கள் கவலையுடன் திரும்பினார்கள். இதே நாள் இரவு அப்துல்லாஹ் இப்னு ஸைத் (றழி) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். கையில் மணியுடன் ஒரு மனிதன் சென்றான். அவனைப் பார்த்து இவர் "அல்லாஹ்வின் அடியானே அந்த மணியை எனக்கு விற்பாயா?" என்று கேட்டனர். "எதற்காக இந்த மணியைக் கேட்கின்றாய்?" என்றார் அந்த மனிதர். "தொழுகைக்கு மனிதர்களை அழைப்பதற்கு" என்றார் அப்துல்லாஹ் (றழி). அம்மனிதர் அதைவிடச் சிறந்த முறையைத் தான் சொல்வதாகக் கூறி தற்போது வழக்கத்திலிருந்து வரும் பாங்கையும் இகாமத்தையும் மிக சிறப்பாகச் சொல்லிக் காட்டினார். விடியற்காலை மதீனாவில் சூரியன் தன் ஒளிக்கதிர்களைப் பரப்புகின்றான். அப்போது இக்கனவு பற்றி நபி (ஸல்) அவர்களிடம் சொல்லப் பட்டது. இக்கனவு உண்மை. இது பற்றி வஹி தேவ வாக்கு எனக்கு வந்துள்ளது. இந்த வசனங்களை பிலால் (றழி) அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும்படி சாந்த நபியவர்கள் சந்தோஷத்துடன் கூறினார்கள். இதே கனவை பல ஸஹாபாக்கள் கண்டிருந்தனர். இது நாள் முதலே இன்றைய பாங்கு சொல்லும் முறை அமுலுக்கு வந்தது. அதான் என்றால் பாங்கு. அதனைச் சொல்பவர் முஅத்தின் என்று அழைக்கப்படுவார். இதுவொரு மதிப்பான தொழில். இறைவனின் அழைப்பை விடுத்து இறை இல்லத்தை பக்தர்கள் மூலம் நிரப்புவதற்கு வழிசெய்யும் தொழில். இந்த அதானின் அமைப்பையும் அதன் தாற்பரியத்தைய் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அழகாகச் சொல்லி வைத் தார்கள். “முஅத்தின்கள் (பாங்கு சொல்பவர்கள்) கியாமத் நாளில் (அவர்களை கண்ணியப்படுத்தும் பொருட்டு) மக்களில் கழுத்து நீண்டவர்களாக இருப்பார்கள்” **(அறிவிப்பவர் : முஆவியா (றழி) ஆதாரம் : முஸ்லிம்)**

முஅத்தின்மாரின் அந்தஸ்தை முஹம்மது நபியவர்கள் முழு உலகத்திற்கும் பறைசாற்றி அவர்களின் அந்தஸ்தை உயர்த்தினார்கள். இன்று பாங்கு சொல்லும் முஅத்தினுக்கு சமுதாயத்தில் பெரிய அளவு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படு வதில்லை. பள்ளிவாயல்களில்கூட முஅத்தின்மாருக்கு உரிய சம்பளம் வழங்கப் படுவதில்லை. இன்று பல குமர் பிள்ளைகளுடன் அவர்கள் வாழ்வியல் சங்கிலியில் வழிசேர்த்து விட முடியாத நிலையில் முஅத்தின்மார் தவிர்க்கின்றனர். பிள்ளைகளை பாடசாலையில் அனுமதித்து சீராகப் படிப்பிப்பதற்குக் கூட போதாத சம்பளத்துடன் கிராமப்புறங்களிலே முஅத்தின்மார்கள் படும் துன்பம் சொல்லில் வடிக்க முடியாததாக உள்ளது. இன்று அதான் சொல்லும் முஅத்தின்மார்களுக்காக சரியான கொடுப்பனவு லீவு முறை எதுவுமின்றி ஒரு சொப்பிங் பேக்கில் உடுப்புகளை ஏந்திக்கொண்டு மூன்று மாதத்திற்கு ஒரு பள்ளி என்ற நிலையில் நிரந்தரமில்லாத தொழிலுக்கு அலைந்து திரிகின்றனர்.

முஸ்லிம் விவகார அமைச்சு, முஸ்லிம் நிறுவனங்கள் போன்ற அமைப்புக்கள் இருந்தும் முஅத்தின்மாரின் சேவை ஏமாற்றப்பட்ட கண்துடைப்புக்குள்ளான செய்தியாகவே அமைந்துள்ளது. அதிகாலை நேரத்தில் பள்ளிவாயலுக்கு வந்து விளக்கேற்றி கவுளுக்கு நீர் நிறைத்து பள்ளிவாசலை தூய்மைப்படுத்தி சிறப்புற அதான் சொல்லும் முஅத்தின்கள் தொழில் மதிக்கப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஆட்டு மந்தையிலோ அல்லது காட்டிலோ நீர் இருந்து அங்கு நீர் பாங்கு சொன்னால் பாங்கில் உன் சப்தத்தை உயர்த்து வீராக! ஏனெனில், உன் பாங்கின் சத்தம் செல்லும் தூரம் வரை (வழி நெடுக) அதனைக் கேட்கும் ஜின், மனிதர்கள் மற்றுமுள்ள பொருட்கள் அனைத்தும் கியாமத் நாளில் உமக்காச் சான்று பகருவர். **(ஆதாரம் : புகாரீ)** முஅத்தின்மாரின் சேவைக்கு நாமும் சான்று பகருவோம். அவர்களை மதிப்போம். உதவிசெய்வோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**25-07-2004**





## 63. பாரில் வந்த தீர்க்கதரிசிகளில் பல்லைப் பராமரிக்கச் சொன்ன பயகம்பர்

**அ**வர் வாய்மூடிக்கொண்டே இருக்க மாட்டாரா. ஒரு கழிவறையின் குழியில் இருந்து வருகின்ற நாற்றமல்லவா அவரின் வாயிலிருந்து வருகின்றது. சொல் லுவதைச் சொல்லட்டும். பல்லு வரிகளைத் தாண்டாமல் அக்கதை வந்தால் நல்லதாக இருக்குமே. இது நடக்க முடியாத சம்பவம்தான். வாய் நாற்றத்தால் இப்படி எண்ணத்தோணுகிறது. ஆசிரியர் முன்னால் சில குழந்தைகள் கதைக்க முற்படுகின்ற போது முகத்தை மூடிக்கொள்ளும் ஆசிரியர்களும் இருக்கதான் செய்கின்றார்கள். இது பெற்றோர் காலைக் கடமைகளை சரியாகச் செய்து அனுப்பாமல் ஏற்படும் குறையைக் காட்டுகின்றது. சிலருக்கு கண் விழிப்பதாலும் குடல் உஷ்னமடைவதாலும் பற்கள் மஞ்சலித்து வாயிலிருந்து நாற்றம் ஏற்படுகின்றது. சிலருக்கு வாய் வெப்பம் மிகப்பாரதூரமான நிலைகமைகளை ஏற்படுத்துகின்றது.

சிலர் மௌனமாக தொடர்ந்து இருப்பதால் வாய் நாற்றம் ஏற்படுகின்றது. அதிலும் வெளிக்காற்றோட்டம் இல்லாமல் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் பிரயா ணம் செய்பவர்களுக்கு கூடுதலான வாய் வெப்பம் ஏற்படுகின்றது. அதிகமாகத் தண்ணீர் குடிப்பதன் மூலம் குடல் உஷ்னத்தைக் குறைப்பதுடன் கூடியளவு பல் சுத்தம் செய்வதால் அப்படியான துர்நாற்றத்தை தடுக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது எனப்பார்ப்போம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “தூக்கத்திலிருந்து எழுந்தால் மிஸ்வாக் குச்சி கொண்டு பல் துலக்குவார்கள். **(அறிவிப்பவர் : ஹு° தைபா (றழி) ஆதாரம்: புகாரீ முஸ்லிம்)**

தூங்கி எழுந்து இன்று பலர் பல் துலக்காமல் தண்ணீர் கொண்டு வாயை மட்டும் அலம்பி விட்டு தேநீர் பருகி பத்திரிகை படித்து, வானொலி கேட்டு தொலைக்காட்சி பார்த்து சோம்பலுடன் காலைச் சாப்பாடும் உண்டு வாய் நாற்றத்திற்கு வழிவகுக்கின்றனர். எப்போதும் எழுந்தவுடனேயே பல் துலக்குகின்ற பரிசுத்தமான பயகம்பர் நபியின் பாங்கைப் பெற வேண்டும். பழக்கத்தை வழக்கமாக்க வேண்டும். அண்ணல் நபியின் அருமை மனைவி ஆயிஷா நாயகி சொன்னார்கள், “நாங்கள் அண்ணல் நபியின் பல்குச்சியையும் அவர்கள் வுழூச்செய்யும் தண்ணீரையும் தயாராக வைத்து விடுவோம். இரவில் அவர்கள் என்ன நல்வணக்கம் செய்ய வேண்டுமென அல்லாஹ் நாடியிருக்கினாறானோ அதற்காக அல்லாஹ் அவர்களை எழுப்புவான். அவர்கள் எழுந்து மிஸ்வாக் கொண்டு பல்துலக்கி வுழூச்செய்து தொழுவார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)** தன் அருமைக் கணவர் தாஹா நபி (ஸல்) அவர்களின் தகைமையை அறிந்து துணைவியார் தண்ணீரும் பற்குச்சியையும் பக்குவமாக இரவில் மிக்க மரியாதையுடன் வைப்பவர்களாக இருந்தால் காலை எழுந்ததும் பல்துலக்காமல் எச்சிவாயுடன் இன்றைய நாளை தொடங்க இருக்கும் கணவர்களை ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய பெண்கள் தடுத்து - பல்துலக்க வைத்து பால், தேநீர், காப்பி சாப்பிடுகின்ற பழக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. மடத்தனத்துடன் வாழும் கணவர்களை மனைவியர்களும் சுத்தமின்றி வாழும் மனைவியர்களை கணவர்களும் உண்மையைக் கூறி வாழப்பழகிக் கொள்ள வேண்டும். வாய் நாற்றத்தினால் வழக்காடு மன்றங்களில், காதி நீதிமன்றங்களில் தீர்ந்து போன திருமணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொரு சாப்பாட்டின் பின்னணியிலும் பல்துலக்கும்படி சுகாதார விஞ்ஞான சுற்றறிக்கைகள் சொல்லி நிற்கின்றன. இதைவிட ஒருபடி மேலாக இறைத்தூதர் அவர்கள் ஐந்து நேரம் பல்துலக்கும்படி ஆலோசனை சொன்னார்கள். காலை, பகல், இரவு என்று மூன்று வேளைச் சாப்பாட்டின் பின்னணியில் பல்துலக்குவதை மூளைசாலிகள் முடுக்கி விட்டிருக்க இது போதாது ஐயா. ஐந்து நேரம் ஆக்கிக்கொள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவுரை அர்த்தம் கற்பிக்கின்றது போலத் தோணுகின்றது.

நபி (ஸல்) கூறினார்கள் வுழூச்செய்யும் போது வாய் கொப்பளியுங்கள். பல்துலக்குங்கள் என்றனர். ஐந்து நேரமும் தொழுகைக்கு முன்பு வாய் அலம்பி பல்துலக்கத்தான் செய்கின்றோம். இது பொதுவாக மரபு வழியாகும். ஐந்து நேரத்தொழுகைக்கு முன்னால் கட்டாயமே பல்துலக்க வேண்டும். இல்லையெனில், வுழூச்சரிவராது என்றெல்லாம் சட்டம் போட்டு கட்டளையிடவில்லை. ஆயினும், வுழூச்செய்யும் போது சற்று பல்லை விளக்கிக்கொள்ள யாரும் விலகிக்கொள்வதில்லை. நாயகம் (ஸல்) கூறினார்கள், "என் உம்மத்தின் மீது கஷ்டம் இருக்கும் என்பதை நான் எண்ணவில்லை என்றால், ஒவ்வொரு தொழுகைக்கும் மிஸ்வாக் செய்யுமாறு அவர்களை நான் ஏவியிருப்பேன்". **அறிவிப்பவர் : அபூஹு® ரைரா (றழி) ஆதாரம்: புகாரி முஸ்லிம்)**

மனிதர்களுக்கு கஷ்டத்தை மையமாக வைத்து கடுமையாகப் பல்துலக்கும் சட்டத்தை ஐந்து நேரமும் நபி (ஸல்) முன்வைக்கவில்லை. ஆனால், வுழூவின் சுன்னத்தான காரியங்களில் பல்துலக்குவதும் உள்ளடக்கம் பெறுகின்றது. பெற்றெடுத்த பிள்ளைக்கு வாயில் பற்கள் இருப்பதில்லை. அவர்களின் வாயை தண்ணீர் கொண்டு அலம்பி விடுவார்கள். அங்கே மெல்லினமான நாவையே காணுகின்றோம். வல்லினமான பற்கள் எப்போது முளைக்க ஆரம்பிக்கின்றதோ அன்று முதல் வல்லினமான பற்கள் உருவாகுவதோடு கண்டிப்பாக சுத்தம் செய்ய வேண்டிய நிலைமையும் வேண்டப்படுகின்றது. குடல் உஷ்னம் வாய் வாசனையுடையவர்கள் கண்ணாடிகளின் முன் வாய் திறந்தாலே போதும் ஆவியின் உச்சகட்டத்தால் கண்ணாடியே புகையாகக் காட்சியளிக்கும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. முன்னால் பல்வரிசை நீண்டவர்கள் பற்களைச் சுத்தம் செய்யவே வேண்டும். நீண்ட பற்களுக்கும் நாற்றத்திற்கும் நிறையவே தொடர்புகள் உண்டு. சீனி என்னும் போது சீர்வரிசைப் பற்களே முன்னால் தெரிகின்றது. பற்கள் வெளிவரும் முன்னால் நாற்றம் வந்து மற்றவர்களைக்கூசிட வைத்திடாது பார்த்துக்கொள்வோம். பல் சுத்தம் செய்வோம்; பல காலம் சுகம் காணுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**01-08-2004**





## 64. உலகப்பொது மறை அல்குர்ஆனை ஓதாமல் உதாசீனம் செய்யலாமா...?

இஸ்லாமியர்களின் இதயம் கவர்ந்த மறை அல்குர்ஆன் ஆகும். 6666 அத்தியாயங்களைக் கொண்ட பொதுமறையாகக் கொள்ளப்படுகின்றது. பாதிஹா சூரத் தொடக்கவுரை (பகரா) இரண்டாவது அத்தியாயமாகக் கொள்ளப்படுகின்றது. சூரதுல் பகரா என்றால் ரிஷபம் மாடு என்பது அர்த்தம். அல்குர்ஆனின் கடைசி அத்தியாயம் அன்னாஸ் மனிதன் என்பதாகும். பிரார்த்தனையுடன் அல்குர்ஆனில் ஆரம்பப் பகுதியில் நுழைந்து பகரா என்ற மாடு என்ற அத்தியாயத்தில் மிருக சிந்தனையில் ஓத ஆரம்பிக்கின்ற ஒருவர் 6666வது அத்தியாயத்தை எட்டுகிற போது சூரதுன்நாஸை பாராயனம் செய்கின்றான். அப்போது நாஸ் என்ற மனிதத் தன்மையுடையவனாக மாறுகின்றான்.

மாட்டினுடைய நிலையிலிருந்து மனிதன் என்ற நிலையைக் காணுகின்ற போது அவனை பூரண குணமாக்குகின்ற புத்தூக்கம் அளிக்கவல்லதாக பொது மறை விளங்குகின்றது. அல்குர்ஆனின் ஆரம்ப வசனம் இக்ர.். ஓதுவீராக! என்றே ஹிரா மலையில் இறங்கியது. அல்குர்ஆனை ஓத ஓத மானிட சமுதாயத்தின் மத்தியில் நல்லெண்ணங்கள் நாளும் மலர்கின்றது. அல்குர்ஆனை ஓத வேண்டுமா? சிந்திக்க வேண்டுமா? என்பதில் பலர் பலவிதமாகச சொன்ன போதிலும், அதனை ஓதவும் வேண்டும் சிந்திக்கவும் வேண்டும் என்பதே இறுதியான முடிவாகும். நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் செவிமடுத்தேன். நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் நிச்சயமாக குர்ஆன் கியாமத் நாளில் தன் தோழர்களுக்கு பரிந்துரை செய்யக்கூடியதாக வரும். **(அறிவிப்பவர் : அபூஉமாமா (றழி) ஆதாரம்: முஸ்லிம்)** அல்குர்ஆனை ஓதுகின்ற பழக்கம் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. பெற்றார் முதலில் குர்ஆனை ஓத வேண்டும். பின்னர் பிள்ளைகளுக்கு அதனை உரிய முறையில் ஓத கற்றுக் கொடுக்க வேண்டும். முன்னைய காலங்களில் ம.்ரிப் தொழுகை முடிந்தும் இஷாத் தொழுகை வரை அல்குர்ஆனை ஆண்களும் பெண்களும் பாராயனம் செய்வார்கள்.

பள்ளிவாயல்களில் ஓதுபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் காணப்படும். வீடுகளில் பெண்கள் அதிகமாக ஓதுவார்கள். இன்று ம.்ரிப் தொழுகையும் இல்லாமல் இஷாத் தொழுகையுமில்லாமல் வீடுகளில் ஆண்களும் பெண்களும் தொலைக்காட்சி நாடகங்களிலேயே தங்கள் நேரத்தையும் காலத்தையும் கழிக்கின்றனர். வயோதிபர்களின் கையில் இருந்த அல்குர்ஆன் ஷைத்தானியத்தின் மூலம் கவரப்பட்டு கையில் ரிமோட் கொன்ட்ரோலுடன் நேரத்தைக் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அல்குர்ஆனை ஓதும் மு.்மினுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொடுத்த உதாரணத்தை உற்று நோக்குவோம். "குர்ஆனை ஓதும் மு.்மினான மனிதருக்கு உதாரணமாகிறது, நார்த்தங்காய் பழத்தைப் போன்றதாகும். அதன் மணமும் நறுமணமுடையது. அதன் சுவையும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனை ஓதாத மு.்.மினுக்கு உதாரணமாகின்றது பேரீத்தம் பழத்தைப் போன்றாகும். அதற்கு நறுமணம் கிடையாது. (எனினும்) அதன் சுவை இனிமை யானது. குர்ஆனை ஓதும் ((முனாபிக்) நயவஞ்சகனுக்கு உதாரணமாகிறது பூவைப் போன்றதாகும். அதற்கு நறுமணமும் உண்டு. (ஆனால்) அதன் சுவை கசப்பானது. குர்ஆனை ஓதாத (முனாபிக்) நயவஞ்சகனுக்கு உதாரணமா கிறது குமுட்டிக்காய் போன்றதாகும். அதற்கு நறுமணமும் கிடையாது. அதன் சுவையும் கசப்பானது. **(அறிவிப்பவர் : அபூமூஸல் அஷ்அரி (றழி) ஆதாரம்: புகாரி முஸ்லிம்)** மனிதனுடைய ஏற்றத்தாழ்வு எல்லாம் குர்ஆன் ஓதுவதிலேயே தங்கி நிற்கின்றது. குர்ஆனுக்கு கௌரவம் வழங்கும் போது நிச்சயமாக கௌரவம் கிடைக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், "நிச்சயமாக அல்லாஹ் இந்தக் குர்ஆனைக் கொண்டு எத்தனையோ கூட்டத்தாரின் அந்தஸ்துக்களை உயர்த்துகிறான். இந்தக் குர்ஆனைக் கொண்டு (அதனை உதாசீனப்படுத்தும்) எத்தனையோ கூட்டத்ாரை தாழ்த்துகிறான். **(அறிவிப்பவர் : உமர் இப்னு ஹத்தாப் (றழி) ஆதாரம்: முஸ்லிம்)**

அல்குர்ஆனை ஓதாமல் எத்தனை வீடுகள் இறைவனின் ஒளிப்பிரகாசம் பரக்கத் என்ற அருளுக்குத் தூரமாக இருக்கின்றது. அதிகாலையில் எழுந்து சுபஹ் தொழுகையை நிறைவேற்றி விட்டு அல்குர்ஆன் வீடுகளில் பாராயனம் செய்யப்படுமானால் நிச்சயமாக நிம்மதியும் அல்லாஹ்வின் அருளும் அதிகம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஓதப்படாத வீடுகள் பாழடைந்து விடுகின்றன. குர்ஆனின் அத்தியாயங்களை மனனம் செய்யத் தவறுகின்ற போது உள்ளங்களும் ஒளிவின்றி காணப்படுகின்றன. இதயம் இருளடைந்து விடுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள், குர்ஆனிலிருந்து சிறிதளவு கூட தம் உள்ளத்தில் மனனமில்லாதவர் பாழடைந்த வீடு போன்றாவார். **(அறிவிப்பவர்: அப்பாஸ் (றழி) ஆதாரம் : திர்மிதி)**

உலகில் எத்தனையோ பொதுமறைகள் இருந்தபோதும், அல்குர்ஆனின் வசனங்களை அப்படியே மனனமிட்டுக்கொள்கின்ற அற்புத சக்தியை அன்று முதல் இன்று வரை இஸ்லாமியர்கள் பெற்றிருக்கின்றனர். 7 வயதில் இமாம் ஷாபி (ரஹ்) போன்றோர் குர்ஆனை மனனமிட்டிருந்தனர். இந்த நூற்றாண்டில் இரண்டு மூன்று வயதுப் பிள்ளைகளும்கூட குர்ஆனை மனனமிட்டு உலகத்தை அதிசயிக்க வைத்த அற்புதங்களைப் பார்க்கின்றோம். ரமழான் மாதத்தில் அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்கள் மூலமாக பள்ளிகளில் குர்ஆன் பாராயனம் செய்யப்படுகின்ற பாங்கு அனைவரையும் அல்லாஹ்வின் பக்கம் அதிசயமாக பக்திகொள்ள வாய்ப்புக்களை வழங்கி நிற்கின்றது. ஒவ்வொரு இல்லங்களிலும் குர்ஆனை ஓதுவோம்; பிள்ளைகளுக்கு அல்குர்ஆனை சொல்லிக் கொடுப்போம். அகமும் முகமும் ஒளிரத்தக்க நல்லவர்களாகத் திகழுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**08-08-2004**





## 65. நிறுவை அளவையில் மோசம் செய்யும் நீதியற்ற வியாபாரத்தை நிறுத்துங்கள்!

**கொ**டிகட்டிப் பறந்த எத்தனையோ கடைகள், வியாபாரத் தலங்கள் விடுபட்டுப் போன வரலாற்றை எல்லா ஊர்களும் நல்ல முறையில் படித்துத்தான் இருக்கின்றன. சில்லறைக் கடை சில்லறை சில்லறையாக பணத்தை சம்பாதிக்கும் கடை. அளவை நிறுவையுடன் மிகவும் சம்பந்தப்பட்ட தொழில். யாருக்கும் தேவை ஏற்படுகின்ற பொருட்கள் சமையலறைக்கு அடிக்கடி சம்பந்தப்படுகின்ற சரக்குகள்; எப்போது போனாலும் எவராவது ஒருவர் கடையில் காத்து நிற்கின்ற மிக பிசியான அமைப்பு. அத்தகைய சில்லறைக் கடைகள நிறுவப்பட்டு காலப் போக்கில் நிறுத்தப்பட்ட நிலைமைகளையும் நிதானித்துப் பார்க்க முடிகின்றது. அந்தக் கடையில் சட்டப்படி நிறுப்பார்கள் என்று அடிக்கடி பாராட்டிப் பாராட்டி வாடிக்கையாளராகத் தன்னை ஈடுபடுத்திக்கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அதேவேளை அளவையில் ஆகவும் மோசமென ஆர்ப்பரித்து அந்தக் கடையை அடியோடு கைகழுவி விடுவோரும் இருக்கத்தான் செய்கின்றனர். வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் என்பார்கள். அளவை நிறுவையில் மிகவும் விழிப்பாக நடந்துகொள்கின்ற போது நமது கடைகளில் அபிமானிகளை அதிகரித்துக் கொண்டே இருப்பர். நிறுவையில் குறுக்காகி விட்டால் குறைய இட்டு பொதி அமைப்பதால் அபிமானம் பெண்கள் மத்தியிலேயே பிழையாகப் பேசப்பட்டு கடைக்கு ஆட்கள் வராத பரிதாபத்திற்கு மாறிவிடும். கடையே நீ கிட என்று போட்டு விட்டு முதலாளி ஊருக்கும் தெரியாமல் ஓடி ஒழிக்கின்ற ஒரு நிலை உருவாகும் என்பது உண்மை. தொழில் நிலையில் அளவை நிறுவை விடயத்தில் இஸ்லாம் என்ன சொல்கின்றது என்பதைப் பார்ப்போம்.

(இடையிலும் அளவிலும்) குறைவு செய்பவர்களுக்குக் கேடு உண்டாவ தாகுக. அவர்கள் எத்தகையோர் என்றால், மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கும் போது நிறைவாக வாங்குவார்கள். ஆனால் அவர்களுக்குத் தான் தாங்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் குறைவுசெய்த நஷ்டம் உண்டாக்குவார்கள். நிச்சயமாக தான் (இறந்தபின்) எழுப்பப்படுவோம் என்பதை அவர்கள் உறுதிகொள்ளவில்லையா? மகத்தான ஒருநாளைக்காக (கப்ருகளை விட்டும்) மனிதர்கள் இரட்சகனின் முன் எழுந்து நிற்கும் நாள். **(அல்குர்ஆன் : 83:01:06)** இந்த அத்தியாயம் அளவையில் மோசம் செய்பவர்களுக்கு இறுதிநாளின் எச்சரிக்கையை எடுத்தியம்பி நிற்கின்றது. சீனியை நிறுப்பதாயின், அதற்கு அதிகமான தாள்களை உட்கொண்டதாக சுருளிட்டு சீனியைக் குறைத்து அன்றாடப் பாவனையில் மண்ணெண்ணெய் தேங்காய் எண்ணெய் போன்வற்றைக் கூட கலன்களில் நிரப்பும் போது மிகவும் குறைத்து யார் பார்க்கப்போகின்றார்கள் என்ற நினைப்பில் அநியாயத்தை அப்பட்டமாகச் செய்துவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்ற எண்ணம் எப்போது இன்ஸானிடத்தில் இல்லாமல்போனதோ அன்று அவன் பாவத்திற்குத் துணை போனவனாகத் திகழ்கின்றான். இறைவன் நம்மைப் பார்க்கின்றான் என்ற மனோ வலிமையில் நல்லதைச் செய்கின்ற போது அதற்குப் பிரதியுபகாரம் கிடைக்கவே செய்கின்றது. நன்மையிலிருந்து எதனை நீங்கள் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதனை நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். **(அல்குர்ஆன் : 02:215)** மக்கள் பொருட்களை அளவை நிறுவையில் அநியாயம் செய்து இந்த உலக வாழ்க்கையில் தொழிலையும் இழந்து நிம்மதியான வாழ்வையும் இழந்து தவிப்போரையும் காணலாம். மனிதன் தனது வாழ்வில் ஏற்பட்ட நிறுவைக் குறைவினால் கடைக்காரரை ஏசிப்பேசுவதும் திட்டுவதும் அவனைச் சென்றடையாமலில்லை.

தராசில் பொருளிடும் பகுதியின் கீழ் தட்டில் காந்தத்தை வைத்து பாரத்தை ஏற்படுத்தி மனிதனை ஏமாற்றிப்பிழைக்க முற்பட்டவர்கள் சமூகத்தில் இன்னும் ஒழிந்துபோகவில்லை. தராசுகளை சரியாகப் பராமரிக்காமல் உரிய இடங்களுக்குக் கொண்டுபோய் சீல்வைத்து பாவனைக்குப் பயன்படுத்தாமல் ஒழிவுமறைவாக தராசுகளைப் பயன்படுத்துவது பாவமானதாகும். இது போன்றே அரிசிக் கடைகளிலும் அவதானிக்க வேண்டியது கண்டிப்பானதாகும். ஜவுலிக் கடைகளில் யார் அளவு - மீற்றர் அளவு போன்ற அமைப்புக்களில் கண்காணாது கத்தரிக்கோலினால் தறித்துவிடுகின்ற கூடாத மரபுகளும் பின்பற்றப்பட்டே வருகின்றது. தொழிலில் மென்மையான வழிமுறை மிகவும் பேணப்படவேண்டிய ஒன்றாகும். நாயகம் (ஸல்) கூறினார்கள், விற்கும் பொழுதும் வாங்கும் பொழுதும் கடனைக் கேட்கும் பொழுதும் மென்மையைக் கடைபிடிக்கும் மனிதருக்கு அல்லாஹ் கிருபை செய்வானாக என துஆச் செய்தார்கள். **(ஆதாரம் : புகாரீ)**

முன்வாழ்ந்த நபிமார்களும் தங்கள் சமூகத்திற்கு துஆச்செய்யத் தவறவில்லை நபி சுஐபு (அலை) கூறினார்கள், என்னுடைய சமூகத்தினரே அளவையும் நிறுவையையும் நீதத்துடன் நிறைவுசெய்யுங்கள் மக்களுக்கு அவர்களுடைய பொருட்களை நீங்கள் குறைக்காதீர்கள். **(அல்குர்ஆன் : 11:85)** நமது சமூகத்தில் வியாபாரம் செய்ய வேண்டும். அது எப்படி வேண்டும் என்றாலும் செய்யலாம் என்ற எதேச்சையான போக்குகளைக் கைவிட்டு இஸ்லாமிய ஷரீஆ கூறுகின்ற வியாபார அமைப்புக்களை கைகொண்டு வாழ்வியல் ஒழுங்குகளைக் கடைபிடிப்போமானால் மறுமையில் ஹலாலான வியாபாரம் செய்த நல்லவர்களுடன் நாமும் இருக்கலாம் என்பதில் ஐயமே கிடையாது.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**15-08-2004**





## 66. பிறரைத் திருப்திப்படுத்த செய்யும் அமல் பிரயோசனம் இல்லாமல் போவது உண்மை!

மனிதனை திருப்திப்படுத்துவதற்காக புகழை சம்பாதிப்பதற்காக பணியாற்றுபவர்கள் உலகில் அதிகரித்து விட்டனர். பெரியவர்களிடத்தில் சீமான்களிடத்தில் சிறப்புப் பெயர் பெறுவதற்காக கடமைகளில் கருணை காட்டுபவர்கள் போல் நடித்துக்கொள்பவகள் நமக்குள் இல்லாமல் இல்லை. சாலிஹீன் என்றால்...... நல்லவர் என்பது அர்த்தம். அது இயற்கையாக மானிடனின் மானுசீகத் தன்மையை வைத்து நடைபெறுகின்ற தீர்மானிக்கின்ற திறமையான பெயராகும். நல்லவன் போல் நடிப்பவன் ஒருநாள் உண்மை வெளிப்பட்டு ஓய்ந்து போவான். ஓரம் கட்டப்படுவான். அமல் என்பது இறைவனுக்காக மனிதன் செய்யும் இனிய கடமையாகும். அதில் கலப்பான சிந்தனைகளே இருக்காது. மிகத் தூய்மையாக இருக்கும். மாணிக்கக் கல்லின் பெறுமதியை மதிக்க முடியாதது போல் உண்மையுடன் இறைவனை வணங்கி வழிபடுபவனின் அந்தஸ்தை அதிசீக்கிரத்தில் புரிந்துகொள்ள முடியாது.

ஏழு வயதில் இறைவனைத் தொழ வேண்டும். பத்து வயதாகி விட்டால் கண்டித்து பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பது மாநபி (ஸல்) மலர்ந்தவையாகும். எத்தனையோ பேர் தொழத்தான் செய்கின்றார்கள். சிலர் சமய இயக்கங்களின் தலைவர்களுக்கு தன்னை ஒரு பெரிய இபாதத்தாளி என்று காட்டிக்கொள்வதற்காக அதிகமாக அமல் செய்யத் துணிகின்றனர். ஷிர்க் என்ற இணைவைப்பில் முகஸ்துதியும் ஒரு பகுதியாக வலியுறுத்தப்படுகின்றது. அடுத்தவருக்காக தன்னை நல்லவன் என்று காட்டிக்கொள்ள அமல்செய்து ஷிர்கிற்கு துணை போகக்கூடாது. அடுத்தவர்களுக்காக அமல்செயயத் துணியக் கூடாது என்பதை அல்குர்ஆன் எப்படி ஆய்கிறது என்பதைப் பார்ப்போம். "அவர்கள் மனிதர்களுக்கு காண்பிப்பவர்களாகவே (தங்கள் தொழுகையில்) சோம்பேறிகளாக நிற்கின்றனர். மிகக் குறைவாகவே தவிர அல்லாஹ்வை அவர் நினைவுகூறுவதில்லை. **(அல்குர்ஆன்: 4:142)**

மற்றவர்களுக்காக மார்க்கத்தில் நேரத்தை நீளமாக்கிக் கொண்டு போவோர்களும் சும்மா நேரத்தில் சோம்பேறியாக தொழுது கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இப்படியான மடத்தனங்கள் இணைக்குச் சமமான பாவங்கள். இதனைச் செய்ய எத்தணிக்கக் கூடாது. யார் மக்கள் புகழ்வதற்காக ஒரு அமலை (நற்செயலை) செய்வாரோ அவரை கியாமத்நாளில் அல்லாஹ் கேவலப்படுத்துவான். "யார் மக்களுக்கு காட்டுவதற்காக ஓர் அமலைச் செய்வாரோ அல்லாஹ் கியாமத்நாளில் மக்களின் முன்னிலையில் அவரின் இரகசியங்களை வெளிப்படுத்துவான்" என நாயகம் (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பவர் : சுபியான் (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** இன்று சிலர் தொழுகை மட்டும்தான் அமல் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். மலேசியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செய்து ஜப்பானின் சீல் குத்திய மின் உபகரணம் போல் இவர்களிடம் மார்க்கம் வேறு எங்கோ சீல் குத்தப்பட்டு வந்து சேர்ந்துள்ளது. இபாதத் என்பது மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். அத்தனை காரியத்திலும் அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணம் தொடரப்பட வேண்டும். வியாபாரம் செய்யும் ஒருவர் முதலாளிமார்களிடம் நற்பெயர் எடுக்கும் நோக்குடன் சாமான்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் சன்மார்க்கம் நேசன் போன்று காட்டத்தலைப்படுவது பாவமானதாகும். ஸதகா என்ற தர்மம்ஒரு பெரும் இபாத்தாகும். இடது கைக்குத்தெரியாமல் வலது கையால் வழங்குகின்ற வல்லமை படைத்த ஒரு அமலுமாகும்.

இன்று ஏழைஎளியவர்களுக்கு உதவி விட்டு பட்டியலிட்டுக்காட்டுவோர் பலர் இருக்கின்றனர். செய்த உதவியை தருணம் பார்த்துப் பார்த்து சொல்லிக் காட்டி குத்திக்காட்டி ஏழையைக் கொல்லாமல் கொல்லும் சொல் வழியால் நன்மையை சுட்டடெரித்தவர்கள் நிறையப்பேர் இருக்கின்றனர். பத்து ரூபாய் உதவி செய்து பதினொரு பேரிடம் சொல்வோர்களும் நூறு ரூபாய் உதவி செய்து நூற்றிஐம்பது பேர்களிடம் சொல்லுவோரும் சமூகத்தில் கூடிவிட்டார்கள். ஏழை வீடு ஒன்றுக்கு திருமணத்திற்காக சேலை முதல் சாப்பாடு, ஆபரணம் ஈராக செருப்பு வரை கொடுத்துவிட்டு சொல்லிக்காட்டுபவர்கள் கண் முன்னே காட்சி தருகின்றார்கள்.

கொடுத்துவிட்டு சொல்லிக்காட்டுவதை கோமான் நபி (ஸல்) வெறுத்தார்கள். உதவி வழங்கிய பின் ஊருக்கெல்லாம் கொக்கரிப்பதில் என்ன அர்த்தம் இருக்கின்றது? என்ன அமலாயினும் வணக்கமாயினும் அல்லாஹ்வுக்கே அமைய வேண்டும். சாதாரணமாக மனிதர்களுக்கெல்லாம் சாஷ்டாங்கம் செய்வதற்காக மனிதனிடம் பெயரெடுப்பதற்காக தனது நேரத்தையும் காலத்தையும் வீண் செய்யாது அல்லாஹ்வுக்காக அமல்செய்து அங்கீகரிக்கப்பட்ட அமலாக நமது வாழ்வையும் - இபாதத்தையும் அமைத்துக்கொள்ள தென்டிப்போமாக.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**22-08-2004**





## 67. நீண்டகாலம் உயிர்வாழ நேச நபி சொன்ன நெறிமுறை!

நீண்டகாலம் வாழ வேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் நினைக்கின்றான். சிறிய நோயாயினும் உடனே ஆஸ்பத்திரிகளுக்கும் தனியார் மருத்துவ மனை களுக்கும் செல்கின்றான். நீ இன்று மரணித்து விடு என்றால் அந்த வசனத்தை எவரும் ஜீரனிப்பதாகத் தெரியவில்லை. தான் மரணித்து விடுவதில் ஆர்வம் கொள்ளும மனிதனை உணர்வுகளாலும் உள்ளத்தினாலும் ஒருபோதும் உவந்து கொள்ள மாட்டான். நீங்கள் நீண்ட காலம் வாழவேண்டும் எனப்பிரார்த்தனை செய்யும் ஒருவருக்காக எதைக்கொடுக்கவும் எதைச்செலவு செய்யவும் தயாராக இருக்கின்றான். உங்களுடன் கஷ்டப்படுவதை விட நான் மௌத்தாகி விடுவது மேல் என்று தனது மனைவி கோபத்தை வெளியிடும் போது கணவர் கருத்துக் கெடுக்காமல் இருந்துவிடுவது உண்டு. என்னைக் கஷ்டப்படுத்தாமல் நீங்கள் இறந்துபோய் விடுங்கள் என மனைவி கூறினால் தாங்கிக்கொள்ள முடியாமல் தடுமாறும் கணவன்கள் இல்லாமல் இல்லை. எல்லாம் நீண்டகால வாழ்க்கையின் ஆசைதான்.

உங்களின் முன்னால் நான் உலகை விட்டும் பிரிந்துவிட வேண்டும். எங்களுக்கு வேறு யாரு உதவ இருக்கின்றார்? என்று மனைவி பாசக்கதையை அடுக்குகின்ற போது - கணவனுக்கு ஒரு படி சந்தோஷமாயினும் நோய்வாய்ப்பட்டு நொந்துபோய் இறந்துவிடுவேனோ? என்று தனது நிலையை நினைத்து - இல்லை இல்லை உங்களை விட நான் முந்திக்கொள்ள வேண்டும் என்று உபாயமான ஒரு வார்த்தையை உதிர்த்துவான். எல்லாம் நீண்டகாலம் வாழ் வதற்கு நினைத்ததுதான். இடைக்காலத்தில் இறந்துவிட எவர்தான் துணிகிறார்கள்? நீண்டகாலம் உலக வாழ்வில் நிம்மதியாக வாழவே மனசுகொண்டு அதற்கான ஆய்வுகளையும் சத்து மாத்திரைகளையும் உட்கொள்கின்றார்கள்.

நீண்டகாலம் வாழ்வதற்கு நேச நபி நாயகம் (ஸல்) சொன்ன அறிவுரைகள் என்ன என்பதை ஆராய்வோம். "தனது வருவாயின் பெருக்கத்தையும் தனது ஆயுளின் நீளத்தையும் விரும்பும் ஒருவர் தனது உறவினர்களைத் தளுவி நடந்துகொள்வாராக" என நாயகம் (ஸல்) கூறினார்கள். **(அறிவிப்பவர் : அனஸ் (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** உறவினர்களை உபசரித்து நடக்கும் போது அவர்களின் பிரார்த்தனை நமக்கு உதவியாக அமைந்து விடுகின்றது. குடும்பத்தினரின் பிரார்த்தனைகள் குவலயத்தில் நீண்டகாலம் வாழ்வதற்கு வழிவகுக்கின்றது. உறவினருடன் பகைத்துக்கொண்டு ஒதுங்கி வாழ்வதன் மூலம் யோசனை அதிகரிக்கின்றது. இரத்த உறவுகளை துண்டிப்பதன் மூலம் யோசனை தலைக்கேறி இருதய வியாதி - சர்க்கரை வியாதி அதிகரித்தல் போன்ற கஷ்டமான நோய்களுக்கு ஆளாகி விரைவாக உலகிலிருந்து விடை பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இரத்த உறவுகளுடன் பாசமக இருக்க கருத்துப் பகர்ந்தார்கள். உலகில் நீண்ட ஆயுளுக்கு எந்த வைத்தியரும் சொல்லாத மருந்தை மக்கத்து மாநபி (ஸல்) சொல்லியிருப்பது பெரும் பேறாகும். நாயகம் (ஸல்) கூறினார்கள், "ஒருவர் என்னிடத்தில் ஒரு செயலுக்குப் பொறுப் பேற்றுக்கொள்ளட்டும். அவருக்கு நான் நான்கு விஷயங்களுக்குப் பொறுப்பேற் கிறேன். அவர் தனது உறவினரைத் தழுவி நடக்கட்டும். அவரது ஆயுள் நீளமாகும். அவர் மீது உறவினர்கள் அன்பு செலுத்துவர். இரன விஸ்தீரனம் ஏற்படும். சுவர்க்கத்தில் நுழைந்திடுவார். (கன்ஜுல் உம்மால்) எவன் தானம் செய்கின்றானோ அவனுக்குத் தன்னாலேயே செல்வம் பெருகும். (ஜேம்ஸ் ஸ்ரீபன்)

குடும்ப உறவினர்கள் பசி பட்டினியுடன் கஷ்டப்படும் போது அவர்களைக் கவனிப்பதன் மூலம் இரன விஸ்தீரனம் ஏற்படுகின்றது. குடும்பத்தவர்களின் அன்பு, பாசம் தன்னுடன் பிண்ணிப் பிணைந்திருக்கின்றது. எல்லாவற்றையும் விட சுவனம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கின்றது. விட்டமின் வில்லைகளை உண்ணுவதிலும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்ற பழச்சாறுகளையும் அருந்தி ஆயுட்காப்புறுதியில் சேர்ந்து - நோய் வரும் போது பணம் பெறலாம் என்றெல்லாம் மேல் எண்ணம் வைத்து தானும் - தனது மனைவி - பிள்ளைகளும் வாழ வேண்டும் எனத்துடிப்பவர்கள் நீண்டகாலம் தனது ஆயுளை நீட்டவல்ல உறவினர் உறவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் உயர்தர நடவடிக்கைகளை ஏன் யோசித்து செய்யக்கூடாது.

மறுமைநாளில் ரஹ்மானுடைய அர்ஷின் கீழ் மூன்று சாரார் நிற்பார்கள். (1) உறிவனர்களைத் தழுவி நடப்பவர். அவருக்கு இம்மையில் ஆயுளிலும் விருத்தி ஏற்படுவதுடன் வருவாயும் பெருகும். அவருக்கு கப்ரிலும் இடவசதி ஏற்படும். (2) கணவரை இழந்த விதவைப் பெண். அவள் தனது சின்னஞ்சிறு குழந்தைகளை வளர்க்க வேண்டும் கருத்தில் அவர்கள் வாலிப வயதை எய்தும் வரை மறுமணம் முடித்துக்கொள்ளாதவள். (3) அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உணவு சமைத்து விருந்து படைப்பவர். **(அறிவிப்பவர் : அனஸ் (றழி))** திருமணம் முடிந்ததும் சிலர் உறவினர்களை அறவே மறந்து விடுகின்றனர். இன்னும் சிலர் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் கிட்டியதும் உறவினர்களை விசாரிப்பதை விட்டு விடுகின்றனர். கடிதம் எழுதி களைத்துப்போன உறவினர்களும் போன் பண்ணி போதுமாகிப்போன குடும்பத்தினரும் ஆயிரம் ஆயிரம் இருக்கத்தான் செய்கின்றார்கள். வீடு, கல்வி, குமர்காரியம் இவற்றுக்கெல்லாம் உறவினர்களிடம் பணம் கேட்டு ஒரு பதிலுமில்லாது ஒதுங்கி வாழ்பவர்கள் அநேகம் அநேகம். ஒரு கவிஞர் பாடினார் "சொந்தங்கள் சொல்லத்தானே வெட்கங்கள்; சோதித்துப் பார்த்தால் வேறு அர்த்தங்கள்". இப்பாடல் சிலரின் வாழ்வில் அப்பட்டமான உண்மையை வெளிப்படுத்துகின்றது. குடும்பங்களைப் பேணுவோம்; கோமான் நபி கூறியதுபோல் கூடியகாலம் வாழ்வோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**29-08-2004**





## 68. தொலைக்காட்சி பார்த்தவண்ணம் உண்ணுவது தூய நபியின் வழிமுறையைத் தொடுமா....?

எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியில் உழைத்து, கஷ்டப்பட்டு உழைத் ததிலிருந்து அன்றாடம் உணவுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து சமைத்து அதனை எப்படிச் சாப்பிடுவது? என்பது பல இடத்தில் கேள்விக் குறியாக மாறிக்கொண்டிருக்கின்றது. "ரிஸ்க்" எனும் ஆகாரம் அல்லாஹ்வினால் வழங்கப்படும் அருளாகும். அதனை பெற்றும் அனுபவிக்கத் தெரியாமல் பலர் வாழ்வது வேதனைக்கிடமாக அமைந்துள்ளது. நபிகளாரின் வாழ்வில் இருந்து நடைமுறையாக உணவு உண்ணும் உன்னதத் தன்மையை உணர்வோம். "உணவை உண்ண ஆரம்பிக்கும் போது பிஸ்மில்லாஹ் கூறுவீராக. வலது கையால் உண்ணுவீராக (உணவுத் தட்டில்) உமக்கு அருகிலுள்ள பகுதியிலிருந்து உண்ணுவீராக என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அறிவிப்பவர் : அம்றுப்னு ஸலமா (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)**

கை கழுவி உணவு உண்ண ஆரம்பிக்கும் கட்சிதமான சுகாதார அமைப்பை மாநபி (ஸல்) அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இன்று பிரயாணங்களில் - பிரயாண முடிவில் கையை அலம்பிக்கொள்ளமல் உண்பவர்களும் சபையில் சாப்பிட உட்காரும் போது "சஹன்" (ஒன்றிணைந்து பலர் உண்ணும் உணவுத் தட்டையில்) இருப்புக்கொண்டு கையை அலம்பாது நாங்கள் தொழுதுவிட்டுத்தான் வருகிறோம் என்று இறுமாப்புடன் உணவு உண்ண எண்ணுவோரும் நபிகளாரின் சுன்னாவை, வழியைப் பின்பற்ற வேண்டும். தொழுது விட்டும் வரும் வழியில் காதுக்கடிக்கு கைவிட்டு சொறிவதையும் கால்களில் உள்ள சிரங்குகளை கையினால் சொறிந்து சுகம் காணுவோர்களும் மூல வியாதியினால் அவதியுறு வோர் தனது இரத்தத்தடுப்புப் பிடவைகளை சீராக்கிக்கொள்வதும் தொழுது முடிந்தவுடன் சிறுநீர்கழித்து சீராக்கிக்கொள்வோர்களும் கை கழுவாமல் உண்பதை எவர்தான் ஜீரணிப்பார்கள். நபி வழி உணர்ந்து நடைமுறை கொள்ளல் அவசியமாகும்.

நாயகம் (ஸல்) கூறினார்கள், உங்களில் ஒருவர் சாப்பிட்டால் (முதலில்) அல்லாஹ்வின் பெயரை (பிஸ்மில்லாஹ்) கூறட்டும். ஆரம்பத்தில் அல்லாஹ்வின் பெயர்கூற அவர் மறந்துவிட்டால் "பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆஹிரஹு" ஆரம்பத்திலும் இறுதியிலும் அல்லாஹ்வின் பெயர் கொண்டு (உண்ணுகிறேன்) எனக்கூறுவீராக. **(அறிவிப்பவர் : ஆயிஷா (றழி) ஆதாரம் : அபூதாவூத் திர்மிதி)** தான் கைக்கெடுக்கும் உணவை அல்லாஹ்வின் பெயர் கொண்டு சாப்பிட வேண்டும் என்பதையே ஏந்தல் நபி (ஸல்) எதிர்பார்க்கின்றார்கள். உணவை நமக்குத் தந்தவன் அல்லாஹுத்தஆலா அவனது நாமத்தைக் கொண்டு உண்பதையே அவன் விரும்புகின்றான். பிஸ்மி சொல்லி உண்ண ஆரம்பிக்காத போது அவனுடன் ஷைத்தானும் உணவு உண்ண ஆரம்பிக்கின்றான். பலர் பீங்கான் - பீங்கானாக சோத்தை இட்டு இட்டு சாப்பிட்ட வண்ணமே இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் இறைநாமம் உரைக்காத அவனுடன் ஷைத்தானும் சேர்ந்து உண்பதால் உணவு விரைவாகத் தீர்ந்து விடுகின்றது. சபைகளில் சஹனங்களில் உண்ணும் பொழுது ஆனம் கூடினால் சோறும்; சோறு கூடினால் கறியும் என்ற நிலைப்பாட் டில் மிதமிஞ்சிய உணவை உட்கொள்பவர்கள் வாழ்வில் புத்தி குறைந்த அடியானாக - சாப்பாட்டை குத்து குத்தென குத்தி முடித்த அடியானாக மாறுகின் றான். (குத்துதல் என்ற சொல் பண்டைய இலக்கியங்களிலும் இஸ்லாமிய இலக்கியங்களிலும் உண்ணுதல் எனும் பொருள்தரும் வகையில் அமைந்துள்ளது).

ஒருமுறை நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்கள் ஆறு பேர்களுடன் உணவு உண்டுகொண்டிருந்தார்கள். அப்போது ஒரு காட்டரபி வந்தார். அவர் (மீதமிருந்த) அந்த உணவு முழுவதையும் இரண்டு கவளத்தில் (வேகமாகச்) சாப்பிட்டு விட்டார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள், இவர் பிஸ்மில்லாஹ் கூறியிருந்தால் இந்த உணவு உங்கள் அனைவருக்கும் போதுமானதாக இருந்திருக்கும். இவர் பிஸ்மில்லாஹ் கூறாததினால் உணவின் பரக்கத்து நீக்கி உணவு சீக்கிரமாகத் தீர்ந்து விட்டது. **(அறிவிப்பவர் : ஆயிஷா (றழி) ஆதாரம் : திர்மிதி)** எப்போதும் தனக்கு முன்னால் இருக்கின்ற உணவிலி ருந்தே சாப்பிட வேண்டும். பீங்கானின் நடுவில் இருக்கின்ற உணவிலிருந்து சாப்பிடக்கூடாது. அந்த உணவுத்தட்டையின் நடுப்பகுதியிலேயே அல்லாஹ்வின் பரக்கத் அருள் இறங்கக்கூடியதாக உள்ளது. இது பற்றி நபி (ஸல்) கூறும் போது பரக்கத் (அபிவிருத்தி) உணவின் நடுபபாகத்தில் இருக்குகிறது. ஆகவே, அதனை ஓரங்களிலிருந்து சாப்பிடுங்கள். அதன் நடுவில் சாப்பிடாதீகள். **(அறிவிப்பவர் : அப்பாஸ் (றழி) ஆதாரம் : அபூதாவூத் திர்மிதி)**

இன்று உணவு உண்ணும் பழக்கத்தில் மேற்கத்தேய அமைப்புக்களுடடன் புதிய வழிமுறைகளையே பின்பற்றுகின்றனர். தொலைக்காட்சியைத் தொடர்ந்து அதன் முன்னால் தங்கள் இருக்கைகளை ஏற்படுத்தி படம் பார்த்த வண்ணம் உணவு உண்ணும் பழக்கம் ஆண், பெண்களிடையே அதிகரித்து வருகின்றது. கதிரைகளில் சாய்ந்து கொண்டு உணவு உண்பதும், அத்துடன் படம் பார்ப்பதும் பயிற்சியாகி விட்டது. அழகாக அமைவாக "சுப்புறா" என்ற ஒரு பிடவையை விரித்து அதில் கால்மடித்து உட்கார்ந்து மேற்கூறிய முறைகளின் படி உணவு உண்ண வேண்டிய நமது சமுதாயம் தொலைக்காட்சியில்லாமல் வாயில் ஒரு பிடி உணவை வைக்க வருத்தப்படுகிறதே என்பதை நினைக்க வருத்தமாக இருக்கின்றது. நாயகம் (ஸல்) கூறினார்கள், "நான் சாய்ந்து கொண்டு சாப்பிட மாட்டேன்" **(ஆதாரம் : புகாரீ)** இந்த ஹதீஸையாவது யோசித்து சமுதாயம் சாப்பாடு உண்ணும் நேரத்தில் நல்லதை கடைபிடிக்க வேண்டும். இன்னும் சிலர் கையில் பீங்கானை ஏந்திக்கொண்டு இன்னொரு சமூகத்தின் கலாசாரங் களில் இன்பம் காண்பது இஸ்லாத்திற்கும் வழிமுறைகளுக்கும் குழிபறிப்பதாகும். உண்ணப்பழகுவோம் உயர்வடைவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**05-09-2004**





## 69. இலாபத்தை எதிர்பாத்து பதுக்குதல் பாவத்தை ஈட்டித்தரும் செயல்...!

அரசாங்க பட்ஜட் காலம் எப்போது வருமென எதிர்பார்க்கும் வியாபாரிகள் எக்கச்சக்கமாக இருக்கின்றார்கள். காரணம் பொருட்களைப் பதுக்கி வைத்து கூடிய இலாபம் பெறலாம் என்பதுதான். வரவு செலவுத் திட்டம் வாசிக்கும் முன்பே பல பொருட்கள் சமுதாயத்திலிருந்து திடீரென மறைந்து விடும். தட்டுப்பாடும் தலைவிரித்தாடும். விலை ஏற்றம் பொருட்களில் ஏற்பட்டதும் உடனே கூடிய விலையில் சரக்குகள் விற்கப்படும். பதுக்கி வைத்திருந்த மனிதன் அடையும் சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. குறுகிய காலத்தில் பெருத்த பொருளாதா ரத்தை ஈட்டிக்கொள்வார்கள். இதுபற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது எனப் பார்ப்போம்.

"போட்டி போட்டுக்கொண்டு விலையை மேலும் ஏற்றி விடுவதையும் ஆட்டின் பாலை சில நாட்கள் கறக்காமல் விட்டு மடுவில் பால் நிரம்பியிருப்பதாகக் காண்பித்து ஆட்டை விற்பதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். **ஆதாரம்: புகாரீ முஸ்லிம்)** பொருளின் விலையை கண்ணை மூடிக்கொண்டு அதிக விலை கூட்டி விற்பதுடன் அதனால் நுகர்வோரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் மனவேத னைக்கும் ஆளாகின்றனர். மனிதன் வேதனையுடன் கேட்கும் துஆக்கள் செல்வச் சீமானின் - சீராகப்பொருளாதாரத்தை திரட்டாத போலி வியாபாரிகளின் பொரு ளாதாரப் பலம் ஒருநாள் வீழ்ச்சி கண்டே தீரும். தவறான வழியில் ஈட்டப்படும் பொருளாதாரம் குறிப்பாக ஹலாலான வழியை சென்றடையாத இருப்பும் ஒரு நாள் சிறிய நோயிலே சிக்கித்தவிக்கும் அவன் சேர்த்ததை விடவும் மேலதிகமாகவும் செலவு செய்யும் அளவுக்கு அவனது பொருளாதாரம் முழுவதையும் வைத்திய சாலையில் கொண்டுபோய் கட்டிவிட களம் அமைக்கும் என்பது உண்மை. அதைவிட வீணாகப் புறப்படும் பொருளாதாரம் நாளை மறுமையில் அவனுக்கு நரகின் படுகுழியில் நல்லதொரு இடத்தைத் தேடும் என்பதில் ஐயமில்லை.

"ஒரு பொருளை வாங்கும் எண்ணமில்லாமல் (பிறரை ஏமாற்றுவதற்காக) ஒருவருக்கொருவர் பொருளின் விலையைக் கூட்டிவிடாதீர்கள்" என ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** இஸ்லாம் எப்போதும் நுகர்வோருக்கு சாதகமான அமைப்பையே எடுத்தோதி நிற்கின்றது. வியாபாரிகள் தங்கள் தொழிலை சிறப்பாகச் செய்வதையும் அதன் மூலம் இலாபம் காண்பதையும் இஸ்லாம் ஒருபோதும் தடுக்கவில்லை. மக்களை வதைசெய்யும் வர்த்தகர்களையும் கொள்ளை இலாபம் பெறுவதையுமே இஸ்லாம் வலுவாகக் கண்டித்துள்ளது. மக்களை ஏமாற்றிப் பிழைப்பதையும் பதுக்கல் வியாபாரம் செய்வதையும் இஸ்லாம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. பாராளுமன்றம் கூடுவதையும் நிதி அமைச்சரின் பட்ஜட் பேருரையையும் வழிமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி வைத்துப் பார்த்திருந்து பொருட்களுக்கு விலையைக் கூட்டுவது அநீதியானதாகும். திடீரென சம்பாதிக்கும் பலர் திடீரென மாயமாக மறைந்து விடுவதை அண்மைக் காலமாகப் பார்க்கின்றோம். பெறுமதியான வாகனம், பெரிய இடத்துத் தொடர்புகள் இரவு பகல் மக்கள் வருகை, நள்ளிரவில் நடமாட்டம் போன்ற புதிய அமைப்புக்களுடன் புகழ்பெற்று பொருளாதாரம் சம்பாதிப்பவர்கள் ஆறு மாதத்தில் அல்லது ஆறு வருடத்தில் முகவரியே தெரியாது எங்கேயாவது ஒரு தண்ணீர் தடாகத்தில் - மக்கள் இல்லாத காட்டுப் பகுதிக்குள் வாழ்வின் கடைசி அத்தியாயத்தை சந்திப்பதைப் பார்க்கின் றோம். எல்லாம் சிறுதுளி பெருவெள்ளமான கதையாக கபடமாகப் பொருட்களைப் பதுக்கி அதில் ஆசைப்பட்ட அனுபவத்திற்கு சமூக அந்தஸ்துப் பெறாத பொருட்களையும் அரசாங்கத்தினால் சமயங்களினால் தண்டிக்கப்பட்ட பொருட்களையும் கடத்துவதற்கு கள்ள வழியில் சம்பாதிக்க எண்ணம் வலுவடைகின்றது.

"வியாபாரத்தில் (வேண்டுமென்றே) விலையைக் கூட்டிவிடுவதை விலக்கியுள் ளார்கள்" நபிகள் நாயகம் (ஸல்) **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ்பின் உமர் (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** மனிதனின் ஆசைக்கு அளவே இல்லை என்று கூறுவார்கள். மனிதனின் ஆசையை அடக்கி நடப்பது மனம் சொன்ன வழிக்கெல்லாம் தன்னையிட்டுச் செல்வதை இஸ்லாம் தடை செய்துள்ளது. செல்வமும் சம்பாதிப்பும் நமது நடைமுறை வாழ்க்கையில் தேவைகளைப் பூர்த்தி செய்வதைத் தவிர சொத்துச் சொத்துக்களாக சம்பாதித்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்து சுவர்க்க வாழ்க்கையை மறப்பதற்கு அல்ல.

ஏமாற்றிப் பழக்கப்பட்ட வியாபாரிகள் எப்போதும் திருந்த சந்தர்ப்பம் கிடைப்ப தில்லை. பொருள் தட்டுப்பாடு வரும் போது சரக்குகளை ஒழித்துவிட்டு வாடிக் கையாளர்களுக்கு வெறும் அலுமாரியைக் காட்டி தருணம் வரும்போது சாமான் களைக் கொண்டு வந்து குவித்து கொள்ளை இலாபம் அனுபவிப்பவர்கள் எல்லாக் கட்டத்திலும் ஏமாற்றத் தவற மாட்டார்கள். அல்லாஹ்வையும் அவனது றசூலையும் அடியொட்டி நடக்கும் நல்லடியார்கள் நிச்சயமாக இத்தகைய அநியாயத்தைச் செய்ய மாட்டார்கள். பெற்றோல், டீசல் கூடிவிட்டதால் எல்லாம் கூடிவிட்டதாக ஒவ்வொரு பொருளிலும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் எனக் கூட்டி விற்கும் கிராமத்துக் கடைகளும் ஒழுங்கைக் கடைகளும் தெருக் கடைகளும் இஸ்லாத்தைகக் கடைபிடிக்க இறைவன் துணை செய்வானாக.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**12-09-2004**





## 70. மிஃராஜ் தினத்தை மீளாய்வு செய்து மேதனியில் தொழுகையை நிலைநிறுத்துவோம்!

அபிவிருத்தியடைந்த நாடுகள் எல்லாம் விண்ணுலக ஆய்வுகளை, கிரக ஆய்வுகளைச் செய்ய முற்பட்டு ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்ற நேரம்; இக்காலத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விமானங்கள் எதுவும் இல்லாமல் விண்கலங்கள் எதிலும் ஏறாமல் விண்ணகம் சென்று மண்ணகம் வந்தார்கள் என்ற மிஃராஜ் தரும் தாற்பரியத்தை உணர்வோம். மாநபி (ஸல்) அவர்கள் ஓர் இரவு மருமகன் அலி (றழி) யின் சகோதரியான உம்மு ஹானியின் வீட்டில் உறங்கினார்கள். கண்களுக்குத் தானே தூக்கம் கருணை நபியின் கல்கண்டு இதயத்திற்குமா தூக்கம்? இல்லையே! உம்மத்துக் கள் உறங்கும் போது விழிக்கின்ற இதயத்தின் இறஸூல் அல்லவா? அவர்களை நோக்கி வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) வருகை தந்தார்கள். ஏந்தல் நபியை எழுந்திருக்கச் செய்தார்கள்.

"அல்லாஹுத்தஆலா உங்களுக்கு ஸலாம் சொன்னான். உங்களை தன் சந்நிதிக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டுள்ளான். உங்களை அழைத்துச் செல்ல நான் வந்துள்ளேன். அல்லாஹ்வின் அற்புதங்களை நீங்கள் பார்க்க வேண்டும். உங்களுக்கு உயர்ந்த கௌரவம் அளிக்க வேண்டும் என்று அவன் விரும்புகின்றான் என நபியவர்களிடம் வானவர் கோமான் வாய் விட்டுப் பேசினார். புனித நபிகள் புறப்பட்ட புறாக் எனும் அலங்கரிக்கப்பட்ட அற்புக வாகனம் வந்து நின்றது. ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் நாயகம் (ஸல்) அவர்கள் கண்மூடி விழிக்கும் நேரத்தில் ஜெரூஸலத்திலுள்ள பைதுல் முகத்தஸ் பள்ளியை அடைந்தனர். இதனை இஸ்ரா இராவழிப் பயணம் என எடுத்துரைப்பர். மஸ்ஜிதுல் அக்ஸாவில் மாநபியவர்களை வரவேற்க மலாயிக்காமார் அணிய ணியாக நின்றனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கு தொழுகையை நடாத்திவிட்டு வானை நோக்கி பயணம் செய்தனர்.

இந்நிகழ்வு நபிகளார் மக்காவை விட்டு ஹிஜ்ரத் செல்வதற்கு ஒரு வருடம் ஐந்து மாதங்களுக்கு முன்னர் (ஹிஜ்ரத்தின் முந்திய வருடம்) ரஜப் மாதம் 27ம் திகதி திங்கள் இரவு நிகழ்ந்தது. இந்தப் பயணம் உண்மையானதா? இஸ்லாமும் இறைமறையும் இதனை ஏற்கிறதா? என்பதை ஆய்வோம். "(அல்லாஹ்) மிகப்பரிசுத்தமானவன். அவன் முஹம்மது (ஸல்) அலைஹி வஸல்லம் என்னும் அடியாரை (கஃபாவாகிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து (வெகுதூரத்திலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழவுள்ள பூமிகளை ஆசீர்வதித்தோம். நம்முடைய திருஷ்டாந்தங்களை அவருக்கு காண்பிப்பதற்காகவே (அழைத்துச் சென்றோம்). நிச்சயமாக (உமது இறைவனாகிய) அவனே செவியுறுவோனாகவும் உற்றுநோக்கோனாகவும் இருக்கின்றான்" **(அல்குர்ஆன் : 17:01)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே இந்தப் பயணம் நடைபெற்றதை அல்குர்ஆன் அழகாகச் சொல்லி நிற்கின்றது. பைத்துல் முகத்தஸிலிருந்து ஏழு வானங்களையும் கடந்து ஏந்தல் நபி (ஸல்) சென்றார்கள். வானலாவ ஆராய்ச்சி விஞ்ஞானிகளிடையே விரிவுகாணாமல் இருக்கின்ற இவ்வேளை அல்குர்ஆன் கூறுகின்றது, "ஏழு வானங்களையும் அவைகளைப்போல் பூமியையும் அல்லாஹ்தான் சிருஷ்டித்தான்" **(அல்குர்ஆன் : 65:12)** இந்தக் கருத்தின் அடிப்படையில் முதலாவது வானத்தில் ஆதம் (அலை) அவர்களையும், இரண்டாவது வானில் ஈஸா (அலை), யஹ்யா (அலை) இருவரையும் மூன்றாம் வானில் யூசுப் (அலை), தாவூத் (அலை), சுலைமான் (அலை) ஆகியோரையும் நான்காம் வானில் இத்ரீஸ் (அலை), ஹஸ்ரத் மர்யம், பிர்அவ்னின் மனைவி ஆஸியா ஆகியோருடன் மலக்குள் மௌத் இஸ்ராயில் (அலை) யையும் ஐந்தாவது வானில் இப்றாஹீம் (அலை) அவர்களையும் அவர்ளது இரண்டு புதல்வர்களான இஸ்மாயில் (அலை), இஸ்ஹாக் (அலை) இருவரையும் ஆறாம் வானில் மூஸா (அலை) அவர்களையும் ஏழாம் வானில் இஸ்ராபீல் (அலை) அவர்களையும் கண்டார்கள்.

சந்தித்த அனைவரும் சங்கை நபி முஹம்மது நபி (ஸல்) அவர்களை ஸலாம் கூறி வரவேற்றார்கள். சுவர்க்கத்தின் காட்சிகளையும் நரகத்தின் கோரத் தாண்டவங்களையும் நபிகளாருக்கு நன்கு காட்டப்பட்டது. க.்பாவுக்கு நேராக வானலாவ அமைந்துள்ள பைத்துல் ம.்மூர் என்ற பள்ளியையும் நாயகம் (ஸல்) பார்வையிட்டார்கள். அதன் பின்னால் ஸித்ரதுல் முன்தஹா என்ற மரம் வரை அல்லது மனிதனின் புத்தி செயல்பட முடியாத இடம் வரை அழைத்துச் சென்று அதற்கப்பால் எனக்கு வரமுடியாது என வானவர் ஜிப்ரீல் நின்று கொண்டார். அதன் பின் அண்ணல் நபிகள் (ஸல்) அவர்கள் ரப்பின் தரிசனையை சந்தித்து தொழுகையைப் பரிசாக வேண்டி வந்தார்கள்.

மி.்ராஜ் செய்தியை உலகில் அறிவித்த போது அதனை உண்மைப்படுத்திய உத்தமத் தோழர் அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களே. அதனால்தான் அவர்க ளுக்கு சித்தீக் உண்மையானவர் என்ற நாமம் கிடைக்கப்பெற்றது. ஒவ்வொரு மு.்மினும் தொழும்பொழுது ஒரு மி.்ராஜை சந்திக்கின்றான். உள்ளச்சத்தின் உறுதிப்பாட்டிலேயே இவை தங்கியிருக்கின்றது. ஐங்காலத் தொழுகையைத் தொழாமல் வாரம் ஒருநாள் ஜும்ஆவுக்கு மாத்திரம் வருவது வருடத்தில் ரமழான் மாதம் மட்டும் தொழுதல் - பெருநாள் தினங்களில் மாத்திரம் தொழுகையை எடுத்தல் போன்ற நிலைமைகளுக்கு இஸ்லாமிய உம்மத் செயல்ஊக்கம் பெறுவது விண்ணுலக யாத்திரையில் பரிசாகக் கிடைத்த தொழுகையை வீணாக்க முயலும் விபரீத ஆசையாகும். திருமணம், மையித், முக்கிய வைபவங்களுக்குத் தொழுகையைக் கைவிட்டு எஞ்சியுள்ள நேரத்தில் தொழுவது போன்ற அமைப்புக்களில் பெண்களும் சிரத்தை எடுக்கின்றனர். தொழுகையை வீணாக விட்டுவிடாது தினமும் ஐந்துவேளை மி.்ராஜைக் காணுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**19-09-2004**





## 71. பராஅத் இரவில் அமல் செய்து பாவம் நீங்கப் பலன் காண்போம்!

**ஷ.்**பான் மாதம் நடுப்பகுதி வருகின்றது என்றதுமே இஸ்லாமிய உள்ளங்கள் எல்லாம் சந்தோசப்படுகின்றது. உவகை கொள்கின்றது. ஷ.்பான் மாதம் 15 வது நாளை பராஅத்துடைய இரவு என அழைக்கிறோம். அன்றைய தினம் அல்லாஹுத்தஆலா மானிடனின் பாவத்தை மன்னிக்கின்றான். மாந்தருக்கு அருள்செய்கின்றான். குறிப்பாக ஒரு மனிதனின் வருடக்குறிப்பு ஆரம்பமாகின்றது என்று கூடக்கூறலாம். ஷ.்பான் மாதத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதிகமாக வணக்கத்தில் ஈடுபட்டார்கள். பாவமன்னிப்பு தேடினார்கள். நாயகம் (ஸல்) கூறினார்கள், "அல்லாஹுத்தஆலா ஷ.்பான் மாத நடுப்பகுதியின் இரவில் தனது படைப்புக்களை அவதானித்துப் பார்க்கின்றான். அப்போது குரோதம் பாராட்டுபவன், தற்கொலை செய்துகொண்டவன் ஆகிய இருவரையும் தவிர மற்ற தன் அடியார்களை மன்னிக்கின்றான்" **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ்பின் அம்ரு (றழி) ஆதாரம் : முஸ்னது அஹ்மது மஜ்மஉஸ் ஸவாயிது)**

றமழான் மாதத்திற்கு முன்னோடியான மாதமாக ஷ.்பான் மாதம் எண்ணப் படுகின்றது. நாயகம் (ஸல்) அவர்களிடம் புனித ரமழானின் நோன்புக்கு அடுத்த சிறப்புறு நோன்பு எதுவெனக்கேட்கப்பட்ட போது, ஷ.்பான் ரமழானுக்கு கண்ணியம் தருவதாக இருக்கின்றது என்றனர். இந்தப் புனித ஷ.்பானில் நோன்பு நோக்கின்ற பழக்கம் நபிகளார் (ஸல்) அவர்களிடம் அதிகமாகக் காணப்பட்டது. ஆயிஷா நாயகி (றழி) கூறினார்கள், ஷ.்பான் மாதம் பூராக நாயகம் (ஸல்) நோன்பு நோற்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து நோன்பு நோற்று வணக்கவழிபாடுகளில் ஈடுபட்ட நாட்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நமது வாழ்விலும் அந்த நாட்களைக் கருத்திற்கொண்டு நல்ல அமல்களில் ஈடுபட வேண்டும். அமல் அதிகரிக்கும் போது உள்ளம் பிரகாசிக்கின்றது.

ஸல்மான் இப்னு குஹைல் சொன்னார்கள், ஷ.்பான் மாதம் குர்ஆன் ஓதக்கூடிய மாதம் ஹாபிழ்கள் (அல்குர்ஆனை மனனம் செய்தவர்கள்) காரி என்றழைக்கப்படும் அல்குர்ஆனை அழகாக ஓதுபவர்களும் ரமழான் மாதத்திற்கு முன்னர் முன்னோடி ஒத்திகை பார்த்து இபாதத்திற்கு இஸ்தரப்படுத்திக் கொள்ள பெரும் வாய்ப்பு அளிக்கின்றது. ஹஸன் இப்னு ஸஹ்ல் சொன்னார்கள், இறைவா! இரண்டு சிறப்பு மாதத்திற்கிடையே ஷ.்பானை ஆக்கித் தந்தாய். எதற்காக? உனக்காக அல்குர்ஆனை ஓதுவதற்கு ஆக்கிக்கொள்ளத்தான் என்றனர். மாபெரும் மேதைகள் எல்லாம் ஷ.்பான் மாதம் அதிகமாக அல்குர்ஆனை ஓதினார்கள்; சிந்தித்தார்கள். ஏன் நாமும் நமது பொழுதுகளை நல்ல அமல்கள் செய்வதில் ஆக்கிக்கொள்ளக்கூடாது. இமாம் ஷிஹாபுத்தீன் அல்கஸ்தலானி அன்னவர்கள் பல அறிஞர்களின் கூற்றை வைத்து எழுதுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிச்சயமாக ஷ.்.பான் மாதம் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லும் மாதமாகும். ஏனெனில், ஸலவாத் பற்றிய திருவசனம் இந்த மாதத்திலேயே இறங்கியது. நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது அமரர்களும் நபிகளார் மீது ஸலவாத்துச் சொல்கின்றனர். விசுவாசிகளே! நீங்களும் ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள்" **(அல்குர்ஆன்) (ஆதாரம் : ஷரஉல் ஷர்கானீ அலல்மவாஹிப்)** இந்தப் புனிதமான பராஅத்துடைய இரவில் நபிகளார் மீது ஆயிரம் ஆயிரம் ஸலவாத்துச் சொல்வோம். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பைப் பெறுவோம். நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனது உம்மத்துக்காக அருளின் வாசல் திறக்கப்பட்டிருக்கின்றது. இரவின் ஆரம்பம் முதல் பஜ்ர் உதயமாகும் வரை அருள் இறங்குகின்றது. நிச்சயமாக அல்லாஹுத்தஆலா இன்றிரவில் பனீகுலைப் கோத்திரத்தாரின் ஆடுகளின் முடியை விட அதிகளவு பேருக்கு நரகத்தை விட்டும் விடுதலை செய்கின்றான். **(ஆதாரம் : துர்ரதுன் நாஸிஹீன்)**

ஈஸா (அலை) அவர்கள் ஒரு மலையின் பக்கம் சென்றார்கள். அது பாலை விட வெண்மையாக இருந்தது. அதைக்கண்டு அதிசயித்தனர். அல்லாஹுத்தஆலா அதைவிட அதிசயம் ஒன்றைக் காட்டுகின்றேன் என்றான். அந்த மலை வெடித்தது. இதில் ஒரு மனிதன் தாடி வைத்த வயோதிபர் ஒரு கையில் தஸ்பீ.் மணியும், மறுகையில் திராட்சைப் பழத்தட்டும் வைத்திருக்கிறார். அவர் தொழுகின்றார். இதனைப் பார்த்த ஈஸா (அலை) அங்கு எவ்வளவு காலமாக வாழ்வதாக விசாரித்தார். 400 வருடங்களாக இருக்கின்றேன் என்றார். ஈஸா (அலை) இறைவா! இவரை விட சிறந்த படைப்பும் உண்டா என்றார். அல்லாஹுத்தஆலா அறிவித்தான்; ஈஸாவே முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஒரு உம்மத் ஷ.்.பான் மாதத்தை அடைந்து பராஅத்துடைய இரவில் வணக்கம் செய்வது 400 வருடங்கள் அமல்செய்பவரை விட மேலானவர் என்றான். ஈஸா (அலை) அன்னவர்கள் சொன்னார்கள்; நானும் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தாக ஆகியிருக்க வேண்டியிருந்ததே என்றனர். **(ஆதாரம் : ஸ.்.ரதுர் ரியாழ்)**

பராஅத்துடைய இரவில் அமல்செய்வது பற்றி பல நூல்கள் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை முன்வைக்கின்றன. அதில் சில நூல்களான முஸ்னது அஹ்மது அத்தர்கீப் வத்தர்ஹீப் - மஜ்மஉஸ் ஸவாயிது - ஷஹீ.். இப்னு ஹிப்பான் - அத்தபரானி அல்கபீர் - அல்மஜ்மஉஸ் ஸவாயிது - கஷ்புல் அஸ்தார் - அஸ்ஸுன்னத் இப்னு ஆஸம் போன்ற நூல்களாகும். பராஅத் இரவு சில பகுதிகளில் ம.்.ரிப் தொழுகையின் பின் மூன்று யாசீன்களை ஓதி பிரார்த்திப்பர். நல்லவைகள் நடக்கட்டுமே!

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**26-09-2004**





## 72. ஒழுக்கமில்லாமல் கல்வி கொள்வது உருப்படியான பயனைத் தராது!

**பா**டசாலையில் ஒழுக்கத்தைப் படித்துக்கொள்ள வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் நினைக்கிறோம். அதற்காகத்தான் ஒவ்வொரு பெற்றோரும் தங்களால் முடிந்த தியாகத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒழுக்கம் என்பது இயற்கையாக ஊற்றெடுத்து வர வேண்டியதாகும். பெற்றோரின் பழக்க வழக்க முறைகளுடன் - ஒழுக்கமுறைகளுடன் - ஒழுக்கம் பரம்பரை வழியாகவும் பிள்ளைகளிடம் பிரதிபலிக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆசிரியரைக் கண்டு பெரிய வகுப்பு மாணவர்களைப் பார்த்து தனது வகுப்பறை நண்பர்களின் உச்சஸ்தான ஒழுக்கத்தைக் கண்டு உயர்வடைபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். கல்விக்கு பிரதானம் ஒழுக்கமாகும். ஒழுக்கமில்லாத கல்வி ஒருபோதும் மதிக்கப்பட மாட்டாது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். ஒழுக்கமில்லாத கல்வியும் ஓரங்கட்டப்படும்.

சின்னவயதிலேயே சிகரட் பழக்கத்திற்கு ஆளாகி பல சிறுவர்கள் சீரழிந்து விடுகிறார்கள். பாடசாலை தேநீர்சாலையிலிருந்து சிகரட் கொண்டுவரும் படி மாணவர்களைக் கட்டளயிடுகின்ற ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தோடு நின்றுவிடவில்லை. சாப்பிட்டவுடன் ஒரு சிகரட், மலகூடம் செல்ல மறுசிகரட் இப்படியாக மக்களிடம் பணம்கொடுத்து சிகரட் வாங்கும் பழக்கத்தை வளர்த்து விடுகின்றனர். காலப்போக்கில் அப்பாவுக்கு மட்டுமா ஊதத்தெரியும்? ஆசிரியருக்கு மட்டுமா சுருள் சுருளாய்ப் புகை விடத்தெரியும்? எனக்கும் விட முடியும்தானே என்று பற்ற வைத்துப்பார்க்கும் பள்ளிப்பிள்ளைகள் நிறைய வளர்கிறார்கள். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறி. பெரிய இடத்தில் அப்பா நானும் ஊதிக்காட்டவா? என பெண் பிள்ளைகளும் செல்லத்தில் செய்து காட்டுவதும் உண்டு. "மண்டு! மண்டு!!" என்று சொல்லி விட்டு என்ற செல்லக் கண்டு என அழைத்துக்கொள்வோரும் உண்டு.

எப்போது மாணவர்கள் இரவில் தங்கிப்படிக்க தனது வீட்டை விட்டு வெளியே போகின்றார்களோ அன்றுதான் அவன் ஒழுக்கம் தவறும் நாளாகும். சில மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துகின்றனர். சிலர் சீரழிவின் பாதைக்கே சென்று விடுகின்றனர். வீட்டில் ஆண் உதவியில்லாத பெண்களை பள்ளி மாணவர்கள் ஏமாற்றிவிடுவதைப் பார்க்கின்றோம். இரவில் தங்கிப் படிக்க ஆரம்பிக்கும் போது குடிப்பதற்கு, சாப்பிடுவதற்கு என்று பண்பாகப் பழகி பின்னர் பொரியல், வறுவல் என்று தொடங்கி மதுபானம் பாவிக்கின்ற நிலை வரை அது உயர்ந்து செல்கின்றது. சில மாணவர்கள் இரவில் படித்தாலும் விடுமுறை நாட்களில் வீடியோ படங்களில் நேரங்களைக் கழிக்கின்றனர். சாதாரணமான படத்தில் தொடங்கி திருமணப் படங்களைக் காட்டி விட்டு நாளடைவில் ஒழுக்கக்குறைவான நீலநிறப் படங்களில் புலன்களைச் செலுத்தத் தொடங்கி விடுகின்றனர். பாவம் பரிதாபமாக பாலியல் உறவுகளுக்கும் அடிமையாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றனர். பாடசாலைகளில் மேடையமைத்தல், ஹவுஸ் கட்டுதல், விளையாட்டுப் போட்டிக்குக் கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்குத் தயாராகுதல் போன்ற விடயங்களுக்காக வீணாக இரவில் கண்விழித்து பாடசாலைகளில் தூங்குகின்ற அமைப்புக்கள் மாறவேண்டும். அதிபர்களும் ஆசிரியர்களும் அப்படியான நிகழ்ச்சிகளுக்கு இரவில் விழிக்கின்ற அமைப்புக்களை எல்லாம் மாற்றியமைத்து - மாலைப்பொழுதுடன் மாணவர்கள் வீடு சென்றடையக்கூடிய வசதிகளைச் செய்ய வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் பேணுதலாக நடவடிக்கைகளைத் தொடராத போது நல்ல முன்னேற்றம் காணுவது அரிதாகும். ஒருநாள் தேன், மறுநாள் வெங்காயம் என்ற பழமொழிக்கு மாணவர்கள் மாறிவிடக் கூடாது.

மாணவர்கள் சேர வேண்டும்; பழக வேண்டும்; படிக்க வேண்டும் அதில் எந்தத் தவறுமில்லை. ஆனால்.... பழகப்பழக நல்ல பழக்கங்களாக இருப்பின் அது தூய்மை தரும். அரபிப் பழமொழியில் இப்படிக்கூறுவர், ஒரு கூட்டத்தோடு நாற்பது நாட்கள் ஒருவன் வசித்து விட்டால் பிறகு அவர்களுள் ஒருவனாகி விடுவான். எந்த வீட்டிலும் தொடர்ந்து பழகும் போது அவர்களுள் ஒருவராகி விடுவதைப் பார்க்கின்றோம். அந்த அமைப்பு நல்லதாக இருந்தால் நல்லது. மாறாக இருந்தால் மனவேதனையாக மாறிவிடும். உயர்தரப் பாடசாலைகளில் ஒழுக்கம் அப்பலோ வேகத்தில் ஒதுங்கிக்கொண்டிருக்கின்றது. ஆபாச படக்காட்சிகள் தென்படுகின்ற கையடக்கத் தொலைபேசிகளும் சிகரட் பாவனைகளும் மதுபோதைப் பழக்கங்களும் மயக்க மருந்துகளின் சகவாசங்களுமம ஆட்கொண்டு வருவது சமூகத்தில் பாரிய பின்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள், "வெட்கம் நலவைத் தவிர வேறெதனையும் கொண்டு வராது" **(அறிவிப்பவர் : இம்ரான் பின் ஹுஸைன் (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)**

வெட்கமுடன் ஒழுக்கமுடன் வாழும் சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவோம். பாடசாலைச் சுற்றுலாவின் போது ஆண் பெண் கலந்த கலவன் பாடசாலைகள் தங்கள் பிரயாணங்களில் சோசலிஷமான இஸ்லாமிய ஷரீஅத்திற்கு மாற்றமான விடயங்களில் மாணவர்களை ஒன்றுபடுத்தி விடாமல் விழிப்புடன் செயல்படத் துணிய வேண்டும். நமது பிள்ளைகள் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் நற்பெயர் எடுத்துத் தர வேண்டும். ஒரு கவிஞர் சொன்னது போல், "நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு" என்றோ நாக்குதான் கழுத்துக்கு விரோதி என்று வந்துவிடாமல் ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் பலிப்பீடங்களாக மாறாமலும் காதலின் சொகுசு வாசலாக அமையாமலும் பாதுகாப்பது நமது மாணவர்களின் கடமையாகும். கையில் ஒரு டயரி இருந்தால் ஒரு பெண் மாணவி போன்று சுற்றி வரலாம் என்ற துணிவு ஒருபோதும் நன்மை பயக்காது. பெற்றோர் டியூசன் வகுப்புக்களிலும் கவனம் செலுத்தி சிறந்த ஒழுக்கமுள்ள பிள்ளைகளின் வளமான வாழ்வுக்கு பிரார்த்திப்போம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**03-10-2004**





## 73. பொதுக்குளியலறையைப் பாவிப்பவர்கள் புரிந்துகொள்ள இஸ்லாமிய அறிவுரைகள்...!

உடம்பில் தோன்றும் உஷ்னத்திற்காக குளிப்பதில் அனைவரும் மகிழ்ச்சி கொள்ளத்தான் செய்வார்கள். பகல் பொழுதெல்லாம் அலுத்து வேலை செய்பவர்கள் மாலைப்பொழுதில் குளித்துக்கொள்வதும் உண்டு. அலுவலுக்குப் போவதற்காக ஆபிசில் காரியம் ஆற்றுவதற்காக காலைப்பொழுதில் குளிப்பவர்களும் உண்டு. காலையில் குளிப்பது கண்ணுக்குக் குளிர்ச்சி தரும். மாலைக் குளிப்பு எப்படியும் உடல்நலத்திற்கு உகந்ததாக இல்லை. குளிக்கின்ற போது ஆணோ பெண்ணோ மரியாதையைக் கடைபிடிக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் ஒன்றிணைந்து குளிப்பது பல சோதனைகளுக்கு இடம்தருவனவாக அமைகின்றது.

பெண்கள் தனிமையில் குளிக்க வாய்ப்புள்ள இடங்களில் பெண்கள் ஓரளவு வெட்கத்தை தனதாக்கிக்கொண்டு குளிக்க முற்படுவார்கள். ஆண்களுடன் சேர்ந்து குளிக்கின்ற போது அவர்களின் உண்மையான அந்தரங்கப் பகுதிகளைக் கழுவி சுத்தம் செய்துகொள்ள அவஸ்தைப்படுவார்கள். அதுபோன்றுதான் பெண்களின் மத்தியில் குளிக்கத்தலைப்படுகின்ற ஆண்களும் சீராக ஊத்தை நீக்கி குளித்துக்கொள்ள முடியாமல் திக்குமுக்காடுவார்கள். சிலரின் வாழ்க்கையில் குளிப்பதற்கான வாய்ப்பு காலடியிலேயே அமைந்து விடுகின்றது. சிலருக்கு ஆழமான கிணறுகளிலே கயிறு இழுத்து வாளியுடன் தன்னை வருத்திக்கொண்டு தண்ணீர் இழுக்க ஏற்பாடாகி விடுகின்றது. சிலர் ஆற்றை நோக்கி மூட்டை முடிச்சுக்களுடன் போக வேண்டி ஏற்படும். இன்னும் பலருக்கு குளக்கரையில் குளித்து உடுப்புக் கழுவி வீடு வந்து சேர வேண்டியிருக்கும். பொது பைப்புகளிலும் பொதுக்கிணறுகளிலும் குளிக்கும் சிரமமான அமைப்பு சிலருக்கு அமைந்துவிடுகின்றது.

இன்று பாடசாலைகளிலே நீர்த்தடாகம் அமைத்து நீந்தப் பழக்குகின்றனர். இஸ்லாத்திலே நீச்சல் பயிற்சி தடைசெய்யப்படவில்லை. ஆனாலும் ஒவ்வொன்றுக்கும் விதிமுறைகள் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. பெண்களின் குளியலறைக்கு ஆண்கள் செல்வதால் பெண்களின் மனநிலையில் பல சிக்கல்களை உருவாக்கி விடும். அப்படியான நிகழ்வுகள் மனத்திரையிலிருந்து இலகுவில் அழிந்துவிடுவதில்லை. குளிக்கும்போது எட்டிப்பார்த்தான். மரத்தின் மறைவில் மறைந்திருந்து பார்த்தான் - கதவின் துவாரத்தால் கள்ளக்கண்ணால் நோக்கினான். விசில் அடித்தான் - வீணை இசைத்தான் - துவாயைத் தூக்கினான் - சவர்க்காரத் தைத் திருடினான் - உடுதுணியை ஒழித்துவைத்தான் என்றெல்லாம் குளிக்கின்ற பகுதிகளிலிருந்து குரல் ஒலிக்கப்படுவதைக் கேட்கின்றோம். இஸ்லாம் இதுபற்றி என்ன கூறுகின்றது எனப்பார்ப்போம். "அல்லாஹ்வையும் மறுமைநாளையும் நம்பும் ஒருவர் மதுபரிமாறப்படும் விருந்தில் உட்கார வேண்டாம். அல்லாஹ் வையும் மறுமைநாளையும் நம்பும் ஒருவர் வேஷ்டியின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக் குளியலறையில் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பும் ஒருவர் தன் மனைவியை பொதுக் குளியலறையில் நுழையச்செய்ய வேண்டாம்" என்று நபி (ஸல்) கூற நான் கேட்டுள்ளேன். **(அறிவிப்பவர் : உமர் (றழி) ஆதாரம் : அஹ்மத்)** பொதுஇடங்களில் குளிக்கும் பெண்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் பிரத்தியேக வசதிகளைச் செய்ய வேண்டும். வீடுகளிலுள்ள கிணறுகளாக இருந்தாலும் சரியே - மறைந்து குளிக்க விரைந்து ஆண்கள் வேலியாயினும் மரங்களையேனும் வளர்த்து வசதியிருப்பின் ஒரு சுவரையே மறைவாக ஆக்கிக்கொடுத்தால் புனிதமான கைங்கரியத்தைச் செய்தவனாக மாறுகின்றான். குளிக்கச் சென்ற இடங்களில் காதல் கொண்டு முடித்த கணவனையே விட்டுப்போட்டவர்களும் தனது குடும்பத் தின் கௌரவம் ஒருபுறம் இருக்க தோல் அழகுக்காக வாழ்வையே பிழையாக்கிக் கொண்ட ஆண் பெண்களும் நம்மில் வாழத்தான் செய்கின்றார்கள்.

"என்னை நபி (ஸல்) சந்தித்தார்கள். உம்மு தர்தாவே, எங்கருந்து வருகின்றீர்? என்று கேட்டார்கள். பொதுக்குலியறையிலிருந்து என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் என் உயிரைக் கையில் வைத்து இருப்பவன் மீது சத்தியமாக எந்தப் பெண்ணும் தன் தாய்மார்களின் வீட்டிலேயே அன்றி தன் ஆடையை களையக்கூடாது. ஆனால் அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள திரையை (களைவதில்லை)" என்று கூறினார்கள். **(அறிவிப்பவர் : உம்மு தர்தா (றழி) ஆதாரம் : அஹ்மத் - தப்ரானீ)** பாடசாலையில் நீர்த்தடாகத்தில் உடுப்பைக் களட்டும் இன்றைய இஸ்லாமியப் பெண்களும் அதேவேளை பெண்கள் கல்லூரியாக இருப்பின், பயிற்சியளிக்கும் ஆணின் முன்னால் அறைகுறை ஆடையில் தோன்றுவது எவ்வளவு பாவச்செயலாக மாறுகின்றது என்று பார்ப்போம்.

நீச்சல் உடைக்கு சமமான உடைகள் இன்று பல விளையாட்டுக்களுக்கு பாவைகளை அழகூட்டும் கவர்ச்சி உடையாக மாறியிருப்பது பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு அருவருப்பைத் தூண்டுகிறது. மாத்திரமல்லாமல் மறுபுறத்தில் பாவத்திற்கு பார்வையை ஈர்த்துச் செல்கின்றது. ஒலிம்பிக்கும் ஒரு உதாரணம். "ஹிம்ஸ் என்ற நாட்டிலிருந்தோ சிரியா நாட்டிலிருந்தோ சில பெண்கள் ஆயிஷா (றழி) அவர்களிடம் வந்தனர். (அவர்களை நோக்கி) ஆயிஷா (றழி) அவர்கள் "நீங்கள் பொதுக்குளியலறையில் நுழையும் பெண் களா?" என்று கேட்டுவிட்டு எந்தப் பெண்ணும் தனக்கும் தன் இறைவனுக்கும் இடையே உள்ள தடுப்பை அழித்தே தவிர தன் கணவனின் வீட்டிலேயே அன்றி (வேறு இடத்தில்) தன் ஆடையைக் களைய மாட்டாள் என்று ஏந்தல் நபி (ஸல்) கூறக்கேட்டேன் என்று ஆயிஷா (றழி) கூறினார்கள். **(அறிவிப்பவர் : அபுல் மலீஹ் அல்ஹுது தலீ (றழி) ஆதாரம் : திர்மிதி - இப்னுமாஜா - அபூதாவூத்)** குளிப்பின் போது விழிப்பாக இருப்போம். நலம் பெறுவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**10-10-2004**





## 74. அஃலன் வஸஃலன் யாஸஃர ரமழான் அஸ்ஸலாமு அலைக்க யாஸஃர இஃஸான்!

புனித ரமழான் மாதம் வந்து விட்டது. எல்லா முஸ்லிம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சந்தோஷம் ஊற்றெடுத்து நிற்கின்றது. நோன்பு நோற்க வேண்டும்; இரவில் கண்விழித்து நல்லமல்களில் ஈடுபட வேண்டும்; பகல் பொழுதில் பரோபகாரம் செய்ய வேண்டும் என்ற இனிய எண்ணங்கள் கனிந்து கொண்டிருக்கின்றன. பள்ளிகள் எல்லாம் விழித்திருக்கும். பக்திகொண்ட மானுடங்கள் தங்கள் காலங்களையும் நேரங்களையும் பள்ளியுடன் கழிக்கவே விருப்பப்படுவார்கள். ரமழான் இரவுகளில் விழித்திருந்து அமல்செய்வதின் தாற்பரியம் என்ன என்பதை கவனிப்போம். நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "யார் ரமழான் மாதத்தில் ஈமானுடன் நற்கூலியை ஆதரவு வைத்தவராக இரவில் நின்று வணங்குகின்றாரோ அவரின் முன்பாவங்கள் மன்னிக்கப்படும்".
**(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)**

இரவில் நின்று வணங்குவதால் நமது பாவம் மன்னிக்கப்படுகின்றது எனப் பார்க்கும் நாம் ரமழான் எத்தகைய தாற்பரியத்தை தன்னகத்தே வைத்துள்ளது என்பதை யோசிப்போம். "நிச்சயமாக (குர்ஆனாகிய) இதனை லைலதுல் கத்ர் எனும் கண்ணியமிக்க இரவில் இறக்கிவைத்தோம். (நபியே!) கண்ணியமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்ததாகும். மலக்குகளும் ஜிப்ரீல் (அலை) அவர்களும் தங்களின் இரட்சகனின் கட்டளையைக் கொண்டும் சகல காரியங்களின் பொருட்டு (பூமியில்) இறங்குகின்றனர். அவ்விரவு சாந்திமிக்கது - அது வைகறைப் பொழுது உதயமாகும் வரை உள்ளது. **(அல்குர்ஆன் 97:01:05)** ஆயிரம் மாதங் களை விட அற்புதமிக்க இரவை உள்ளடக்கிய புனித ரமழானை நாம் எவ்வளவு தூரம் கௌரவிக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரமழானில் நோன்பு நோற்பது ஒரு பிரதானமான அமல். அது நமக்கு மட்டும் தரப்பட்டது அல்ல. முன்னர் வாழ்ந்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட ஒன்றாகும். அது பற்றி அல்குர்ஆன் அறிவிக்கும் போது "முஃமின்களே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் பயபக்தியாளர் களாக ஆகலாம்" **(அல்குர்ஆன் 02:183)** இதன்படி அதிகாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை பசித்திருந்து நோன்பு வைக்கின்றோம். நோன்பு என்பது திறந்த துவாரங்களின் வழியே பொருட்கள் உட்செல்லக்கூடாது என்பது மட்டும்தான் என எண்ணுவது யதார்த்தமல்ல. மனிதனுடைய பார்வை, கேள்வி, பேச்சு, நடை எல்லாம் இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டி இருக்கின்றது. தீய செயல்களிலிருந்து தங்களை விலக்கிக்கொள்வது நோன்பின் நோக்கமாக அமைகின்றது எனவே, இத்தகைய சிறப்புமிக்க ரமழானில் பாவம் மன்னிக்கப்படுகின்றது. சுவர்க்கம் திறக்கப்பட்டிருக்கின்றது. நரகின் வாயில்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. தௌபாவின் வாயில்கள் விரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனை ஓதுவதற்கு ஒரு எழுத்துக்கு 30 நன்மைகள் வழங்கப் படுகின்றன. புன்னியமும் கண்ணியமும் பூத்துக்குலுங்குகின்ற இந்த நேரத்தில் அல்லவா நோன்பு நோக்க வேண்டும். "யார் ரமழான் மாதத்தில் ஈமானுடன் நற்கூலியை ஆதரவு வைத்தவராக நோன்பு நோற்கின்றாரோ அவரின் முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன" என்று ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத் தார்கள். **(ஆதாரம்: புகாரீ முஸ்லிம்)** எல்லாப் பாவங்களும் இனிதே மன்னிக்கப்படுகின்ற வல்ல ரமழானில் காரணமில்லாமல் நோன்பு நோற்காது காலத்தைக் கடத்தும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சிலர் இறைவனிடம் என்ன பதில்சொல்ல போகின்றார்கள்? நோன்பு நோற்காவிடினும், நோன்பாளி போன்று மிகவும் சங்கையாக பகல் பொழுதில் நடந்துகொள்ள வேண்டுமென இஸ்லாமிய ஷரீஅத் கூறிநிற்கின்றது.

இவற்றுக்கெல்லாம் மாற்றமாக நோன்பின் பகல் பொழுதுகளில் தேநீர் கடைகளில் உண்டும், பருகியும் கைகளில் சிகரட்டும் வாயில் வெற்றிலையும் சாப்பிட்டு சுற்றுதல் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அகௌரவப்படுத்தும் செயலாகும். இது தவிர இரவு நேரங்களில் கண்விழித்து அமல்செய்ய வேண்டிய பகுதிகளான தராவிஹ் தொழுதல், வித்ர் தொழுதல், ஹிஸ்புல் குர்ஆன் பாராயனம் போன்ற வழிபாடுகளில் தங்களை லயப்படுத்த வேண்டியிருக்க சிறுவர்கள் எல்லாம் இரவில் விழித்து மாற்று சமயத்தவர்களின் மனம் புண்படும் அளவுக்கு வீடுகளின் கதவுகைள கழற்றி வேறொரு இடத்திற்கு மாற்றுதல், மின்சார பள்புக்களை சேதப்படுத்துதல், பூ மரங்களை உடைத்தல், நடுஇரவில் பாதையை மறித்து கிரிக்கட், உதைப்பந்தாட்டம் போன்றவற்றை ஏற்பாடு செய்து விளையா டுதல் போன்றவை முற்றிலும் மனவேதனையைத் தூண்டும் செயலாகும்.

ஊர் ஜமாஅத்தினரும் ஒன்றுபட்டு புனித ரமழான் மாதத்தில் நலன்காண வழிசெய்வோம். வீண் விளையாட்டாக காலம் தள்ளும் இளைய சமுதாயத்திற்கு நோன்பின் தாற்பரியத்தை நுணுக்கமாகப் புகட்டுவோம்.

**அஃலன் வஸஃலன் யா ஷஃர ரமழான்**

**அஃலன் வஸஃலன் யாஷஃர இஃஸான்**

**மர்ஹபா யாஷஃர ரமழான்**

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**17-10-2004**





## 75. சீர்மையாக ரமழானில் நோற்கும் நோன்பை சினிமா பார்த்து கழிப்பது நியாயமாகுமா...?

புனித நோன்பு இஸ்லாமிய ஆண் பெண்களுக்கும் புத்திசுவாதீனமுடைய வர்களுக்கும் நோன்பு நோற்கும்படி கட்டாயப்படுத்தினாலும் கூட வயது முதிர்ந்தவர்களுக்கும் தூரப்பிரயாணம் செய்பவர்களுக்கும் நோயாளிகளுக்கும் மாதாந்த ருதுவினால் ஆட்கொள்ளப்பட்டவர்களுக்கும் வாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிக்கப்படுகின்றது. நோன்பு என்பதனால் முற்றிலும் மனிதனை சிரமப்படுத்துகின்ற ஓர் அமலாக எண்ணி விடக்கூடாது. இது பற்றி அல்குர்ஆன் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம். "(இவ்வாறு விதிக்கப்பெற்ற நோன்பு) சில குறிப்பிட்ட நாட்களில் (கடமையாகும்) ஆனால் (அந்நாட்களில்) எவரேனும் நோயாளியாகவோ - அல்லது பயணத்திலோ இருந்தால் (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்னால் வரும் நாட்களில் நோற்க வேண்டும். எனினும், (கடுமையான நோய் முதுமை போன்ற காரணங்களினால்) நோன்பு நோற்பதை கடினமாகப் பார்ப்பவர்கள் அதற்குப் பரிகாரமாக பிதியாவாக ஒரு மிஸ்கீனுக்கு (ஏழைக்கு) உணவளிக்க வேண்டும். எனினும், எவரேனும் தாமாகவே அதிகமாகக் கொடுக்கின்றாரோ அது அவருக்கு நல்லது. ஆயினும் நீங்கள் (நோன்பின் பலனை அறிவீர்களானால்) நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு நன்மையாகும். (என்பதை உணர்வீர்கள்)" **(அல்குர்ஆன் : 02:184)**

இப்போது அல்குர்ஆனின் மூலம் உண்மையாக எவரையும் இஸ்லாம் - சமய ரீதியாக துன்பப்படுத்தவில்லை என்பதை உணர்கின்றோம். சிறிய நொண்டிச் சாட்டுக்களை முன்வைத்து நோன்பை விட்டு விடாமல் இனிய ரமழானில் நோன்பு நோற்க முற்பட வேண்டும். நோன்பு நோற்பதன் மூலமாக நாம் அடையும் பாக்கியங்களை வார்த்தைகளால் சொல்லி முடிக்க முடியாது. "சுவர்க்கத்தில் ரைஹான் என அழைக்கப்படும் வாசல் ஒன்று உண்டு. அதில் கியாமத்நாளில் நோன்பாளிகள் மட்டுமே நுழைவார்கள். வேறு யாரும் நுழைய மாட்டார்கள். நோன்பாளிகள் எழுந்து அந்த ரைஹான் எனும் வாசல் வழியாக சுவர்க்கத்தில் நுழைவார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாயில் பூட்டப்படும். பிறகு வேறுயாரும் அவ்வாசல் வழியே நுழைய முடியாது என நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்". **(அறிவிப்பவர் : சஹல் பின் ஸஹ்து (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)**

நாம் நோற்கும் நோன்புக்கு சுவனம்தான் பரிசு என்றால் அது மிகப் பெறுமதியானதாகும். அதைவிடப் பெறுமதி அல்லாஹுத்தஆலாவின் திருப் பொருத்தம். இது ஆத்மீகத்தின் உச்சகட்ட நிலையாகும். நோன்பாளிகளுக்கென விசேட கூலி அல்லாஹ்வினால் வழங்கப்படுகின்றது. எல்லா அமலுக்கும் இறைவன்தான் கூலி தருகின்றான். என்றாலும் இதுவொரு விசேட அமைவு என்றுகூட கூறலாம். இது பற்றி மாண்பு நபி (ஸல்) மலர்ந்தருளுவது என்னவென்று பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான், ஆதமுடைய மகனின் அமல்கள் அனைத்தும் நோன்பைத் தவிர அவனுக்குரியவையாக உள்ளன. நிச்சயமாக நோன்பு எனக்குரியதாக இருக்கின்றது. நானே அதற்குக் கூலி கொடுக்கின்றேன். நோன்பு பாவங்களைத் தடுக்கும் கேடயமாக உள்ளது. உங்களில் ஒருவர் நோன்பு வைத்தால் அந்நாளில் அவர் தீய வார்த்தைகளைப் பேச வேண்டாம். மேலும் கூச்சல் போட வேண்டாம். யாராவது அவரைத் திட்டினால் அல்லது அவரிடம் சண்டைக்கு வந்தால் நான் நோன்பாளி என்று கூறி விடவும். முஹம்மதின் உயிர் எந்த அல்லாஹ்வின் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக நோன்பாளியின் வாய் நாற்றம் கஸ்தூரியின் நறுமணத்தை விட அல்லாஹ்விடம் அதிக நறுமணம் உடையதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. ஒன்று அவன் நோன்பு திறக்கும் போது மகிழ்ச்சியடைவான். இரண்டு கியாமத்நாளில் தனது ரப்பை சந்திக்கும் போது தன் நோன்பைக் கொண்டு மகிழ்ச்சியடைவான்". **(அறிவிப்பவர் : அபூஹுரைரா (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)**

உணவுத் துவாரங்கள் வழியாக தண்ணீர், ஆகாரம் எதுவும் உட்செல்லாத போது வாயிலிருந்து வாசனைகிளம்பச் செய்யும். அந்த குடல் வாசனை கஸ்தூரியை விட மேலானது. இருப்பினும், பல்வேறு சமயங்களுக்கு மத்தியில், பொதுஇடங்களில், பொது வாகனங்களில் பிரயாணம் செய்யும் நாம், நோன்புடன் வாயை சுத்தம் செய்துகொள்ள வேண்டும். அடுத்தவர்களுக்கு துன்பம் கொடுக்காமல் வாழ்வதும் ஓர் அமல் அல்லவா? அது மாத்திரமன்றி, நோன்பு நோற்றிருக்கும் நல்லடியார்களுக்கு வேலைப்பழுவைக் கூட்டி வேதனை செய்யவும் கூடாது. வேடிக்கை பார்க்கவும் கூடாது. கூடுதலான நேரம் வீண் பேச்சில் கழிப்பது நோன்பின் வரிசையை சீர்குலைப்பதாக அமைந்துவிடும். அதிகம் பேசி புதுமை படைத்தவன் யார்தான் இருக்கின்றார்?

"பேசப்பேச பாவம் அதிகரிக்கின்றது. பாவம் கூடும் போது உள்ளம் மரணிக்கின்றது. மரணித்த உள்ளமுடையவன் நரகில் நுழைவான்". **(நபிகள் நாயகம் (ஸல்)** கூச்சல்போட வேண்டாம் என கோமான் நபி (ஸல்) நோன்பாளிக்கு கூறிவைத்தார்கள். இன்று நோன்பு காலத்தில் பள்ளிவாயலுக்குள் கஞ்சிச் சண்டை - சிறிய பிள்ளைகள் அதிகம் வருவதால் பிஞ்சுச் சண்டை - இரவில் ஹிஸ்புக்கு சமைக்கும் சமையல்காரனுடன் இஞ்சிச் சண்டை இப்படித் தொடர்கிறது. நோன்பு காலத்தில் சிலர் கோபத்துடனேயே காணப்படுவார்கள். கொஞ்சநேரம் பசியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், மனைவியுடன் சண்டை இடுபவர்களும், சஹர் நேரச் சோறு சூடாக இல்லையென வேறு பலர் மனைவியுடன் சூடாகிக் கொள்வதும் சமூகத்திலிருந்து விடைபெற வேண்டும். பகல்பொழுது முழுவதும் ஒவ்வொரு செனலிலும் மாறி மாறி சினிமா படம் பார்ப்பதும் டீ.வியும் டெக்கும் என்ற நிலையில் ரமழானை கழிக்கக்கூடியவர்கள் உணர்ந்து நடக்க வேண்டும்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**24-10-2004**





## 76. பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடேறுவார்...!

மக்காவில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கும் அவரைப் பின்பற்றி நடந்த முஸ்லிம்களுக்கும் குறைஷிகளால் சொல்லொனாத் துன்பங்கள் கொடுக்கப்பட்டன. பாலைவழி மண்ணிலே பிலால் (றழி) போன்றோர் அடித்துத் துன்புறுத்தப் பட்டனர். இப்படி பல ஸஹாபாக்கள் இம்சிக்கப்பட்டார்கள். சோதனை தாங்க முடியாமல் பல ஸஹாபாக்கள் யுத்தம் செய்ய அனுமதி கேட்டு நின்றார்கள். நபிகளார் (ஸல்) அவர்கள் வேண்டாம் வேண்டாமென பொறுமையைப் போதித்தார்கள். அடியும் உதையும் அராஜகமும் குறையாத அரபுலக மக்காவி லிருந்து இறைவனின் ஆணைப்படி வெளியேற முயற்சியெடுத்தார்கள். நபிப் பட்டம் பெற்று 13ம் ஆண்டு றபிஉல் அவ்வல் மாதம் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் (வெளியேறுதல்) செய்தார்கள்.

மக்காவிலிருந்து தனது சகபாடிகளுடன் வந்த முஹம்மது நபியவர்கள் மதீனாவில் சிறந்த அமைதியான வாழ்க்கை முறையை அமைத்தார்கள். மக்கத்திலே மிஞ்சியிருந்து ஸஹாபாக்களுக்கு அவ்வப்போது அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மதீனா வந்து மாநபியவர்கள் இரண்டு வருடங்களாகியும் மக்கத்துத் தோழர்களின் பரிதாபத்தால் மனநிம்மதி பெறவில்லை. இப்போது அல்லாஹ்வின் அனுமதி "யுத்தம் செய்யுங்கள்" எனக்கிடைக்கின்றது. குட்டக் குட்ட குட்டுப் படுபவன் மடையன் என்ற வாக்குக்கு பட்டென்று ஸஹாபாக்கள் படையணியைச் சேர்த்தார்கள். என்ன விசேடம்? கண்பொத்தி விழிப்பதற்குள் 313 முஸ்லிம் வீரர்கள் அவர்களுடன் ஐந்து குதிரைகள், 70 ஒட்டகங்கள், இரண்டு போர் கவசங்கள் இருந்தன. ஆயுத தளபாடங்கள் அளவுக்கதிகம் இல்லாவிட்டாலும் அல்லாஹ்வின் மீது அளப்பெரிய நம்பிக்கை இருந்தது. போதுமடா அது போதுமடா.

முஸ்லிம்கள் மக்காவை நோக்கி படையணி திரட்டுகின்ற செய்தியை சிரியாவுக்கு வியாபாரத்திற்கு வந்த மக்காவின் பிரபல புள்ளிகளில் ஒருவரான அபூசுபியான் மக்கத்துத் தலைவர்களுக்கு எத்திவைத்தான். அபூசுபியானின் செய்தி கேட்டு குறைஷிகளின் படை மக்காவில் தயாரானார்கள். அவர்களிடம் 100 குதிரைகள், 700 போர்க் கவசம், ஒருநாளுக்கு சமையலுக்கு 10 ஒட்டகம் என்ற அடிப்படையில் அணி தயாரானது. ரமழான் மாதம் மூன்றாம் நாள் முஸ்லிம்களின் அணி மதீனாவிலிருந்து நகர்ந்து வருகின்றது. முஸ்லிம்கள் தொழுவதும் பிரார்த்திப்பதும் நோன்பு நோற்ற வண்ணமும் வந்துகொண்டிருந்தனர். குறைஷிகளின் அணி குடித்து மகிழ்ந்த வண்ணமும் ஆடியும் பாடியும் ஆக்ரோஷத்துடனும் தங்கள் அணியை வழிநடாத்தி வந்தனர். இரு சாராரும் குறிக்கோளுடன் வந்து சந்திக்கப்போகும் தளம் "பத்ர்" என்பதே இது ஒரு வர்த்தகச் சந்தை. இது மக்காவிலிருந்து சிரியா செல்லும் வழியில் 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ளது. வர்த்தகர்கள் இங்கு ஒட்டகைகளைக் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைப்பாறுவது வழக்கம். இங்கே ஒரு பெரிய கிணறும் இருந்தது. மக்கத்துக் குறைஷிப் படையினர் நீர் வசதியுள்ள இடத்தைப் பிடித்துக் கொண்டனர். நீர் வசதியில்லாத இடத்தில் முஸ்லிம்கள் கூடாரம் அடித்தனர். குடிக்கவோ, குளிக்கவோ, வுழு செய்யவோ, கால்நடைகளுக்கு நீர் புகட்டவோ வாய்ப்பில்லாத நேரத்தில் பெருமழையொன்று பொழிந்தது. முஸ்லிம்கள் பாலைவெளி மண்ணை அணைக்கட்டி தண்ணீர் குடித்து குடித்து, குளித்து, வுழு செய்து மிருகங்களுக்கு நீரும் புகட்டினார்கள். இவ்வேளை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தொழுது உருக்கமான பிரார்த்தனையொன்றில் ஈடுபட்டார்கள். அந்தப் பிரார்த்தனை அல்லாஹ்வின் உதவியை அதிசீக்கிரத்தில் ஈர்த்தெடுக்கக் காலாக அமைந்தது. அந்த துஆவைப் பார்ப்போமா?

“யா அல்லாஹ்! பெருமையும் மமதையும் கொண்ட குறைஷியர்கள் உனது றசூலைப் பொய்யாக்குகின்றனர். உன்னை எதிர்த்து சூளுரைத்து நிற்கின்றனர். நீ வாக்களித்த வெற்றியை எமக்குத் தருவாயாக. யா அல்லாஹ்! இந்தச் சிறிய கூட்டம் அழிக்கப்பட்டால் இப்பூவுலகில் எவருமில்லாத நிலை ஏற்படும். என்றும் உயிரோடு இருப்பவனே; என்றும் நிலையானவனே” எனப் பிரார்த்தித்தார்கள். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமழான் மாதம் பதினேழம் நாள் பொழுது புலர்ந்தது. இருசாராரும் யுத்தத்திற்கு தயாரானார்கள். மக்கத்துக் குறைஷிகளில் இருந்து மூவர் உத்பா, ஷைப்பா, வலீத் வந்தனர். “துணிவுள்ளோர் வாருங்கள்” என அறைகூவினர். மதீனத்து அன்ஸாரீன்கள் முன்வந்தனர். அவர்கள் வேண்டாம் வீரத்திற்குப் பொருந்தாது முஹம்மதே குறைஷி வீரர்களை அனுப்புங்கள் எனக்குரல் கொடுத்தனர். மதீனத்து அன்ஸாரீன்களை திருப்பி அழைத்து நபிகளாரின் உத்தரவுப்படி ஹம்ஸா (றழி), அலி (றழி), உபைதா (றழி) மோதினார்கள்.

மூன்று மக்கா குறைஷிகளின் நிலைமையும் படுமோசமாகி நிலத்தில் சரிந்தனர். மதீனா உபைது (றழி)யின் காலில் காயம் ஏற்பட்டது. குறைஷித் தலைவர்கள் இறந்துவிட்ட ஆத்திரத்தில் மக்காக் குறைஷிகள் ஆத்திரமுற்று ஆவேஷமுற்றனர். அதிர்ந்து போகாத முஹம்மது நபியவர்கள் போரை உஷார்படுத்தினார்கள். இந்த யுத்தத்தில் இறைவனின் உதவி நேரடியாகக் கிடைத்தது. ஆண்டவனின் அமரர்களே உதவிக்கு வந்து போராடினார்கள். புனித ரமழானில் நடைபெற்ற இந்த பத்ர் யுத்தத்தில் மக்கா குறைஷிகளின் எழுபது பேர் கொல்லப்பட்டும், 74 பேர் கைது செய்யப்பட்டனர். மதீனா முஸ்லிம்களின் சார்பாக 8 அன்ஸாரீன்களும் 6 முஹாஜிரீன்களுமாக 14 பேர் மரணித்தார்கள். பிடிபட்ட எதிரிகளை முஹம்மது நபியவர்கள் மன்னித்தும் - சிலருக்கு தண்டப் பணம் செலுத்திவரும் படியும் - பலருக்கு எழுத்தறிவைப் படித்துக்கொடுத்து விட்டுப் போகலாமென பண்பான தீர்ப்பினை வழங்கினார்கள். அரபுலக யுத்தத் தலைவர் அபூஜஹ்ல் இதில் உயிர் இழந்தார். தோல்வியுற்ற குறைஷிகள் முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினார்கள்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**31-10-2004**





## 77. தித்திக்கும் லைலதுல் கத்ர் இரவை தேடியே அடைய வேண்டும்....!

**எ**த்தனையோ இரவுகளைப் பார்த்திருக்கின்றோம். விழித்திருக்கின்றோம். ஆனால் இன்பம் கண்ட இரவுகள் எத்தனை என்பதுதான் கேள்விக்குறி. சுற்றுலா போவதெனச் சொன்னாலே போதும், சிறுவர்கள் சுறுசுறுப்பாகி விடுவார்கள். இரவு பூராக உறங்கவே மாட்டார்கள். வாழ்க்கையின் திருமண நாளை எண்ணி மகிழ்வோர் எத்தனை பேர்கள்? அதிலும் முதலிரவை நினைத்து முகம் மலர்த்து கொள்வோரும் இருக்கத்தானே வேண்டும். நூறு வீதம் சந்தோஷமாக வரவேற்போர் நூறு கோடிப்பேர் என வைத்துக்கொள்வோம். இவை அனைத்தும் சிற்றின்பங்களை சுமந்த சின்னங்களே. ஆனால் பேரின்பத்தைச் சுமந்த அற்புத இரவு இஸ்லாத்தில் அறிமுகம் செய்யப்படுகின்றது. இத்தகைய இரவு என்ன என்பது பற்றி அல்குர்ஆன் கூறுகின்றதைப் பார்ப்போம்.

“நிச்சயமாக (குர்ஆனாகிய) இதனை லைலதுல் கத்ர் என்னும் கண்ணியமிக்க இரவில் இறக்கி வைத்தோம். (நபியே!) கண்ணியமிக்க இரவு என்னவென்று உமக்குத் தெரியுமா? (அந்த) கண்ணியமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச்சிறந்ததாகும். மலக்குகளும் ஜிப்ரீல் (அலை) அவர்களும் தங்களின் இரட்சகனின் கட்டளையைக் கொண்டு சகல காரியங்களின் பொருட்டு (பூமியில்) இறங்குகின்றனர். அவ்விரவு சாந்தமிக்கது. அது வைகறைப்பொழுது உதயமாகும் வரை உள்ளது. **(அல்குர்ஆன் : 97:01:05)** இது இறைவனால் நிரூபிக்கப்பட்ட உண்மை. ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த அற்புத இரவு உள்ளடக்கிய ரமழானில் மனதால் உள்ளுணர்ந்து உணரும் பாக்கியம் கிடைக்கப் பெற்றவர்கள் உண்மையில் சிறப்புக்குரியவர்கள். ஆயிரத்திலோர் இரவு கதையை படிக்கின்றவனும் ஏதோ ஓர் உணர்வைப் பெறுவான். ஆனால், ஆயிரம் மாதத்தை விட சிறந்ததொரு இரவை அனுபவிப்பவன் புனிதமான இனிமையை உணர்வான். அந்த இரவு பற்றி ஹதீஸ்களில் தேடுவோம்.

அப்துல்லாஹ்பின் உமர் (றழி) அறிவிக்கின்றார்கள், “நபித்தோழர்களில் சிலர் லைலதுல் கத்ர் இரவு ரமழானின் கடைசி ஏழு இரவுகளுக்குள் அடங்கி இருப்பாதகக் கனவில் அறிவித்துக் கொடுக்கப்பட்டார்கள். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், (லைலதுல் கத்ர்) இரவை ரமழானில் கடைசி ஏழு இரவுகளில் உங்கள் கனவு இணைந்துள்ளது. ஆகவே அதனைத் தேடுபவர் அவ்விரவுகளில் தேடிக்கொள்ளட்டும்”. **(ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** இந்தக் கனவின் நினைவுகள் ரமழானின் பிற்பகுதியில் லைலதுல் கதர் இரவு ஏற்படும் என்பதை எடுத்தோதுகின்றது. மேலும் இதற்குத் தடையங்கள் எப்படிக் காணலாம் என நோக்குவோம். “ரமழானில் கடைசிப் பத்தில் ஒற்றைப்படை இரவுகளில் லைலதுல் கத்ர் இரவைத் தேடிக்கொள்ளுங்கள்” என நாயகம் (ஸல்) நவின்றார்கள். **(அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா (றழி) ஆதாரம் : ஸஹீஹு் ல் புகாரீ)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபையிப்னு க.்.ப் (றழி) போன்றவர்கள், லைலதுல் கத்ர் இரவு ரமழானின் 27வது இரவு இடம்பெறுவதாகச் சொல்கின்றார்கள். சூபித்துவ உலமாக்கள் லைலதுல் கத்ர் இரவை ஒரு கணிப்பீடாகக் காட்டி அதாவது லைலதுல் கத்ர் எனும் அரபு வாக்கியத்தில் ஒன்பது அட்சரங்கள் உண்டு. அந்த ஒன்பதையும் ரமழான் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டதனால் (9x3=27) மூன்றினால் ஒன்பதைப் பெருக்கி அது இருபத்து ஏழாம் நாள்தான் நிகழ்வதாகக் கூறுகின்றனர். அத்தா இப்னு அபிலுபாபா என்ற பெரியார் கூறுகின்றார்கள். ரமழான் 27ம் இரவு சமுத்திரத்தின் நீரைப் பருகியதாகவும் அது மிகவும் இனிப்பாக இருந்ததா கவும் கூறுகின்றனர். ஐயூப் இப்னு காலித் (ரஹ்) ரமழான் 27ம் இரவு கடலில் குளித்த போது தண்ணீர் மிக இனிப்பாக இருந்ததாக எடுத்துரைக்கின்றனர். லைலதுல் கத்ர் இரவு தெளிவாகவும் பிரகாசமுள்ளதாகவும் இருக்கும். உஷ்னத்தின் உச்சகட்டமோ, குளிரின் குணமோ இருக்காது. அன்றைய இரவு மிகப்பிரகாசமானதாக இருக்கும்.

அன்றைய சூரியன் சுட்டெரிக்கும் சுடரற்றுக் காணப்படும். சாந்தமிகும் பூரணச் சந்திரனைப் போன்று அலாதியான அமைதி காணப்படும். சூரியனுடன் அன்று தோன்றும் ஷைத்தானை அல்லாஹ் தடை செய்கின்றான். லைலதுல் கத்ர் இரவு பூமிக்கு அமரர்களின் அணி - வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் தலைமைத்துவத்தில் வையகத்திற்கு வருகை தருவார்கள். அன்று காலை வரை அகிலமெங்கும் அமல் செய்யும் இடமெல்லாம் அணிவகுத்து அலங்கரிப்பார்கள். நல்லமல் செய்வோருடன் வானவர் ஜிப்ரீல் (அலை) வாஞ்சையுடன் கைகொடுத்து கௌரவிப்பார். மெய்யுலகின் மேன்மைதகு ஜிப்ரீல் (அலை) கைகொடுத்த அமைப்பில் மென்மையின் சிறப்பில் மானுடரின் கண்ணில் கண்ணீர் கசியும். நல்லமல் செய்யும் ரமழானில் கடைசிப் பத்து நாட்களில்தான் இந்த அற்புத இரவின் நற்புலத் தன்மை தோன்றும். அந்தக் கடைசிப் பத்து நாட்களை எப்படி கௌரவிக்க வேண்டும்.

"ரமழானில் கடைசிப் பத்து நுழைந்து விடுமானால் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் ஒவ்வொரு இரவையும் நல்வணக்கங்களைக் கொண்டு உயிர்ப்பிப்பார்கள். தங்கள் குடும்பத்தாரை உறக்கத்திலிருந்து விழிக்கச் செய்வார்கள். நல் வணக்கங்களுக்காக பாடுபடுவார்கள். தங்கள் வேட்டியை இறுக்காமகக் கட்டிக் கொள்வார்கள். நல்லமல் செய்யத் தயாராகி விடுவார்கள்". **(அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா (றழி) ஆதாரம் : புகாரீ முஸ்லிம்)** நல்ல இரவுகளில் நலமாக கண்விழித்து நல்லமல் செய்வோம். லைலதுல் கத்ர் என்ற **சூறதுல் கத்ரையும்** அதிகமாக ஓதுவோம்; தொழுவோம்; பிரார்த்திப்போம். இன்னுமொரு லைலதுல் கத்ரை சந்திப்போம். இன்ஷா அல்லாஹ்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**07-11-2004**





## 78. ஈதுல் பித்ர் இனிய பெருநாள் ஈமானிய உள்ளங்களின் எழுச்சித்திருநாள்....!

பிரியும் நோன்பே உனக்கு ஸலாம். இன்று ரமழான் பெருநாள். அந்த நோன்புப் பெருநாளை ஈதுல்பித்ர் என்று அரபியில் அழைப்பர். இந்தப் பெருநாள் பித்தராவுடன் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வாகும். பெருநாளுக்காக வேண்டி இஸ்லாமிய இல்லங்கள் அனைத்திலும் புத்தாடை தரித்து புதுப்பொழிவுடன் திகழ்கின்ற இவ்வேளையில் நாம் கொண்டாடும் நன்னாள் பெருநாள் நானிலத்தில் நமக்கு எதை உணர்த்துகின்றது என்பதைப் பற்றி ஆய்வு செய்வோம். ஈத் என்பது பெருநாளாகவும் பித்ர் என்பது சிறப்பான கிரியையாகவும் இருக்கின்றது. இந்த ஸதகதுல் பித்ர் பற்றி தெளிவடைவதாயின், நோன்புப் பெருநாள் இரவும் பகலும் தனக்கும் தனது நிர்வாகத்தில் வழிநடாத்தப்படுவோருக்கும் அதாவது தாய், தந்தை, மனைவி, மக்கள் ஆகியோருக்குப் போதுமான உணவு, உடை, வீடு ஆகியவற்றுக்குப் போதுமான செலவு போக மிகுதியாக உள்ள பொருளிலேயே ஸகாதுல் பித்ர் (வாஜிபாகும்) கடமையாகும்.

நமது நாட்டின் மிகப்பிரதான உணவு அரிசியாகும். இதிலிருந்து ஒருவருக்கு நிறைந்த இரண்டு கொத்து வீதம் (எட்டுச் சுண்டுகள்) அந்த அமைப்பு இல்லை யெனில், இரண்டு கிலோ 420 கிராம் வழங்க வேண்டும். ரமழான் மாதம் கடைசி நோன்பன்று மாலை சூரியன் அஸ்தமித்ததிலிருந்து நோன்புப் பெருநாள் தொழுகை முடியும் வரையுள்ள நேரத்தில் இதை நிறைவேற்றுவது கடமையாகும். நோன்புப் பெருநாள் தொழுகையின் பின் அன்று சூரியன் மறைவதற்கிடையில் கொடுப்பதில் தப்பில்லை. இருப்பினும், பித்ரா அரிசியை பிந்தவைப்பது மாலை வரை மக்ரூஹ் ஆகும். அதையும் பிந்தி அரிசியை தாமதப்படுத்துவது ஹறாமாக மாற்றப்படுகின்றது. ரமழான் ஆரம்பத்திலிருந்தும் ஸதகதுல் பித்ராவை வழங்க முடியும். அப்படி வாய்ப்புள்ளவர்கள் அம்முறையையும் பின்பற்றலாம். ஸதகதுல் பித்ராவை ஊருக்கு வெளியே பங்கிடாமல் ஊரினுள்ளேயே கொடுப்பது வேண்டு மேயாகும். இந்த தர்மம் ஸகாத்தைப் பெறத் தகுதியான கூட்டத்திற்கு கொடுக்கப்படல் வேண்டும்.

ஸதகா என்ற தர்மத்தைப் பொறுத்தவரை எந்தப்பொருளிலும் கொடுக்கலாம். எவருக்கும் கொடுக்கலாம். எப்போதும் கொடுக்கலாம். ஆனால், ஸக்காத்தைப் பொறுத்தவரை எல்லோருக்கும் கொடுக்கவும் முடியாது; எல்லாப் பொருட்களிலும் கொடுப்பதுமில்லை. காலம், நேரம் கணித்தே அதனைப் பங்கிட வேண்டும். முதலில் ஸக்காத்தைப் பெற தகுதியான அமைப்புடையவர்கள் யார் என்று பார்ப்போம். (1) பக்கீர் எனும் பரம ஏழை (2) மிஸ்கீன் எனும் சாதாரண ஏழை (3) ஆமில் எனும் ஸக்காத் வேலை செய்பவர் (4) முஅல்லபதுல் குலூம் இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம் (5) உரிமைச்சீட்டு எழுதப்பட்ட அடிமை (6) கடனிறுக்க வசதியற்றவர்கள் (7) அல்லாஹ்வின் பாதையில் புனிதப்போரில் ஈடுபடுவோர் (8) பிரயாணத்தை முடிக்க வசதியற்றவர்களாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்பினரே ஸதகதுல் பித்ராவையும் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்படுகின்றார்கள். நோன்புப் பெருநாள் தினத்தில் இந்த ஸதகதுல் பித்ரைவை வைத்திருப்பதன் நோக்கம், எல்லோரும் சமமாகப் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாட வழிசமைக்கும் நோக்கமாகும். நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "பெருநாள் தொழுகைக்கு மக்கள் புறப்படுவதற்கு முன்னர் ஸதகதுல் பித்ராவைக் கொடுங்கள்" **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** முப்பது நாட்களும் காலைப்பொழுதில் பசித்திருந்து பழக்கப்பட்ட நாம் பெருநாள் காலையில் ஏதாவது ஆகாரம் புசித்தே பள்ளிக்குப்போக வேண்டும். "சில பேரீச்சம் பழங்களை உண்ணாமல் நோன்புப் பெருநாளில் (தொழுகைக்கு) நபி (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். இன்னுமொரு அறிவிப்பில் அவற்றை ஒற்றைப்பட எண்ணிக்கையில் உண்பார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. **(அறிவிப்பவர் : அனஸ் (றழி) ஆதாரம் : புகாரி)**

பெருநாள் தினத்தன்று நாயகம் (ஸல்) அவர்கள் தொழுததன் பின்னரே மக்களுக்கு உரை நிகழ்த்தும் அமைப்பை கடைபிடித்தார்கள். "நாயகம் (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் தொழுகை தொழப்புறப்பட்டுச் சென்று உரை நிகழ்த்துவதற்கு முன் தொழுதார்கள். **(அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) ஆதாரம் : புகாரி)** பெருநாள் தொழுகை காலையில் மிகநீண்ட நேரத்தின் பின்னர் தொழுவதில்லை. ஒரு குறிப்பிட்ட நேரம் காலையில் சென்றதன் பின்னால் இந்தத் தொழுகையைத் தொழ வேண்டும். "ளுஹா எனும் உபரி தொழுகை நேரத்தில் இந்நேரம் நாங்கள் நபி (ஸல்) காலத்தில் (பெருநாள்) தொழுது முடித்த விடுவோம்" என்று அப்துல்லாஹ் பின் பஷ்ர் (றழி) குறிப்பிட்டார்கள். **(ஆதாரம் : புகாரி)** பள்ளிவாயலுக்குப் பெருநாள் தொழுகை தொழுவதற்கு வரும் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பாதையினால் உள் நுழைந்து இன்னொரு பாதையினால் வெளியேறுவார்கள். இதில் பல நன்மைகளைக் கருத்திற் கொண்டவர்களாகவும் இரு புறத்தில் இருக்கின்ற வசதி குறைந்த மக்களுக்கு வாரி எதையும் வழங்கி விடலாம் என்ற நல்லெண்ணமும் தொக்கி இருந்தது.

"பெருநாள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் "போவதற்கும் வருவதற்கும்" பாதைகளை மாற்றிக் கொள்வார்கள். **(அறிவிப்பவர் : ஜாபிர் (றழி) ஆதாரம் : புகாரி)** அன்பும் பண்பும் அணிகோர்த்து நிற்கின்ற இந்தப்பெருநாளில் நல்லதைச் சொல்வோம்; நமது உறவினர்களைச் சந்திப்போம்; புத்தாடையுடன் தோன்றும் நாம் நமது சிறுவர்களை அன்புடன் நோக்கிடுவோம்; ஏழைச் சிறுவர்களுக்கு உதவி செய்வோம்; அநாதைச் சிறுவர்களின் தலையைத் தடவி ஆறுதல் சொல்வோம்; சிறைச்சாலையில் இருப்பவர்களை சென்று பார்ப்போம்; ஆஸ்பத்திரிகளில் நோயினால் முடங்கிக் கிடக்கும் மக்களைச் சென்று சேமநலம் விசாரிப்போம். புதிய ஆடைகள் அணிவதுபோல் புதிய எண்ணங்களை மனதில் புதிர்செய்வோம். பழைய ஆடைகளைக் களைவது போல் நமது தீய எண்ணங்களைக் களைவோம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**14-11-2004**





## 79. சண்டையிட்டு வாழ்வதை விட ஒன்றுபட்டு வாழ்வதே மேல்.....!

**இ**ஸ்லாமிய உம்மத்தாகிய நாம் உலகில் ஒற்றுமையாக சேர்ந்து வாழ வேண்டும். நமக்குள்ளேயே பிரிவினைகளை வளர்த்துக்கொள்வது எமது முன்னேற்றத்தைத் தடைப்படுத்தக்கூடியதாக மாறிவிடும். குடும்பங்களிலே இருக்கின்ற சண்டைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல் சமூக ரீதியாக அரசியல், மார்க்கம் என்பவற்றில் பிளவுபட்டு வாழக்கூடாது. சமூகத்தில் நாளொரு வண்ணம் ஏற்படும் கசப்பான நிகழ்வுகள் நம்மை சமூகரீதியாக தனிமைப்படுத்துவதைக் காண்கின்றோம். ஒவ்வொரு குழுக்களாகப் பிளவுபட்டு ஏசிப்பேசி அடிதடிகளில் இறங்கி நோடிஸ்களைப் பறக்க விட்டு நொந்துபோய் வாழும் சமூகமாக நம்மை மாற்றியமைக்கக் கூடாது.

ஒவ்வொரு முஸ்லிமாலும் பல சேவைகள் சமூகத்திற்கு நடைபெறவேண்டியிருக்கின்றது. முஸ்லிம் சமுதாயத்தினுள் பல்லாயிரம் தேவைகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்ற போது நாம் சண்டையிட்டு அணிதிரட்டி அடிபிடிகளில் இறங்கி நீதிமன்றங்களில் நீண்டகாலம் நிம்மதியற்று அலைந்துதிரிவது முஸ்லிம் சமூகத்தின் முடக்கமாக அமைந்துவிடும். அருள்மறையில் அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்.... "இன்னும் நீங்கள் வெற்றிபெறுவதற்காக நன்மையைச் செய்யுங்கள்" **(அல்குர்ஆன் 22:77)** முஸ்லிம்கள் இன்றுபடும் துன்பங்களும் துயரங்களும் வாயினால் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லாமல் இருக்கின்றன. உலகளாவிய ரீதியில் போர் அனர்த்தம், தீவிரவாதம் என்றெல்லாம் பாதிக்கப்படுபவர்கள் முற்றிலும் முஸ்லிம்களாகவே இருக்கின்றனர். தேவையறிந்து சேவை செய்தால் நிச்சயம் சமூகத்தில் ஒரு விழிப்புணர்ச்சியைக் காணலாம்.

"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதாரர் ஆவார். அவர் அவருக்கு அநீதி இழைக்க மாட்டார். அவரை ஆதரவின்றி விட்டுவிட மாட்டார். யார் தம் சகோதரரின் தேவையில் (தேவையை நிறைவேற்றுவதில்) ஆகிவிடுகிறாரோ அல்லாஹ் அவரின் தேவையில் (தேவையை நிறைவேற்றுதில்) ஆகிவிடுகின்றான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தைப் போக்கி அவரை மகிழ்விக்கின்றாரோ அவருக்கு கியாமத் நாளின் கஷ்டங்களில் ஒன்றைப்போக்கி அல்லாஹ் அவரை மகிழ்விப்பான். யார் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைத்தாரோ அவரின் குறைகைள கியாமத்நாளில் அல்லாஹ் மறைப்பான் என நாயகம் (ஸல்) நவின்றார்கள். **(அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** நோன்பு மாதம் வந்துவிட்டால் எங்காவது ஒரு பிரதேசத்தில் இனவாதம், குழப்பம், மதக்கலவரம் என்றெல்லாம் பத்திரிகை வாயிலாகக் கேள்விப்படுகின்றோம். இரவு நேரத்தில் விழித்திருந்து அமல்செய்ய வேண்டிய ரமழான் மாதம், பாதுகாப்புக்காகப் பதுங்கி வாழ நேரிடும். பயங்கரங்களை நினைக்கும் போது வேதனையாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போல் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் ஸலாம் கூறி சந்தோசமாக வாழப்பழக வேண்டும். கசப்புணர்வுகளை மறக்க வேண்டும். கைகொடுத்து முஸாபஹாச் செய்ய வேண்டும். அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள், (யெமன் வாசிகள் வந்தபோது) தோழர்களே! உங்களிடம் யெமன் வாசிகள் வந்துள்ளனர். அவர்கள்தான் முதன் முதலாக முஸாபஹாவைக் கொண்டு வந்தனர். (முஸாபஹாச் செய்யும் வழக்கத்தை முதன்முறையாக அறிமுகப்படுத்தினர்). **(அறிவிப்பவர் : அனஸ் (றழி) ஆதாரம் : அபூதாவூத்)** யெமன் வாசிகளிடமிருந்து இந்த அழகிய அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டாலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதனை ஆதரித்தார்கள். அது மாத்திரமன்றி, அத்தகைய நல்ல பழக்கத்தை உற்சாகப்படுத்தினார்கள். சமூகத்தில் முகம்மாறிப் போவதை விட ஒழிந்து ஒழிந்து கருத்துகளைக்களைப் பரிமாறுவதை விட உண்மையான மனதுடன் ஒருவரையொருவர் நேசித்து மனப்பூர்வமாக ஸலாம் கூறுவோம்; மகிழ்ச்சியைத் தெரிவிப்போம்.

“இரண்டு முஸ்லிம் சந்தித்து இருவரும் முஸாபஹாச் செய்துகொள்வார்க ளானால் அவர்கள் இருவரும் பிரிவதற்கு முன்பே அவ்விருவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன” என பார் போற்றும் பயகம்பர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **(அறிவிப்பவர் : ஹஸ்ரத் பராவு (றழி) ஆதாரம் : அபூதாவூதி)** அன்பும் பண்பும் பாசமும் முஸ்லிம் உம்மத்துக்களின் மத்தியில் மிளிர வேண்டும். அன்பினால் உந்தப்படும் சமுதாயம் முகத்தை முத்தமிட்டுக்கொள்வதும் இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. “ஹஸ்ரத் ஜெயிது ஹாரிதா (றழி) வெளியூரிலிருந்து மதீனா வந்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என் வீட்டில் இருந்தார்கள். அப்பொழுது அவர் வந்து கதவைத் தட்டினார். உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எழுந்து தங்கள் ஆடையை இழுத்தவர்களாக வாயிலுக்கு விரைந்து சென்றார்கள். அவரை (அன்போடு வரவேற்று) முஆனகா (கட்டி அணைத்து ஆலிங்கனம்) செய்தார்கள். அவரை முத்தமிட்டார்கள்.

இஸ்லாமிய அன்பின் இதயங்களே புனித ரமழான் மாதம் மலர்ந்த உள்ளத்துடன் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் வீற்றிருக்கின்றோம். இந்த இனிய சந்தர்ப்பத்தில் சகோதரத்துவ வாஞ்சையோடு பழகுவோம். அனைவருடனும் அன்புள்ள மக்களாகத் திகழுவோம். பள்ளிப்பாகுபாடு, ஊர்ப் பாகுபாடு, தெருப்பாகுபாடு, இயக்கப்பாகுபாடு எல்லாவற்றையும் மறந்து கலிமாச் சொன்ன ஒரே முஸ்லிமாகத் திகழ்வோம். மற்ற சமூகத்தின் மத்தியிலே ஒற்றுமையின் சிகரமாக ஓரணியில் திகழ்வோம்; திருந்துவோம்; தீயென ஒழிப்போம்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**21-11-2004**





## 80. மரண வீட்டில் ஒப்பாரி வைத்து அழுவது மார்க்கத்துக்கு முரணான செயலாகும்....!

உயிரின் மேல் இந்த உலக மக்களாகிய நாம் வைத்திருக்கும் பற்று வேறு எதிலும் வைக்கவில்லை என்றே கூறலாம். அதனால்தான் ஒவ்வொரு மரண வீடும் அழுகைக்கும் கண்ணீருக்கும் ஆராத் துயரத்திற்கும் ஆட்கொண்டு காணப்படுகின்றது. கண்ணீர் வடிக்காத மரண வீடுகள் இல்லையென்றே சொல்லலாம். கருணை நபியின் பேரர்கள் இமாம் ஹஸன் (றழி), இமாம் ஹுஸைன் (றழி) யின் மறைவுக்கும் மக்கள் கண்ணீர் விடத்தான் செய்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள் மரணித்த போது மண்ணும் அழுதது; விண்ணும் அழுதது; படித்த கண்ணும் அழுதது; கண்ணீர் வடித்தது என்று கண்ணீர் கதையே தொடர்கின்றது.

முழு இந்திய நாட்டை ஆட்டிப்படைத்த சந்தணக்கடத்தல் வீரப்பன் கொலை செய்யப்பட்டு மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்ட போது அவரது சகோதரி - மனைவி - பிள்ளைகள் கூட கண்ணீர் விட்டு கலங்கத் தவறவில்லை. மானிட இயல்பின் தன்மை மரணத்தின் போது அழுவதாகும். ஆனால் அழுவதை எப்படி அர்த்தம் கொடுக்க வேண்டும் அல்லது ஆக்கிக்கொள்ள வேண்டும் என இஸ்லாம் இனிமையாகக் கூறிவைக்கின்றது. “நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மகன் இப்றாஹீமிடம் சொன்னார்கள், அப்போது அவர் மரணத் தருவாயில் இருந்தார். அவரைப் பார்த்து நபி (ஸல்) அவர்களின் இரு கண்களிலும் கண்ணீர் மல்கியது. அப்பொழுது அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (றழி) அவர்கள் தாங்களுமா அழுகிறீர்கள்? யாரசூலல்லாஹ் எனக்கேட்டார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவ்பின் மகனாரே இது கிருபையாக இருக்கும் என்றார்கள். பின்னர் மீண்டும் அண்ணலாரின் கண்களில் கண்ணீர் கசிந்தது.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “நிச்சயமாக கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. உள்ளம் கவலைப்படுகின்றது. எங்களின் இரட்சகன் பொருந்திக்கொள்ளக்கூடியதைத் தவிர வேறு எதனையும் நாங்கள் கூற மாட்டோம். நிச்சயமாக இப்றாஹீமே உமது பிரிவின் காரணமாக நாங்கள் கவலையடைந் தவர்களாக உள்ளோம் என்றனர். **(அறிவிப்பவர் : அனஸ் (றழி) ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி)** இத்தகைய அறிவூட்டும் உபதேசம் நல்ல படிப்பினையைத் தருகின்றது. சொந்த மகனின் பிரிவின் போது சோகத்தை வெளிப்படுத்திய நபிகளாரின் கண்ணீர்க் கதை இதயத்தைப் பிளிகின்றது. இவ்வாறுதான் துயரத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டி நிற்கின்றது. இது மட்டுமல்ல இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வியலில் வளம் காணும் நாம் இன்னும் பார்ப்போம். “நாயகம் (ஸல்) அவர்களின் மகளின் மகனை (பேரனை) நபி (ஸல்) அவர்களிடம் காட்டப்பட்டது. அக்குழந்தை மரணத்தருவாயில் இருந்தது. அதனைக்கண்டு நபி (ஸல்) அவர்களின் இரு கண்களிலும் கண்ணீா வடிந்தது. அப்பொழுது ஸ.'.த் (றழி) அவர்கள் இது என்ன யாரசூலல்லாஹ்! தாங்களும் அழுகின்றீர்களே? எனக்கேட்டர்ர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இது அல்லாஹுத்தஆலா தன் அடியார்களின் இதயங்களில் ஏற்படுத்தியுள்ள கிருபையாகும். அல்லாஹ் தன் அடியார்களில் கிருபையுள்ள வர்களின் மீதுதான் கிருபை காட்டுகின்றான் எனப் பகர்ந்தார்கள். **(அறிவிப்பவர்: உஸாமா பின் ஸைது (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையை அடியொட்டி நடந்த ஸஹாபாக்கள் ஒவ்வொரு செயலையும் பார்த்து, கேட்டு, தெரிந்து, பின்பற்றி வந்தார்கள். கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றவில்லை. கருத்தை அறிந்து ஆதாரபூர்வமாக அதனை விளக்கமாப் பெற்று பின்பற்றினார்கள். அதனால்தான் பேரப்பிள்ளையின் பிரிவின் போது கண்கலங்கி கண்ணீர் வடித்து நின்ற போது அந்த சோகமான கட்டத்தில் இடம், பொருள் பாராது எதையும் முகம்பிளக்கக் கேட்டுத் தெளிவுகாணும் நோக்குடன் தாங்களுமா அழுகின்றீர்கள் யாரசூலல்லாஹ் என்று கேட்டார்கள்.

அப்படியாயின், எங்காவது ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் அழுவதற்கும் கதறுவதற்கும் வரையறை கூறியிருக்க வேண்டும். வரையறையின் கட்டமைப்புக் களை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் அவர் கேட்டிருக்கலாம். அல்லது கதறுதலையும் ஒப்பாரியையும் அழுகைக்குள்ளேயே அடக்கிக் கொண்டதனால்.... அந்த அர்த்தத்தில் கூட கேட்டிக்கலாம். எதற்கும் மாநபி (ஸல்) அவர்களின் மார்க்கத் தீர்ப்பு என்ன? என்பதை சற்று நோட்டமிட்டால் ஓரளவு தெளிவு பிறந்துவிடும்தானே? பார்ப்போம். "நாயகம் (ஸல்) அவர்கள் (தங்கள் அன்ஸாரித் தோழர்) ஹஸ்ரத் ஸ.்.த் பின் உபாதா (றழி) அவர்களின் உடல் நலத்தை விசாரித்தார்கள். அப்பொழுது அவர்களுடன் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (றழி) ஹஸ்ரத் ஸஹ்த் பின் அபீ வக்காஸ் (றழி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி) ஆகிய நபித்தோழர்களும் சென்றிருந்தார்கள். ஸ.்.த் பின் உபாதா (றழி) அவர்களின் உடல்நிலை மிக மோசமடைந்தது. மரணம் நெருங்கிவிட்டதைப் பார்த்து நாயகம் (ஸல்) அழுது விட்டார்கள். அதனைப் பார்த்து அங்கிருந்த மகக்ளும் அழுதுவிட்டார்கள்.

அப்பொழுது நாயகம் (ஸல்) கூறினார்கள், "கேட்டுக்கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கண்களில் கண்ணீர்த் ததும்புவது கொண்டோ உள்ளத்தில் கவலை ஏற்படுவது கொண்டோ உங்களை வேதனை செய்ய மாட்டான். மாறாக இதற்காக (நாவின் புலம்பல்களுக்காகவும் பேச்சுக்காகவும்) வேதனை செய்வான். அல்லது இரக்கப்பட்டு மன்னிப்பான் இவ்வாறு கூறும் போது அண்ணலார் தங்கள் நாவின் பக்கம் சுட்டிக்காட்டினார்கள். **(அறிவிப்பவர் : இப்னு உமர் (றழி) ஆதாரம் : புகாரி முஸ்லிம்)** ஓலமிட்டு அழுவதை இஸ்லாம் வெறுக்கின்றது. தலையில் அடிப்பது, சட்டையைக் கிழிப்பது, ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைப்பது, ஆண்டவனே உனக்குக் கண்ணில்லையா?; வேறு யாரும் கிடைக்கவில்லையா? இவரை ஏன் எடுத்தாய்? என்றெல்லாம் அழாமல் வாழ்வது தான் இஸ்லாமாகும்.

**நன்றி : மித்திரன் வாரமலர்**
**28-11-2004**





# கல்வித் தலங்களுக்கும் கருத்துரைகளுக்கும் களம் அமைத்தவர்.....



காத்தான்குடியில் இரண்டாவதாக ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலை 1980ல் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் முயற்சியோடு காத்தான்குடி 6ம் குறிச்சியில் ஆரம்பிக்கப்பட்டு ஆசிரியராகக் கடமையாற்றிய மௌலவி பௌஸ் இல்ல விளையாட்டுப் போட்டியின் போது .......



காத்தான்குடி 5ம் குறிச்சியில் இக்பால் சனசமூக நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலையை மௌலவி பௌஸ் நடாத்தியதோடு, அதன் பிரதான விழாவில் பங்கேற்கும் காட்சி. படத்தில் கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் பரீத் மீரா லெப்பை காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலப்பிட்டியவில் அல்மத்ரஸதுல் அஷ்அரிய்யாவை முன்னேற்றப் பாதையில் நடாத்தி முதலாவது நடைபெற்ற மீலாத் விழாவை மௌலவி பௌஸ் தலைமை தாங்கி நடாத்துவதையும் மாணவர்களின் நிகழ்ச்சியையும் காணலாம்.




பாணந்துறை ஹேனமுல்லை அல்முபாறக் குர்ஆன் மத்ரஸாவை மேம்பட நடாத்தி 1996ம் ஆண்டு முதலாவது நடைபெற்ற பரிசளிப்பு விழாவை மௌலவி பௌஸ் நெறிப்படுத்துவதைக் காணலாம். படத்தில் எம்.எம். பைஸர் மகீன், அல்ஹாஜ் எம்.ஜே.எம். புவாட், வக்பு சபை மௌலானா, முஸ்லிம் விவகாரத் திணைக்கள பணிப்பாளர் அல்ஹாஜ் மீரா மொஹிடீன் மௌலவி ஆகியோர்...








அளுத்கமை தர்காநகரில் நடைபெற்ற மாபெரும் மீலாத் விழாவில் மௌலவி பௌஸ் பிரதம பேச்சாளராக உரை யாற்றுவதையும், சட்டத்தரணி எம். இஸ்மாயில் தலைமை தாங்குவதை யும் காணலாம்.




பாணந்துறை கெசெல்வத்தை மன்பஉல் நளீமிய்யாவில் நடைபெற்ற மீலாத் விழாவில் மௌலவி பௌஸ் உரை யாற்றுவதையும் அருகில் சிங்கள மொழியின் சிகரம் - சிறப்புப் பேச்சாளர் அல்ஹாஜ் ஷாஹுல் ஹமீட் அவர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாணந்துறை சரிக்கமுல்லை யூத் ஸ்போட்ஸ் கிழப்பினால் 1998ம் ஆண்டு நடாத்திய மீலாத் விழாவில் விசேட பேச்சாளராக மௌலவி பௌஸ் உரையாற்றுவதையும் பிரதேச சபைத் தலைவர் அம்றாஸ் ஏ. மஜீட், அல்ஹாஜ் அஹமட் புவாட், முன்னாள் காதிநீதவான் நிஸ்வான் ஆசிரியர் ஆகியோருடன் பௌத்த மதப்பெரியார்களும்....



1997ம் ஆண்டு மானா. மகீன் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரதி விழாவும் நூல் வெளியீட்டு வைபவத்தையும் மௌலவி காத்தான்குடி பௌஸ் தர்ஜுமதுல் குர்ஆன் மூலம் தொடங்கி வைக்கையில்....

படங்கள் ஒருங்கிணைப்பு : எம். முனாஸ் கனி
படஅமைப்புக்கள் - எம்.ஆர்.எம். யாசீர் - எம்.ஐ.எம். அப்துல் காதர் (மாமா)
(அல்முபாறக் மத்ரஸா நிர்வாகக் குழு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேசும் நெஞ்சங்கள்.....

தத்துவ வித்தகர் மௌலவி காத்தான்குடி பௌஸ் ஷர்கி அவர்கள் தரும் இஸ்லாமிய போதனைகள் கருத்துக்கள் அனைத்தும் மித்திரனின் மகுடத்தில் மாணிக்கக் கல் பதித்தது போல் ஜொலிக்கிறது. ஏனெனில், அந்த அளவுக்கு எல்லா மக்களுக்குமே அது பயன் தருகின்றது. பாராட்டுக்கள்.

**பாதிமா ரிஸானா ராஸிக்**
**வத்தேகெதர**
**மித்திரன் வாரமலர் 01-08-2004**

## பேசும் நெஞ்சங்கள்.....

வாரந்தோறும் வசந்தம் வீசும் வார மலரே நீ வழங்கிய "நாகரீகமாய்ப் பேச நினைத்து நபி வழி மாற வேண்டாம்" என்ற இஸ்லாமிய ஆக்கம் அறிவையூட்டி ஆலோசனை அளிக்கக்கூடியதாக அமைந்திருந்தது.

**ஏ.எம். இப்திகார், ருமைஸா,**
**மஹ்பூப், ஹூ ஸைமா, ருமானா, ருஸ்தா**
**ஏதாளை**
**மித்திரன் வாரமலர் 15-08-2004**

## ஆசிரியரின் பிறநூல்கள்

- **வைகறை வாசம்** (கவிதை நூல்)
- **மார்க்கத்தின் மனக்கதவு** (கட்டுரை நூல்)
- **முஅத்தினின் முறைப்பாடு** (கவிதை நூல்)
- **காதிகோட்** (கவிதை நூல்)



# கட்சிதமாகக் காரியமாற்றிய கணனி வடிவமைப்பாளர்

**A. H. Ahamed Aslam**
{(Dip. in Graphic Designing (SLIOP)}

ஏ.எச்.அஹமட் அஸ்லம் இவர் 13-03-1985ம் ஆண்டு பிறந்தார். வசீகரமான தோற்றமுடைய இவர் சிறுவயதிலேயே சிறந்த குணாதி சயங்களோடு காணப்பட்டார்.

அப்துல் ஹலீம் - சித்தி மலீஹா ஆகியோரின் முதல் மகனான இவரை முதன்மை இடங்களில் வைத்துப் பார்க்கவே பெற்றார் ஆசைப்பட்டனர். கனவுகள் கைகூடவே செய்தது. ஆரம்பக் கல்வியை பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் ஆரம்பித்து க.பொ.த (உ/த) வரை அஸ்லம் இங்கேயே பயின்றார்.

கணனி வரைவு (Graphic Designing) டிப்ளோமா பாடத்தை இலங்கை அச்சகக் கூட்டுத்தாபனத்தில் முடித்துக்கொண்டார். அத்துடன், ஐ.ரி.என். (ITN) தொலைக்காட்சி தமிழ்செய்திப் பிரிவு கணனியாளராக பகுதி நேரத்தைப் பாரமெடுத்தார். அதேபோல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (SLBC) ஆங்கிலச் செய்தி கணனியாளராகவும் லைசியம் (LYCEUM) சர்வதேச பாடசாலையில் முழுநேர கணனியாளராகவும் கடமையாற்றுகின்றார்.

அஸ்லம் சிறிய வயது முதல் அல்குர்ஆனை என்னிடத்திலேயே ஓதிமுடித்த அவர் அமைதி, அடக்கம், நற்பண்புடையவர். அத்தகைய நற்குணத்தினால் எனது புத்தகங்களை வடிவமைத்துத் தர முன் வந்தார். அட்டைப் படங்கள் முதல் முதல் ஐந்து புத்தகங்களையும் அழகாக டைப் செய்தார். வைகறை வாசம், காதிகோட், மார்க்கத்தின் மனக்கதவு, முஅத்தினின் முறைப்பாடு, போதனைப் பொக்கிஷம் ஆகிய நூற்களாகும்.

ஓய்வு கிடைக்கின்ற நேரங்களையெல்லாம் எனது நூல் முயற்சிக்காக பயன்படுத்திய அன்னாருக்கு எனது முழுமையான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவர் வாழ்வு சிறப்பாகப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வண்ணம்,

**மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி),**
பேஷ் இமாம், அல்முபாறக் ஜும்ஆ மஸ்ஜித்,
ஹேனமுல்லை, பாணந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வானொலி முஸ்லிம் சேவை கண்ட வளமுறு எழுத்தாளர்....!

இஸ்லாமிய தஃவா பணியுடன் இலக்கிய பணியும் செய்கின்ற உலமாக்களை இந்தியத் திருநாட்டில் அதிகமாகக் கண்டிருக்கின்றேன்; கதைத்திருக்கின்றேன்; கலந்து ஆலோசித்திருக்கின்றேன். அத்தகைய பாரம்பரிய பொறுப்புக்களுடன் இலங்கையில் பங்களிப்புச் செய்யக்கூடிய உலமாக்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இருக்கின்றனர். அந்த வரிசையில் இடம்பிடித்த ஒரு சிறந்த எழுத்தாளர் தஃவா பணியாளர் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இஸ்லாமியப் பணியிலும் இலக்கியப் பணியிலும் காலூண்டி வருகின்றார். அவரின் குரல் வளத்தையும் ஆக்கத் திறனையும் கருத்திற்கொண்டு நாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் பணிப்பாளர் வி.ஏ. கபூர், பணிப்பாளர் அல்ஹாஜ் இஸட்.எல்.எம். முஹம்மத் ஆகியோர் காலம் தொட்டு இன்று வரை பல துறைகளிலும் அவருக்கு சந்தர்ப்பங்கள் கொடுத்து ஊக்குவித்திருக்கின்றோம்.

அவரின் சன்மார்க்க பயான்கள் பேருவளை நபவியத்ததுல் காதிரிய்யா இயக்கத்தினால் மீலாத் சிறப்புப் பேச்சு பாகம் 1, பாகம் 2 என வெளியிட்டு பெருமளவு விற்பனை செய்யப்பட்டது. அது மாத்திரமன்றி, சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா? என்ற சொற்பொழிவை ஒலிப்பதிவு நாடாவில் ஆக்கப்பட்டு பலப்பிட்டிய இஸ்லாமிய கலாசார நலன்புரி சங்கத்தினரால் வெளியீடு செய்யப்பட்டு அதனால் கிடைத்த பணவசூல் அகதிகளின் கல்விக்கு வழங்கப்பட்டது.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்று பல்வேறு ஊடகங்களில் பங்களிப்புச் செய்யும் மௌலவி காத்தான்குடி பௌஸ் மித்திரன் வாரமலரில் தொடர்ந்து எழுதிய தனது ஆக்கங்களை போதனைப் பொக்கிஷம் எனும் தலைப்பில் இங்கு தந்துள்ளார். அன்னாருக்கு எனது பாராட்டுக்கள்; பிரார்த்தனைகள். வாங்கி வாசிக்கும் உள்ளங்களை ஆசிகூறி நேசிக்கின்றேன

இவ்வண்ணம்,
**சொல்லின் செல்வன் அல்ஹாஜ் எம்.இஸட்.எம். அஹமட் முனவ்வர்**
மூத்த ஒலிபரப்பாளர் - முன்னாள் முஸ்லிம் சேவை மேலதிகப் பணிப்பாளர்

TYPESET & COVER PAGE DESIGNED BY : A. H. AHAMED ASLAM
VISUAL COMPUTER SYSTEM # 391, SCHOOL ROAD, HENAMULLA, PANADURA.
HOTLINE : 0714-171585 / E-MAIL : visualcomsystem@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org